# தமிழரசு

அக் 16, 1972

விலை 40 காசு



# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு –வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர்-3 இதழ்-8.







இனிய கீதம் பாடும் இசைக்கல்லூரி

முதல்வர் தரும் 'குரலொலியம்'

சமுதாய நலத்திட்ட

சொற்பொழிவுகள்

வாரவிழாச் சொற்பொழிவுகள்

தமிழ்நாட்டில் ஒரு புத்தக மாமலை

காவிரியின் சீரமைப்பு

கண்

புலிவேட்டை



விலை 40

# நம் தாய்த்திருநாட்டில் செல்வம் பெருகி வறுமை மாய்ந்து அமைதி தவழ்ந்து அறிவு பரவி ஆற்றல் மிகுந்திட.....

அக்டோபர் இரண்டாம் நாள்—அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள். சமுதாய நலத் திட்டங்களை நாடெங்கும் தொடங்கிவைத்து அதனைத் தொடர்ந்து செயல்படுத்த நாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட பெருநாளும் அந்தத் திருநாளே!

சமுதாயம், தனி மனிதர்களின் கூட்டு; தனி மனிதர்களால் உருவாக்கப்படுகிறது. சமுதாயத்தின் மொத்த வாழ்வு பற்றியே நாம் கவலைப்படுகிறோம் எனினும், அந்த வாழ்வுக்கு ஒவ்வொரு தனி மனிதனும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் செயல்—ஒழுக்கம்—அரசியல் பண்பாடு—பொதுத் தொண்டில் உள்ள ஆர்வம்—மனத்தூய்மை—பேச்சு—எழுத்து—அறிவு—ஆற்றல்—அனைத்தும் துணை நதிகளாகிச் சமுதாயமெனும் காவிரிப் பெரு நதியாகப் பெருக்கெடுத்து—வாழ்வில் வளமும் நலனும் சேரக் கிளைநதிகளாக, வாய்க்கால்களாகப் பிரிந்து கடமையாற்றுகின்றன.

செயல், தன்னலத்திற்காக அமைந்து—ஒழுக்கம் ஊருக்குச் செய்யும் உபதேசமாக இருந்து—அரசியல் பண்பாடு, எரிச்சலுக்கு ஆளாகி அழிந்துபட்டு—பேச்சிலும் எழுத்திலும் தரக்குறைவுகள் தலையெடுத்து அறிவும் ஆற்றலும் பழி வாங்குவதற்கே பயன்படுத்தப்பட்டு — பொதுத் தொண்டில் ஆர்வம் என்பது வெளி வேடமாகி விடுமேயானால், சமுதாய நலத் திட்டங்களுக்கென அளவற்ற பொருளை அள்ளி வழங்கினாலும், அதனால் கிடைக்கும் பயன் மிகச் சொற்பமாகவே போய்விடும். அதனால் தான் அண்ணல் காந்தியடிகள் தூய்மையான மனத்துடன் இந்தப் பணியிலே புகுந்திட வேண்டுமென விரும்பினார்.

வெறும் சொல் அளவிலே நின்று விடாமல் சுதந்தரம் பெற்ற நாட்டின் ஒளிமிகுந்த வாழ்க்கை அந்த நாட்டிலுள்ள கிராமப்புறத்து மக்களின் சுதந்தரச் சுகவாழ்விலிருந்துதான் உதயமாகிட வேண்டும் என்பது அவர் கருத்து. மக்களாட்சியின் மாண்புக்கே வழி வகுக்கக் கூடியது அடித்தள மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாக வைத்துக் காரியங்களை மேற்கொள்வதுதான் என்றும் திடமாக எடுத்துக் கூறி, அந்தப் பணிக்குத் தன்னை ஒப்படைத்துக் கொண்டார்.

ஆன்றோர்கள் உருவாக்கிய பழந்தமிழ் இலக்கியங்களிலும், பிற்காலக் கல்வெட்டுகளிலும், கிராம மக்களின் நலன்களையும், உரிமைகளையும் காக்கவும், அவர்தம் வாழ்வை வகுத்துக் கொள்ளவும் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததைக் கண்ணுறும் தமிழர்களாகிய நமக்குக் காந்தியடிகளின் தத்துவம் கற்கண்டாய்த் தேன்பாகாய் இனிப்பதில் வியப்பேதும் இல்லையல்லவா?

சமுதாயத்தில், எல்லாக் கட்டங்களிலும் வளம் சேர்க்கச் சமுதாய நலத்திட்டப் பணிகள் பயன்படுகின்றன. அந்தப்பணியினை மெத்த ஆர்வத்துடன் செய்திடும் ஊராட்சிகளை மேலும் ஊக்கப்படுத்தவே இந்த ஆண்டும் அதற்கான வார விழாவை நடத்திட முன் வந்துள்ளோம்.

இலட்சிய ஆர்வமும், ஆக்கமும், ஊக்கமும் நிறைந்த நடைமுறைப் போக்கு—இன்று ஊராட்சி மன்றங்களிடையே தோன்றியுள்ளன. இந்தப் பேரொளி நின்று நிலைக்கும்போது, ஏற்றத் தாழ்வற்ற வளம்நிறைந்ததொரு சமுதாய அமைப்பை நம்மால் உறுதியாக உருவாக்க முடியும்.

கடந்த ஆண்டுகளில் வேளாண்மை வளர்ச்சிக்கெனப் புதிய ஆய்வுகள் நடத்தி விஞ்ஞான நுட்பங்களைப் பயன்படுத்தி மிகு விளைச்சலுக்கான ஆக்க வேலைகளில் முனைந்து நின்ற ஊராட்சி மன்றங்கள் என்றும் நமது பாராட்டுக்குரியன. ஊர் மக்களிடையே, பசுமைப் புரட்சி செய்வது மட்டுமின்றி—அறிவுப் புரட்சியும் செய்து அவர்களை மனவளமுள்ளவர்களாக்—சுகாதார வசதிகளைப் பெறுவதில் முன் நிற்பவர்களாக ஆக்குகின்ற முயற்சிகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

தொடர்ந்து தொண்டாற்ற—இன்று இந்த விழாவை நான் தொடங்கி வைக்கிறேன்.

முதல்வர் கலைஞர்

மேற்கொள்ள வேண்டிய புதிய வேலைகள் பற்றியும், ஊராட்சித் திட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சிறப்பிடம் பற்றியும், வட்டார அளவிலும்—மாவட்ட அளவிலும் இவ்விழாவின் போது விரிவான விவாதங்கள் நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறேன். அந்தந்த வட்டாரங்களின் வளர்ச்சிக் கேற்பச் செயல்படத் தக்க கருத்துகளைத் திரட்டி மேற்கொள்வதற்கான வழிவகையும் ஆராயப்பட வேண்டும்.

சமுதாயம் ஒன்றுபட்டு நிற்கும் போது அனைவருக்கும் பயன்கிட்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் சமுதாயம் முழுமையும் இவ்விழாவில் பங்குகொள்ளத் தக்கவாறு எல்லாப் பிரிவினரையும் கவரக் கூடிய—நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகளோடு இவ்விழா நிறைவுபெற ஊராட்சித் தலைவர்களும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தங்கள் ஒத்துழைப்பைத் தந்திடுமாறு ஆர்வத்தோடு பெரிதும் வேண்டுகிறேன்.

மக்களின் ஆர்வத்தோடு அரசாங்க அலுவலர்களின் திட்டமிட்ட பணியும் இணையும் போது வளர்ச்சி மேலோங்குகிறது.

பொறுப்பின்றிப் பதவியோ அதிகாரமோ இல்லை.

அதிகாரங்களைவிடப் பொறுப்புகள்தான் முக்கியமானவை !

அதிகாரங்கள் தேய்ந்து, பொறுப்புகள் தன்னியல்பாகி விடுவதே உண்மையான மக்களாட்சி !

பதவிகள், பணிபுரிவதற்குக் கிடைக்கும் வாய்ப்புகளாகக் கருதப்பட வேண்டும். அதிகாரங்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் என்ற உணர்வு வந்தாகவேண்டும். அப்போதுதான் பொதுவாழ்வு சிறக்கும். பொதுத் தொண்டு வெற்றி பெறும்; புத்தொளி நாடெங்கும் பரவும்.

புதிய வேளாண்மைக் கிணறுகள், சமுதாயக் கிணறுகள், அமைத்தல்—குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல்—பாசன வசதி மேம்பாட்டுக்கான வாய்க்கால்களை வகைப்படுத்தல் — இணைப்புச் சாலைகளைப் போடுதல்-வானொலி மன்றங்களை ஏற்படுத்தல் —இளைஞர் அணியினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் ஆற்றலைப் பயன்படுத்துதல்—தீண்டாமை நோய், எந்த வழியிலும் தலை காட்டாமல் தடுத்தல்—குடும்ப நலத் திட்டங்களை நிறைவேற்றுதல்—விளக்குதல்—சத்துணவுத் திட்டம் பற்றிய விவரங்களை அளித்தல்—கண் ஒளி குறைந்தோர்க்கு ஒளி வழங்கும் திட்டம் பற்றி எடுத்துச்சொல்லி, அவர்களை அதன் பயனை அனுபவிக்கச் செய்தல்—இளம் மாணவர்க்கு உற்சாக மூட்டும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்—பேச்சுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்—இது போன்ற நூற்றுக்கணக்கான காரியங்களைப் பொறுப்பிலே உள்ளவர்கள், கடுகளவும், தன்னலமின்றிச் செய்வார்களேயானால் புன்னகைப் பூங்காவாக நமது பூமி திகழும்.

கிராமங்களின் வளர்ச்சியை ஒட்டியே நாட்டின் எதிர்காலம் அமையும். மக்களாட்சி, ஊராட்சிகளில் இருந்துதான் தொடங்குகிறது. மறுமலர்ச்சி என்பதும் அங்கிருந்தே முகிழ்க்க வேண்டும்.

இனிய பொழில்களையும் நெடிய வயல்களையும் கணக்கின்றிப் பெற்றுள்ள நம் தாய்த் திருநாட்டில்—

விளைவு பெருகி
வறுமை மாய்ந்து
அமைதி தவழ்ந்து
அறிவு பரவி
ஆற்றல் மிகுந்திட

இந்த வாரவிழா—கால்கோள் விழாவாக அமையட்டும் என்று கூறி விழாவினைத் தொடங்கி வைக்கிறேன்.

**(சமுதாய நலத்திட்ட வாரவிழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)**



# அரசு கொண்டாடிய அண்ணலின் விழா



அக்டோபர் மாதம் 2-ஆம் நாள் அகிலத்துக்கு அகிம்சை வழியைப் போதித்த அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள்.

அந்த நாளைத் தமிழக அரசு ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கொண்டாடி வருகிறது. அதுமட்டுமல்ல, அண்ணலின் பிறந்த நாளை அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து கொண்டாடும் அன்பு விழாவாகத் தமிழக அரசு மாற்றி அமைத்துள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாளன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்கும் வகையில் அண்ணலின் 104-வது பிறந்த நாள் முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இந்த விழாவிலே வேறு முக்கியமான இரண்டு நிகழ்ச்சிகள் இணைக்கப் பெற்றதை வரலாறு மறக்க முடியாது.

சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் 113 பேர்களுக்குத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் சார்பில் விருது வழங்கிய நிகழ்ச்சியும், கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு, சென்னைக்குக் கொண்டு வரப்பட்டுப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப் பெறுவதற்காக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்ற நிகழ்ச்சியும், அண்ணலின் பிறந்தநாள் விழாவோடு இணைக்கப் பெற்றது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபம் வண்ண விளக்குகளால் அணி செய்யப் பட்டிருந்தது. பாதைகளில் உள்ள வண்ணக் கொடிகள் காற்றில் அசைந்த காட்சி அனைவரையும் வருக வருக என்று அழைப்பது போலிருந்தது. மக்கள் வெள்ளம் நூற்றாண்டு மண்டபத்தை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது.

மண்டபத்தினுள்ளே மாலை 5-30 மணியளவில் மெல்லிசை மன்னர் திரு எம். எஸ். விசுவநாதன் அவர்களின் குழுவினருடன், திரு டி. எம். சௌந்தரராசன், திரு கே. வீரமணி, திருமதி எல். ஆர். ஈஸ்வரி ஆகியோர் அண்ணலின் புகழ்ச் சரித்திரத்தைப் பாமாலைகளாக்கித் தொடுத்துத் தந்தார்கள்.

அதன் பிறகு,

நூற்றாண்டு விழா மண்டபத்திற்கு வெளியே வைக்கப் பெற்றிருந்த சிதம்பரனார் இழுத்த செக்கைப் பொதுமக்களின் பார்வைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பின்னர்,

அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் பொதுக்கூட்டம் தொடங்கப் பெற்றது. முதல்வர் கலைஞர் அவர்களைத் தலைமை ஏற்குமாறு கேட்டுக்கொண்டும், வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றும் உரையாற்றினர், தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு ப. சபாநாயகம் அவர்கள்.

முதல்வர் கலைஞர் அவர்கள் தமது தலைமை முன்னுரையில் குறிப்பிட்டார்கள் :—

''காந்தியடிகள் பிறந்த இந்த நாளில் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஆண்டுதோறும் நாம் வழக்கமாகக் கொண்டாடுவதைப் போல் இந்த ஆண்டும் விழாவினை ஏற்பாடு செய்து மிகச் சிறப்புடன் கொண்டாடுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம்.''

''இந்திய அரசின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுகின்ற செப்பேட்டினைப் பெறுவதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் விடுதலைப் போராட்டத்திலே நம்முடைய மாநிலத்திலேயிருந்து ஈடுபட்டவர்களல்ல என்றாலும், வேறொரு மாநிலத்திலே இருந்து அந்தப் போராட்டத்திலே அவர்கள் ஈடுபட்டவர்கள் என்றாலும், அந்தப் போராட்டத்திற்கான விருதினைப் பெறுகின்ற மாநிலமாக நமது தமிழகம் இருப்பதில் நாம் பெருமை அடைகிறோம். இது, தமிழ்நாட்டிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அரசு, இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டில் எவ்வளவு ஆர்வத்தோடு இருக்கிறது என்பதற்கு இயற்கையே நமக்களித்திருக்கும் சான்றாகும் என்று கருதுகிறேன்.''

''அந்த வகையிலே நம்முடைய மேதகு ஆளுநர் அவர்களுக்கு இந்திய அரசு வழங்குகின்ற செப்பேட்டினை வழங்குவதில் நான் மிகுந்த பெருமையடைகிறேன்.''

—இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்துவிட்டு, மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களிடம், தாமிர பத்திர விருதினைக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்ட ஆளுநர் அவர்கள் தனது நன்றிப் பெருக்கினை எடுத்துரைத்தார். தமது பேச்சில் ஆளுநர் குறிப்பிட்டதாவது:—

''தாமிர பத்திர விருது பெறுவோனாக இருப்பேன் என்று வாழ்நாளில் என்றும் நான் எதிர்பார்த்தேன் அல்ல. நாங்களெல்லாம் நாட்டின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்தில் நீண்ட காலச் சிறை வாழ்வையோ அல்லது தூக்குத் தண்டனையையோ தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களுக்கிருந்த ஒரே ஆறுதல் மகாத்மா காந்தியைத் தலைவராகப் பெற்றிருந்தோம் என்பதுதான். அவர் எழுப்பிவிட்ட எழுச்சிதான் எங்களிடையே வலுவான அன்புப் பிணைப்பாக இருந்தது,

''வன் செயலில் நம்பிக்கை கொண்ட பிரிவினரைச் சேர்ந்திருந்தவன் நான். எங்குச் சென்றாலும் இதையே நான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால் போராட்டம் முடிந்தவுடன் ''பாபு, நான் தவறு செய்து விட்டேன்; அதற்காக வருந்துகிறேன்'' என்று மகாத்மாவிடம் நான் சொல்வது உண்டு.

**தலைமையின் சிறப்பு**

''நீ, மீண்டும் அதே தவறைச் செய்வாய் என்பதையும் நான் அறிவேன். ஆனால் நீ என்னிடம் வந்துகொண்டு இருக்கும் காலம்வரையிலும் உன்னையே நீ மாற்றிக்கொள்ளச் சந்தர்ப்பம் உண்டு''-இவ்வாறு பதிலுரைப்பார் மகாத்மா!

''சவகர், சர்தார், மௌலானா, சுபாஷ்பாபு, இராஜாஜி போன்றவர்களைத் தன் வழியில் செல்லத் தூண்டிய வேறொரு தலைவரை வரலாற்றில் நீங்கள் பார்த்ததுண்டா? படித்தது உண்டா? ''

''அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே நாட்டை நடாத்திச் செல்லும் பெற்றிமை உடையவர்கள். இருப்பினும் அவர்கள் அனைவரும் காந்தியின் கூற்றினை முடிந்த முடிபாக ஏற்றுக் கொண்டார்கள். அதுதான் காந்தியினுடைய தலைமையின் சிறப்பாகும். ''

**மக்களுக்கே அதிகாரம்.**

'' நான் இன்று ஆளுநராக இருக்கிறேன் என்றால் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய எல்லா விடுதலை வீரர்களுக்கும் இந்த ஆளுநர் பதவியில் பங்குண்டு.

'' தமிழகத்தில் கற்றுத் தேர்ந்த நமது தமிழக முதல்வரின் கையிலிருந்து தாமிர பத்திரம் பெறும் இந்நாள் என் வாழ்வில் ஓர் திருநாள். இந்நிகழ்ச்சி வடக்குத் தெற்கு வேறுபாடுகளை மறந்து, சாதி, மதம், சமயம், மொழி வேற்றுமைகளைத் துறந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடிய நிகழ்ச்சிகளை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது. ''

'' நன்றி கலந்த வணக்கம்! ''

ஆளுநர் உரை முடிந்ததும் மேலவைத் துணைத் தலைவர் திரு ம. பொ. சி. அவர்களுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் செப்பேட்டினை வழங்கினார்கள்.

அதன்பின், விடுதலை வீரர்கள் அனைவருக்கும் செப்பேடுகள் வழங்கப் பெற்றன. செப்பேடு வழங்கப் பெறும் நிகழ்ச்சி முடிவுற்றதும் தவத்திரு குன்றக்குடி அடிகளார், எம்.எல்.சி., அவர்கள், உரையாற்றினார்கள்.

''தீண்டாமையை நாம் முற்றிலும் விலக்கியபாடில்லை. சாதி முறைகளை ஒழித்தபாடில்லை. இமயம் முதல் குமரிவரை வாழ்கின்ற சமுதாயத்தை-ஒத்த குலம்—ஒத்த நிறை—எல்லாரும் ஓர் குலம்—எல்லாரும் ஓர் நிறை என்று பாரதி பாடிய வகையில் உருவாக்குகிற பொழுதுதான் விடுதலைக்கு ஒரு நல்ல பாதுகாப்பு ஏற்படும். ''

—இவ்வாறு குறிப்பிட்ட அடிகளாருக்குப் பின், உழைப்பாளர் கட்சியின் சார்பில் திரு எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி எம். எல். சி. உரையாற்றினார்கள். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மகாத்மா காந்தியவர்கள் இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி வெற்றிபெறச் செய்தார். அவர் விடுதலைக்காக மட்டும் போராடவில்லை. எதிர்காலத்தில் மக்கள் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர் தந்திருக்கிறார்.''

அடுத்து பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய திரு. ஏ. ஆர். பெருமாள், எம். எல். ஏ. தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு முன்னாலேயே விடுதலைப் போராட்டம் நடந்தது. ஆனால், அந்த விடுதலைப் போராட்டம் வன்முறையை அடிப்படையாகக் கொண்டு ஆயுதங்களை ஏந்திப் பயங்கர இயக்கமாக இந்தியா முழுவதும் நடைபெற்றிருக்கிறது. வெள்ளைக்கார அதிகாரிகள் கண்ட கண்ட இடங்களில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதன் காரணமாக, விடுதலைப்போராட்டம், விடுதலை கேட்கின்ற குரல் எழாதபடி தடுத்து வைத்திருந்தான் வெள்ளைக்காரன். அந்த



அண்ணாவின் சிலைக்கு முதல்வர் மாலையிடுகிறார்







நேரத்திலேதான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைமையை ஏற்க வந்தார் காந்தியடிகள். வந்தபொழுது அவர் கொடுத்த இரண்டே இரண்டு கொள்கைகள் தாரக மந்திரங்கள்—அகிம்சை; சத்தியம்; இந்த இரண்டு கொள்கைகளை வைத்தே பெரிய ஏகாதிபத்தியத்துடன் போராடி வெற்றிகண்டார் காந்தியடிகள்.

பின்பு பேசிய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு கே. ஏ. அப்துல் வகாப், எம். எல். சி. குறிப்பிட்டார் :—

''மகாத்மா காந்தியடிகள் சாதாரண மனிதர் இல்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஓர் முறை உதயமாகும் நறுமண மிகுந்த நர்கிஸ் மலரை ஒத்தவர். அவர்கள் நமக்குக் கிடைத்தது நாம் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.''

அதன் பின்பு, சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் உரையாற்றினார்கள். அவர்தம் உரை :—

''சுதந்தரத்திற்குப் பாடுபடுகிற பேறு பெறுவதே ஒருவருடைய புண்ணியம்.

''அந்தச் சுதந்தரத்தை பெற்று முடித்துச் சுதந்தரத்தைப் பார்ப்பது அதைவிடப் பெரும் புண்ணியம்.

''சுதந்தரத்தைப் பார்த்த பிறகும் அதை வளர்ப்பதற்குக் கால் நூற்றாண்டு வாழ்வது அதைவிடப் பெருஞ் சிறப்பு.''

''அதைவிடப் பெருஞ்சிறப்பு, எந்த ஆட்சியை அமைத்தானோ அந்த ஆட்சியிடம் அவன், தியாகத்தைச் செப்புப் பட்டயத்தில் பொறித்துக் கொடுப்பது—அதைப் பெறுவது ;''

''அதைவிடப் பெருஞ்சிறப்பு சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுடைய நெஞ்சங்களிலே குடியிருக்கும் ஏழை மக்களின் ஆட்சியினுடைய முதல்வரிடமிருந்து இரண்டு கையேந்திப் பெறுவது பெருஞ் சிறப்பாகக் கருதுகிறேன்.

''தாமிரபத்திரம் பெற்றது சிறைக்குப் போய்த் துன்பம் பெற்றோம், என்ற காரணத்திற்காக ஆகும். அந்தத் தாமிர பத்திரம் கொடுப்பவர்க்கும் அந்தத் துன்பம் தெரிந்

திருந்தால் நல்லது ; அவரும் தெரிந்தவர்—ஆறு ஏழு முறை சிறை சென்றவர். சிறைக்குப் போன காரணங்களில் வேறு படலாம்.''

''பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் பெரியார் முதல் இராஜாஜி வரை—அடியேன் வரை சேர்த்து நம்முடைய முதல்வரை வைத்துக் கொடுங்கள் என்றார். பிரதம மந்திரியே முதல்வரைத் தேர்ந்தெடுத்து 'உங்கள் கையால் கொடுங்கள்' என்று சொல்லிவிட்ட பிறகு அதற்குத் தலைவணங்க மறுப்பவர்கள் இந்தியாவின் சன நாயகத்தையே மறுப்பவர்கள்.''

''அதிகம் புகழ நினைத்தாலும் புகழ முடியாத உயரத்தில் இருக்கிறார், காந்தியடிகள். சிந்தையும், ஒளியும் செல்லாத சிகரத்தில் — அந்தப் புகழில் வீற்றிருக்கிற மகானின் பெருமையைச் சொல்ல வார்த்தைகள் போதாது.''

சிலம்புச் செல்வருக்குப்பின், பேசிய கல்வியமைச்சர் திரு நாவலர் அவர்கள் ''காந்தியடிகளுடைய வரலாறு—இந்த நாட்டினுடைய அரசியல்போக்கையே மாற்றுவதற்கு அவர் காரணமாக இருந்து—வெள்ளைக்காரர்களுடைய கால் கழுவிக் கெஞ்சுகின்ற நிலைக்குப் போகாமல் வெடிகுண்டின் மூலமும், துப்பாக்கிகளின் மூலமும், வன்முறைச் செயல்களின் மூலமும் தான் எண்ணுகின்ற காரியங்களை முடிக்க வேண்டும் என்று கருதாமலும்—இடையிலே புதியதொரு வழியைக் கண்டு பிடித்து எதிரிக்கு அடிமையாகாமல் அடங்காமல்—வளையாமல்— நெளியாமல்—பணியாமல்—வீழாமல்— அதே நேரத்தில் பிறரை வஞ்சிக்காமல்—வாட்டாமல்— வருத்தாமல் — கொடுமைகளுக்கு ஆளாக்காமல் — தம்மைத் தாமே வருத்திக் கொள்வதன் மூலமாகப் பிறரது உள்ளத்தையே திருத்த வேண்டும் என்ற பெருங் கொள்கையில் அவர்கள் வெற்றி பெற்றார்கள்'' எள்றார்.

அதன்பின், முதல்வர் கலைஞர் அவர்கள் முடிப்புரையில் குறிப்பிட்டார்கள் :—

''இன்று தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவிலும், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் அவர்கள் கோவைச் சிறையிலே இழுத்த செக்கினைத் திறந்து வைக்கின்ற விழாவிலும்,









வ. உ. சிதம்பரனார் இழுத்த செக்கை முதல்வர், பொதுமக்கள் பார்வைக்குத்திறந்து வைக்கிறார்.

விடுதலை வீரர்கட்கு இந்திய அரசின் சார்பில் வழங்கப்பட்ட செப்பேடுகளை விடுதலை வீரர்கள் பெற்றுக் கொள்ளும் விழாவிலும் கலந்து கொண்டு சிறப்புச் செய்த உங்கள் அனைவருக்கும் நான் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.''

''காந்தியடிகளுடைய விழாவை —இந்தியாவில் அவரது 100-வது பிறந்த நாளின்போது எல்லா மாநிலங்களிலும் கொண்டாடப் பட்டது. அப்போது தமிழ் நாட்டில் காந்தியடிகளுடைய நூற்றாண்டு நாள் விழாவினையொட்டி, அவர் தென்னாப்பிரிக்காவில் போராட்டம் நடத்திய போது அவருக்கு யார் உறு துணையாக இருந்தார்களோ, தமிழகத்தின் சார்பில்—அந்தத் தில்லையாடி வள்ளியம்மைக்கும் —நாகப்பனுக்கும், நாராயண சாமிக்கும் அவர்கள் மூதாதையர்கள் வாழ்ந்த திருநகரமான தில்லையாடியில் வள்ளியம்மை நகரை அமைத்தும், நாகப்பன், நாராயணசாமி ஆகியவர்களின் பெயரால் நினைவுச் சின்னங்களை எழுப்பியும், காந்தியடிகள் அந்தச் சாதாரணமான எளிய குடும்பத்திலே பிறந்த— ஆனால் ஒரு வீரவரலாற்றைக் காந்தியடிகளுடைய வாழ்க்கைப் புத்தகத்திலே ஓர் அத்தியாயமாகச் சேர்த்த தில்லையாடி வள்ளியம்மை பிறந்த அந்தத் திருத்தலத்திற்கு, வந்து தங்கி இருந்த அந்த வீட்டினையும் ஒழுங்குபடுத்திச் செம்மைப் படுத்திச் சில லட்சம் ரூபாய் செலவில் தமிழக அரசின் சார்பில் அந்த நகரத்தை ஒரு நினைவுச் சின்னமாக ஆக்கியிருக்கின்றோம். அது மாத்திரமல்லாமல், எந்த அடித்தளத்து மக்களுக்காகக் காந்தியடிகள் பாடுபட்டாரோ—அரசு செய்கின்ற காரியங்களெல்லாம் போய்ச்சேர வேண்டும் என்று விரும்பினாரோ— அப்படிப்பட்ட அடித்தளத்து மக்களுடைய வாழ்வில் மேன்மை எய்திட வேண்டும் என்பதற்காக அவரது நூற்றாண்டு விழாவினையொட்டி நூற்றுக்கணக்கான இடங்களிலே குடிதண்ணீர் வசதியைப் பெருக்கியும், அரிசனங்களுக்கான புதிய புதிய காலனிகளை அமைத்தும், தீண்டாமையை ஒழித்திட மேலும் தீவிரக் கவனம் செலுத்துவதற்காக ஆறு மாவட்டங்களிலே இதற்காகத் தனிக் காவல்படை ஒன்றினை அமைத்தும் நூற்றாண்டு விழாவிலே தமிழக அரசின் சார்பில் காந்தியடிகளுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையை நாம் செலுத்தி இருக்கின்றோம்.''



திரு இராஜாஜி அவர்களுக்குத் தாமிரபத்திர விருதினை முதல்வர் வழங்குகிறார்.

# பசுமைப் புரட்சியில் கிழங்குகள்

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் குறிப்பாகத் தமிழகத்தில் மரவள்ளிக் கிழங்குகளும், சர்க்கரை வள்ளிக் கிழங்குகளும் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஏனெனில் அவைகள் நல்ல உணவுச் சத்துகளைக் கொண்டுள்ளன. நல்ல மகசூலும் கொடுக்கின்றன. அவைகளை மாற்று உணவாக உட்கொள்ளலாம். அவைகளை, மற்றச் சாகுபடிக்கு ஒவ்வாத நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். மைசூரில் உள்ள மைய உணவு-நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தில், நம் உணவில், அரிசிக்குப் பதிலாக, 25 சதவிகிதம் அளவுக்கு இக் கிழங்குகளை உணவாக உட்கொள்ளலாம் எனக் கண்டுள்ளனர். இவ்விதம் கிழங்குகளை நாம் உணவாக உட்கொள்ள 1.5 மில்லியன் டன் கிழங்குகள் தேவைப்படுகின்றன. மரவள்ளிக் கிழங்குகளிலும், சர்க்கரை வள்ளிக் கிழங்குகளிலும் பின் கண்டவாறு உணவுச் சத்துகள் அடங்கி உள்ளன..

| | | மரவள்ளிக் கிழங்கு. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு. |
|---|---|---|---|
| கலோரிகள் | | 146 | 125 |
| நீர் | (கிராம்) | 62.5 | 70 |
| மாவுப்பொருள் | ,, | 34.7 | 27.3 |
| புரதம் | ,, | 1.2 | 1.8 |
| கொழுப்பு | ,, | 0.3 | 0.4 |
| சுண்ணாம்பு (கால்சியம்) | | 3.3 | 3.4 |
| இரும்பு | ,, | 0.7 | 1.0 |
| வைட்டமின் 'ஏ'(ஐ.யூ) | | .. | 2,500 |
| வைட்டமின் 'பி1' | | 0.66 | 0.1 |
| வைட்டமின் 'பி2' | | 0.33 | 0.05 |
| நியாசின் | | 0.60 | 0.60 |
| வைட்டமின் 'சி' | | 36 | 23 |

தமிழகத்தில் மரவள்ளிக் கிழங்குகளும், சர்க்கரைவள்ளிக் கிழங்குகளும் அநேகமாக தமிழ் நாட்டின் எல்லாமாவட்டங்களிலும் பயிராகின்றன. என்பதைக் கீழே கண்ட அட்டவணையிலிருந்து அறிந்துக் கொள்ளலாம்.

| மாவட்டம் | மரவள்ளிக் கிழங்கு பரப்பளவு (எக்டேரில்). | சர்க்கரை வள்ளிக் கிழங்கு பரப்பளவு (எக்டேரில்) |
|---|---|---|
| செங்கற்பட்டு | 592 | 171 |
| தென் ஆர்க்காடு | 1,482 | 1,623 |
| வடஆர்க்காடு | — | 150 |
| சேலம் | 19,537 | 208 |
| தர்மபுரி | 599 | 20 |
| கோவை | 191 | 90 |
| திருச்சிராப்பள்ளி | 1,144 | 1,015 |
| தஞ்சை | 220 | 129 |
| மதுரை | 98 | 338 |
| இராமநாதபுரம் | | 138 |
| நெல்லை | 10 | 485 |
| நீலகிரி | 311 | 49 |
| குமரி | 14,422 | 33 |
| மொத்தம் | 38,606 | 4,003 |

### மரவள்ளிக் கிழங்கு

மரவள்ளிக் கிழங்கு இந்தியாவில் ஏறத்தாழ 2,51,000 எக்டேர் பரப்பளவிலும், தமிழகத்தில் 38,606 எக்டேரிலும்பயிராகின்றது. குமரி, கோவை நீலகிரி மாவட்ட மக்கள், மரவள்ளிக் கிழங்கை உணவாக உட்கொள்கின்றனர். சேலத்தில் மரவள்ளிக் கிழங்கை ஜவ்வரிசியாகவும் (Sago), வற்றலாகவும், மாவுப் பொருளாகவும் தயாரிக்க ஏறத்தாழ முன்னூறு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. ஓர் ஏக்கரிலிருந்து கிடைக்கக்கூடிய மரவள்ளிக் கிழங்கிலிருந்து கிடைக்கும் மாவுப் பொருள் கோதுமையை விட ஆறு மடங்கும், மக்காச் சோளத்தை விட இரு மடங்கும் அதிகமாக இருக்கின்றது.

நூற்பு ஆலைகளுக்கு மரவள்ளிக் கிழங்கின் மாவுப் பொருள், உருளைக் கிழங்கு, மக்காச்சோளம் ஆகிய மாவுப் பொருளைவிடச் சிறந்ததாக இருக்கிறது. 1959–60-ஆம் ஆண்டில் சேலத்திலிருந்து ஜவ்வரிசி இலங்கை, கிழக்குப் பாகிஸ்தான், ருஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இங்கிலாந்து, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, நியுஜிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இதற்கு நல்ல தேவை (கிராக்கி) உள்ளது.

இந்திய வேளாண்மைக் கழகத்தின் சார்பாகக் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், கூட்டு ஆய்வுத் திட்டத்தின் கீழ், மரவள்ளிக் கிழங்குகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாராய்ச்சிகளின் அடிப்படையில், அதன் சாகுபடியைப் பற்றிய குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மண் வளம்:**—நல்ல வடிகால் வசதியுள்ள, குறுமண் கலந்த மணற் பாங்கான நிலம் சாகுபடிக்குச் சிறந்தது.

**மரவள்ளிக் கிழங்கு வகைகள்:**—தமிழகத்திற்குக் கீழே கண்டுள்ள வகைகள் சிறந்தவையெனக் கண்டறியப்பட்டுள்ளன.

**எஸ். 2:**—இது திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் கிழங்குகள் நீளமாகவும், பெரியதாகவும், விரிந்தும், பரந்தும் உள்ளன. இதன் மேல்தோல் பழுப்பு வண்ணத்துடனும், உட்சதை வெண்மையாகவும் காணப்படும். ஒரு செடியிலிருந்து 8 முதல் 10 கிழங்குகள் கிடைக்கும். இந்த ரகம் ஒரு எக்டேரிலிருந்து சற்றேறக்குறைய 45 முதல் 50 டன் மகசூல் கொடுக்க வல்லது.

**எஸ். 5:**—இதுவும் திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளதேயாகும். இதன் கிழங்குகள் பருத்தும், நெருக்கமாகவும் உள்ளன. கிழங்குகளின் மேல் தோல் பழுப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் காணப்படும். ஒரு செடியிலிருந்து 6 அல்லது 8 கிழங்குகள் கிடைக்கும். ஒரு எக்டேரிலிருந்து ஏறத்தாழ 30 முதல் 35 டன் கிழங்குகள் பெறலாம்.

**மலேயன் 4:**—இவ்வகையை 'வைரஸ்' என்ற நோய் தாக்காது. இது மற்ற வகைகளைவிட வீரியமாகவும், உயரமாகவும் வளரும். இதன் கிழங்குகள் நீளமாகவும், விரிந்தும் காணப்படும். கிழங்குகளின் மேல் தோல் கருமை கலந்த பழுப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் தோன்றும். இது ஒரு எக்டேருக்கு சற்றேறக் குறைய 35 முதல் 40 டன் மகசூல் கொடுக்கும்.



எஸ்-5 வகை மரவள்ளிக் கிழங்கு.



எஸ்-2 வகை மரவள்ளிக் கிழங்கு.



மலேயன் 4 வகை மரவள்ளிக்கிழங்கு

**மலவெள்ளா:**—இதன் கிழங்குகள் பெரியதாகவும், தண்டினைச் சுற்றிலும் நெருக்கமாகவும் காணப்படும். மேல் தோல் இலேசான பழுப்பு நிறத்துடனும், உட்தோல் சிவப்பு நிறத்துடனும், உட்சதை வெண்மையாகவும் இருக்கும். இந்த ரகம் ஒரு எக்டேரிலிருந்து 25 முதல் 30 டன் மகசூல் அளிக்கும்.

*நிலந்தயாரித்தல்:*—நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை நன்றாக உழுதல் வேண்டும். கடைசி முறையாக உழும்போது 20 வண்டி (10 டன்) மக்கிய தொழு உரம் ஒரு எக்டேருக்கு என்ற அளவில் நிலத்தில் இட்டு அவைகளை மண்ணோடு மண்ணாகக் கலக்குமாறு உழ வேண்டும். பிறகு நிலத்தில் ஒன்றுக்கொன்று 75 செ.மீ. இடைவெளி விட்டுப் பார் பிடிக்க வேண்டும்.

*நடும்முறை:*—மரவள்ளிக் கிழங்குச் செடியினுடைய கிளையின் நுனிபாகத்தை நீக்கி விட்டு மைய பாகத்தையும், அடிப்பாகத்தையும் 15 செ.மீ. நீளமுள்ள துண்டுகளாக நறுக்க வேண்டும். நடுவதற்கு முன்பு பூசண நோய் வராமல் தடுக்க 1 சத போர்டோ கலவையில் கரணைகளை நனைத்து எடுக்க வேண்டும். தண்ணீர் கட்டிய பார்களின் நடுப்பக்கத்தில் 90 செ. மீ. இடைவெளியில் அக்குச்சிகளை நடவேண்டும். ஒரு எக்டேருக்கு 10,000 முதல் 12,000 குச்சிகள் வரை தேவைப்படும்.

*நடுங்காலம்:*—பொதுவாக உழவர்கள் மரவள்ளிக் கிழங்குக் குச்சிகளை, ஜுன் மாதத்தில் நடுகின்றனர். ஆனால் செப்டம்பர் மாதத்தில் நடவு செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும் என ஆராய்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

*நீர்பாய்ச்சுதல்:*—மரவள்ளிக் கிழங்கு சாகுபடி காலத்தில் சுமார் 35 அல்லது 40 தடவை தண்ணீர் கட்டினால் போதுமானது. மழைக் காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் எட்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டுவது சாலச் சிறந்தது.

*உரம் வைத்தல்:*—நிலத்தில் குச்சிகள் நடுவதற்கு முன்பாகத் தொழு உரம் போடவேண்டும். அதன் பின் அட்டவணையில் கண்ட இரசாயன உரங்களை நடுவதற்கு ஒரு நாள் முன்பு, அடி உரமாக இடுதல் வேண்டும். நட்ட மூன்று மாதங்களுக்குப் பின் அட்டவணையில் கண்டபடி மேலுரம் போட வேண்டும்.

*பின்செய் நேர்த்தி:*—ஒவ்வொரு மாதமும் களைகள் எடுக்க வேண்டும். பயிர்களின் மூன்றுவது மாதத்திலும் அதாவது மேலுரம் போட்ட உடனும், ஆறுவது மாதத்திலும் மண் அணைக்க வேண்டும். ஒவ்வொரு செடியிலும் இரண்டு தண்டுகளுக்கு மேல் இருத்தல் நல்லதல்ல.

*ஊடு பயிர்:*—குச்சிகள் நட்ட இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள்ளாகப் பலன்தரும் கடலை, முள்ளங்கி, பீட்ரூட் போன்றவைகளை ஊடு பயிர்களாகச் சாகுபடி செய்யலாம். இதன் விதைகளைக் குச்சிகள் நட்ட பார்களின் மறுபகுதியில் விதைக்க வேண்டும்.

*பயிர்ப் பாதுகாப்பு:*—மரவள்ளியை 'மொசைக் வைரஸ்' என்ற நோய் தாக்கும். இந்நோய்களினால் தாக்கப்பட்ட செடிகளை அப்புறப்படுத்தித் தீக்கிரையாக்க வேண்டும். இந்நோய் பரவாமல் இருக்க மூன்று அல்லது நான்கு முறை 'ரோகார்' என்னும் மருந்து தெளிப்பதால், இந் நோயைப் பரவச் செய்கின்ற பூச்சிகளைக் கொன்றுவிட முடியும். மரவள்ளிக் கிழங்கின் தண்டுகளைச் 'செதில்கள்' எனப்படும் பூச்சிகள் தாக்கும். இவைகளைத் தவிர்க்க 'மெட்டாசிஸ் டாக்ஸ்' 0·5 சதவிகிதம் தெளிக்க வேண்டும்.

*அறுவடை:*—மரவள்ளிக் கிழங்குகளை நட்ட 10 முதல் 12 மாதங்களில் அறுவடை செய்யலாம். கிழங்குகள் முதிர்ச்சியடைந்துள்ளதைப் பின் கண்ட அறிகுறிகள் மூலம் அறியலாம்.

1. இலைகள் பழுப்படைந்து, மஞ்சள் நிறத்துடன் காய்ந்து உதிரும்.

2. செடிகளின் அடிப்பாகத்தில் மண் வெடித்துக் காணப்படும்.

மாவு தயாரிப்பதற்கு 12 முதல் 14 மாதங்களுக்குப் பின் தான் அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன் பாகத் தண்ணீர் கட்டுவதால் கிழங்குகளை எளிதாக தோண்டி எடுக்க முடியும். ஒரு எக்டேரிலிருந்து சுமார் 25 முதல் 30 டன் வரை கிழங்குகள் சாதாரணமாகப் பெறலாம். நல்ல ரகங்களில் 50 டன் வரை கூட மகசூல் கிடைக்கும்.

ஒரு எக்டேர் (2·47 ஏக்கர்) மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யச் சுமார் ரூபாய் 2,000 செலவாகும். ஆனால் மொத்த வருமானம் சுமார் ரூபாய் 6,000 கிடைக்கலாம்.

### சர்க்கரை வள்ளிக் கிழங்கு

தமிழகத்தில் சற்றேறக்குறைய 4,000 எக்டேரில் சர்க்கரை வள்ளிக் கிழங்கு சாகுபடியாகின்றது. கிழங்குகளில் வைட்டமின் 'ஏ'யும் 'சி'யும் அதிகமாக உள்ளன. சர்க்கரை வள்ளிக் கிழங்கு நூற்பாலைகளுக்குத் தேவையான பசை, வாசனைப் பவுடர்கள், ரொட்டி ஆகியவை செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. சர்க்கரை வள்ளிக் கிழங்கிலிருந்து சாராயமும் ( Alcohol ) தயாரிக்கலாம்.

மண்வளம்:—குறுமண் கலந்தமணல், சர்க்கரை வள்ளிக் கிழங்குச் சாகுபடிக்கு ஏற்றது. நல்ல ஒளியும், நீண்ட இரவும் இதன் வளர்ச்சிக்கு ஏற்றது. நிலம் நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும்.

### சர்க்கரை வள்ளிக் கிழங்கு வகைகள்

**வி-6.**—இதன் சாகுபடிகாலம் 4½ முதல் 5 மாதங்கள். கிழங்குகள் நீண்ட உருண்டையாகவும், பெரியதாகவும் காணப்படும். உட்சதை நல்ல மஞ்சள் நிறத்துடனும், மேல்தோல் சிவப்பு நிறத்துடனும் இருக்கும். ஒரு எக்டேரிலிருந்து சற்றேறக்குறைய 18 முதல் 19 டன் கிழங்குகளைப் பெறலாம்.

**வி-8:**—கிழங்குகள் பெரியதாகவும், நீளமாகவும் இருக்கும். கிழங்குகளின் மேல்தோல் வெண்மையாகவும், உட்சதை 'வெண்ணெய் (Cream) நிறத்துடனும் காணப்படும். இதன் சாகுபடிக் காலம் 4 முதல் 4½ மாதங்களாகும். ஒரு எக்டேரிலிருந்து 18 முதல் 20 டன் கிழங்குகள், மகசூல் கிடைக்கும்.

**வி-12:**—இந்த ரகக் கிழங்குகள் நீளமாகவும், பெரியதாகவும் இருக்கும். மேல் தோல் மஞ்சள் நிறமாகவும், நல்ல சுவையுடனும் இருக்கும். இதன் சாகுபடி காலம் 4 முதல் 4½ மாதங்கள். ஒரு எக்டேரிலிருந்து 17 முதல் 18 டன் கிழங்கு மகசூல் பெறலாம்.

**எச்-1:**—இது திருவனந்தபுரத்தில் உள்ள மைய கிழங்கு ஆராய்ச்சிக் கழகத்தில் பண்பகக் கலப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு வகையாகும். இதன் சாகுபடிக் காலம் 5 மாதங்கள். கிழங்குகள் சுமாரான வண்ணத்துடன் இருக்கும். மேல் தோலும், உட்பாகமும் வெண்மையாக இருக்கும் ஒரு எக்டேரிலிருந்து 15 முதல் 16 டன் கிழங்கு மகசூல் கிடைக்கும்.

**எச்-3:**—இதுவும் மேற்கூறிய ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து உண்டான ஒரு பண்பகக் கலப்பு வகையே யாகும். இதன் சாகுபடிக் காலம் 5 மாதங்கள். கிழங்குகள், சுமாரான வண்ணத்துடனும், அதன் மேல்தோல் இளஞ் சிவப்புடனும் (pink), உட்சதை வெண்மையாகவும் இருக்கும். இந்த ரகத்தைப் பயிரிட்டு ஒரு எக்டேரிலிருந்து 18 முதல் 20 டன் கிழங்குகள் பெறலாம். இதன் கொடிகள் மற்ற வகைகளைப்போல் அதிகம் படர்வதில்லை. இலைகள் நீண்டு காணப்படும்.

இதைத் தவிர சில கிழங்கு வகைகள் நல்ல மகசூலைக் கொடுக்கின்றன. இவைகள் இவ்வாராய்ச்சித் திட்டத்தின் பரிசோதனையிலிருந்து வருகின்றன.

நிலம் தயாரித்தல்.—நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை புழுதி காண உழ வேண்டும். 20 வண்டி (10 டன்) தொழு உரம் நிலத்தில் போட்டுக் கலக்க வேண்டும். பின் நிலத்தில் பார் பிடிக்க வேண்டும். பார்கள் ஒன்றுக்கொன்று 60 முதல் 75 செ. மீ. இடைவெளியில் இருக்க வேண்டும். நடுவதற்கு முன்பாக நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிட வேண்டும்.

நடும் முறை:—சர்க்கரை வள்ளிக் கிழங்குகளின் கொடிகளில் நுனி பாகத்தையும், மைய பாகத்தையும் நடுவதற்கு உபயோகப்படுத்தலாம். நடும் கொடியின் நீளம் சுமார் 20 செ. மீ. (8 அங்குலம்) இருக்க வேண்டும். நுனி பாகத்தை நடும்பொழுது மூன்றில் ஒரு பங்கு மண்ணுக்குள் நேராக இருக்க வேண்டும். மைய பாகக் கொடியை நடும்பொழுது கொடியின் மைய பாகத்தை மண்ணுக்குள் மறையும்படியும், கொடியின் இரு பக்க நுனிகள் வெளியே தெரியும் படியும் நட வேண்டும்.

இவ்வாராய்ச்சித் திட்டத்தில், சர்க்கரை வள்ளிக் கிழங்கின் நுனிப் பாகத்தை நடுவதால் அதிக மகசூல் பெற முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் நடுவதற்கு 25,000 கொடித் துண்டுகள் ( Cuttings ) தேவைப்படுகின்றன.

நடும் காலம்:—கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் கிழங்கு ஆராய்ச்சித் திட்டத்தில், சர்க்கரை வள்ளிக் கிழங்குக் கொடிகளை, அக்டோபர் மாதம் முதலிரண்டு வாரத்திற்குள்ளாகவும், செப்டம்பர்



எச்-3 வகை சர்க்கரை வள்ளிக் கிழங்கு.



மலவெள்ளா மரவள்ளிக் கிழங்கு.



எச்-1 சர்க்கரை வள்ளிக்கிழங்கு.




சூன் மாதங்களில் மூன்றாவது, நான்காவது வாரத்திலும் நடுவதால் நல்ல பலன்கிடைக்கும் என ஆராய்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

**நீர் பாய்ச்சுதல்:**—சர்க்கரை வள்ளிக் கிழங்கிற்கு வாரம் ஒரு முறை தண்ணீர் கட்ட வேண்டும். இதன் சாகுபடிக் காலத்தில் சுமார் 12 தடவை தண்ணீர் கட்டினால் போதுமானது.

**உரம் வைத்தல்.**—நடுவதற்கு முன்பாக எக்டேருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு போட வேண்டும். அத்தோடு கூடப் பரிந்துரைக்கப்படும் இரசாயன உரங்களில் ஒரு பாதியை அடி உரமாக இட வேண்டும். நட்ட இரண்டு மாதத்திற்குப் பின்பு இரசாயன உரத்தின் மறுபாதியை மேல் உரமாக இட வேண்டும். பின் கண்ட அளவில் அடி உரம், மேல் உரம் ஆகியவைகளை இட வேண்டும்.

| இரசாயன உரம் (1) | அடி உரம் 5 (2) | மேல் உரம் (இரண்டு மாதத்திற்குப் பின்.) (3) |
|---|---|---|
| | (கிலோ/எக்டேருக்கு). | |
| அமோனியம் சல்பேட் | 125 | 125 |
| சூப்பர் பாஸ்பேட் | 312 | 312 |
| மியூரியேட் ஆப் பொட்டாசு | 125 | 125 |

**பின்செய் நேர்த்தி:**—முதலிரண்டு அல்லது மூன்று மாதங்களில் மாதம் ஒரு முறை நிலத்தைக் கொத்திக் களை எடுக்க வேண்டும். கொடிகளின் கணுக்களில் வேர் பிடித்து நிலத்தில் ஊன்றாமல் இருக்க அவைகளை அவ்வப்போது எடுத்து விட வேண்டும். அப்படிச் செய்வதால் கிழங்குகள் பெரிதாக ஏதுவாகும்.

**பயிர் பாதுகாப்பு:**—சர்க்கரை வள்ளிக் கிழங்கு வண்டுகள் (Sweet potato Weevils) கிழங்குகளைத் தாக்கி நாசம் செய்கின்றன. இவைகளைத் தடுக்க 'டையல்ட்ரின்' 0·10 சதம் மருந்தைக் கொடிகள் நட்ட 45 நாட்களிலிருந்து, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வீதம், 6 முறை தெளிக்க வேண்டும்.

**அறுவடை.**—சர்க்கரை வள்ளிக் கிழங்குகளை நட்டு 4½ முதல் 5 மாதத்தில் அறுவடை செய்யலாம். கிழங்குகள் நல்ல முதிர்ச்சியடைந்துள்ளனவா என்பதைக் கீழே கண்ட குறிப்புகளிலிருந்து அறியலாம்.

ஒரு சில கிழங்குகளைத் தோண்டி எடுத்து, அவைகளை வெட்டிப் பார்த்தோமானால், அவைகளிலிருந்து வடியும் பால் காய்ந்து வெண்மையாகத் தோன்ற வேண்டும். கிழங்குகள் முதிர்ச்சியடையவில்லையென்றால் வெட்டுப்பட்ட பாகத்தில் வடியும் பால் காய்ந்து கரும் பச்சை நிறத்துடன் காணப்படும். முதிர்ச்சியடைந்த கிழங்குகளின் மேல் மண் ஒட்டுவதில்லை.

அறுவடை செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பாகத் தண்ணீர் கட்டினால் கிழங்குகளைத் தோண்டி எடுப்பதற்கு எளிதாக இருக்கும். ஒரு எக்டேரிலிருந்து 15 முதல் 20 டன் கிழங்குகள் கிடைக்கும். அறுவடை செய்யப்பட்ட கொடிகளை மாடுகளுக்குத் தீவனமாக உபயோகிக்கலாம். சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஒரு எக்டேரில் சாகுபடி செய்ய ரூபாய் 1,500 செலவாகும். வருமானம் ரூபாய் 3,500 வரை கிடைக்கும்.

எனவே, மேற்கூறிய முறைகளில் மரவள்ளிக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு ஆகியவற்றைச் சாகுபடி செய்து பயன் அடையுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—டாக்டர் வி. என். மாதவராவ்,

—டாக்டர் க. ஞா. சண்முகவேலு,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

மரவள்ளிக் கிழங்கிற்கேற்ற
இரசாயன உர அட்டவணை.

| ஒரு எக்டேருக்குத் தேவையான இரசாயன உரம். | மல வெள்ளா அடி உரம். | மல வெள்ளா மேல் உரம். | எச். 1 அடி உரம். | எச். 1 மேல் உரம். | எஸ். 5 அடி உரம். | எஸ். 5 மேல் உரம். |
|---|---|---|---|---|---|---|
| | (கிலோவில்) | | (கிலோவில்) | | (கிலோவில்) | |
| அமோனியம் சல்பேட் | 250 | 250 | 375 | 375 | 125 | 125 |
| சூப்பர் பாஸ்பேட் | 156 | 156 | 156 | 156 | 506 | 506 |
| மியூரியேட் ஆப் பொட்டாசு | 83 | 83 | 125 | 125 | 83 | 83 |




நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்புகளுக்கும், கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி'' தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

விவரங்களுக்கு அணுகவும் :

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2

# தமிழ்நாட்டில் ஒரு

"இது என்ன, பாடப்புத்தகமா? படப்புத்தகமா?"

"இரண்டுமேதான்!".

"அப்படியா? படிக்கவும், பார்க்கவும் எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?"

"ஆமாம். முன்பெல்லாம் வெளிவந்த பாடப்புத்தகங்களைத் தான் நீ பார்த்திருப்பாயே! வெறும் கறுப்பு மையினால் ஒரு சில படங்களோடு அல்லவா அவை இருந்தன...."

"ஆமாம். இப்போது பாருங்கள்! முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள இந்தப் பாடப்புத்தகங்கள் கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன், அழகான அச்சு அமைப்புகளுடன், கவர்ச்சியாகக், குழந்தைகள் மனத்தில் எளிதில் பதியும்படியாக இருக்கின்றன...."

"நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை. மக்கு மாணவன் கூட இந்தப் புத்தகத்தைக் கண்டால் சொக்கிப் போய்விடுவான்; சோம்பல் இல்லாமல் படிக்கவும் ஆரம்பித்துவிடுவான்!"

இப்படித் தொடக்கப் பள்ளிப் பாடப் புத்தகங்களைப் பற்றிப் பெற்றோர்கள் பெருமையாகப் பேசிக் கொள்வதில் விந்தை என்ன இருக்க முடியும்?

நிறுவனம் வெளியிட்டுள்ள நூல்கள்



ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவைகளுக்குப் பாடப் புத்தகங்களையும், பிற பொது நூல்களையும் வெளியிட்டுப் புத்தக உலகில் ஓர் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறது ஒரு நிறுவனம். அது தான், இன்று தனிப்பெரும் நிறுவனமாகத் திகழும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம்.

தமிழ்நாடு எல்லாத் துறையிலும் பிற மாநிலத்தவர்க்கு வழி காட்டியாக விளங்கி வருவது போன்று, பாட நூல்கள் வெளியிடுவதிலும் ஒரு முன்மாதிரியாகவும் இருந்து வருகின்றது. ஆம்! இந்தியாவிலேயே இது முதல் நிறுவனமாக இருப்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

வரலாற்று நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ள இந்த நிறுவனத்தின் வரலாறு என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

**1959-ஆம் ஆண்டு!**

'கல்லூரித் தமிழ்க்குழு' என்ற பெயரால் தமிழ்நாடு அரசு ஒரு குழுவை நிறுவியது. அப்பொழுது புதிதாகத் தோற்றுவிக்கப் பட்ட 'தமிழில் கல்லூரிப் பாடங்களைக் கற்பிக்கும் முறை' யைக் கவனித்து, அதற்குரிய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களைத் தெரிந்தெடுத்துத் தேவையான பாட நூல்கள், சொற்பொழிவுக் குறிப்புகள், கலைச்சொல் அகராதி ஆகியவற்றைத் தயாரிப்பதில் அரசினர்க்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவதற்கென்றே இக் குழு தோற்றுவிக்கப்பட்டது. 1962-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வரை செயற்பட்ட இக் குழு மூன்று ஆண்டுகளில் கலை, விஞ்ஞானத் துறைகளில் 35 நூல்களை வெளியிட்டது.

பாட நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் 1960-ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

கல்லூரித் தமிழ்க் குழுவின் பணியைவிட, மேலும் விரிந்த அளவில் பணி புரிந்திட வேண்டு

மென்ற முடிவுடன் 1962-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' துவக்கப்பட்டது. கல்லூரித் தமிழ்க் குழு, வெளியீட்டாளர்கள் மூலம் நூல்களை வெளியிட்ட சூழ்நிலையை மாற்றித் 'தமிழ்

குறைந்த விலையில் பாடப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கோடு முதல் ஐந்து வகுப்புகளுக்குப் பாட நூல்கள் வெளிவந்துள்ளன. இது பெற்றோரையும் மற்றோரையும் மட்டுமல்ல, மாணவர்களையும் வெகு

கங்களின் விலை அதிகம் என்று கருதப்படுவதை இந்நிறுவனம் மறுக்கிறது. புத்தகத் தயாரிப்புச் செலவைப் பார்த்தால் இது எவ்வளவோ குறைந்த விலை என்று இதன் செயலாளர் விளக்குகிறார்:

# புத்தக மாமலை

வெளியீட்டுக் கழகம்' சொந்தமாகவே வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டது.

தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் ஆண்டுதோறும் பட்டப் படிப்பிற்கு உரிய நூல்கள் வெளிவந்தன. புகுமுக வகுப்பிற்கு நூல்கள் வெளியிட்டதோடன்றிப் பொதுமக்களுக்கான பொது அறிவு நூல்களையும் ஆண்டுதோறும் இது வெளியிட்டு வந்தது. பின்னர் அறிவியல் சார்ந்த பட்டப் படிப்பிற்கும் நூல்களை வெளியிடத் தொடங்கியது. இவ்வாறு 1962 ஏப்ரல் முதல் 1970 ஏப்ரல் வரை வரலாறு, புவியியல், புவியமைப்பியல், அரசியல், பொருளாதார வியல் வாணிகவியல், வேதியியல், இயல்பியல், கணிதவியல், சட்டவியல், மருத்துவ—மானிடவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பல்வேறு துறைகளில் 231 நூல்களைக் கவின்மிகு வகையில் கழகம் வெளியிட்டது.

1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் கல்லூரிப் பாட நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டது. பிறகு இது இரண்டாண்டுகளுக்குள், பல்வேறு துறைகளின் கலைச் சொற்கள், புகுமுக வகுப்பு, இளங்கலைப் பட்டப் படிப்பு, அறிவியல் சார்ந்த பட்டப் படிப்பு வகுப்புகளுக்குமாக 115 நூல்களை வெளியிட்டது. இன்றுவரை இது வெளியிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை 392.

படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், வண்ணப் படங்களோடு, குறித்த நேரத்தில்,

வாகக் கவர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

4, 7 வகுப்புகளுக்கு ஆங்கிலப் பயிற்சி ஏடுகளும், 9, 11 வகுப்புகளுக்குத் தமிழ் இலக்கண நூல்களும் வெளிவந்துள்ளன. மற்றும் உயர் நிலைப்பள்ளி, கல்லூரிக்கான தமிழ், கணக்கு, ஆங்கிலம், வரலாறு, புவியியல் அறிவியல் முதலான பாடப் புத்தகங்களும், 10-வது வகுப்புக்குச் சிறப்புப் பாடமாக உயிரியல் நூலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர தமிழ், ஆங்கிலத் துணைப்பாட நூல்களும் வெளியிடப்படுகின்றன.

பட்டப் படிப்பிற்குரிய நூல்களான கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், உளவியல், தத்துவம், மருத்துவம், அரசியல், வணிகவியல், பொருளாதாரம், வரலாறு முதலிய நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. கல்லூரிப் பாட நூல்களோடு, பார்வை நூல்களையும் (Reference Books) இது வெளியிடுகிறது.

பொதுவாக, வண்ணப்படங்களோடு வெளியிடப்பெறும் தொடக்கப்பள்ளிப் பாடப் புத்த

“பாடத் திட்டக் குழு பரிந்துரைத்ததைக் கருத்தில் கொண்டு பாட நூல்கள் பல வண்ணங்களிலும் பெரிய அளவிலும் பல பக்கங்கள் கொண்டதாகவும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் தமிழ்ப் பாட நூல்களை வெளியிட்டதனால், புத்தகங்களின் அடக்க விலை இப்போது உள்ள புத்தகங்களின் விலையைவிடக் கூடுதலாகிறது.

“தவிர, இப்போது நிர்ணயிக்கின்ற விலையே, இப் புத்தகங்கள் வழக்கில் உள்ள காலம் வரையில் நீடிக்க வேண்டும். அச்சுத் தாள் விலை ஏற்றம், அச்சுக் கூலி ஏற்றம் ஏனைய தக்க காரணங்களுக்காக விலையை மறுமுறை மாற்ற முற்படுவது குறை கண்டு பிடிப்பதாக இருக்கும். இன்றைய நிலையில் புத்தகங்களை வெளியிடுவதற்கு நிறுவனத்திற்கு ஆகின்ற செலவையும் அனுசரித்து ஒவ்வொரு புத்தகத்திற்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

“வழக்கத்திலிருந்த தமிழ்ப் பாட நூல்களைவிடப் புதிதாக வெளியிடப்பட்ட தமிழ்ப் பாட நூல்களின் விலை கிட்டத்தட்ட

பிழை திருத்துநர் பிரிவு



இரண்டு மடங்கு அதிகமாக இருந்தாலுங்கூடப் புதியதமிழ்ப் பாட நூல்கள் பெரிய அளவு இருப்பதுடன் அதிகப் பக்கங்களையும், அதிக வண்ணங்களையும் கொண்டுள்ளதால், விற்க வேண்டிய விலை கூடுதலாகிறது. தற்போது குறிக்கப்பட்டுள்ள விலையின்படி நிறுவனத்திற்கு நிகர இலாபமாக ஏற்படக்கூடிய முழுத் தொகை மிகக் குறைவாகவே இருக்கும். 4, 5 வகுப்புகளுக்கான புத்தகங்கள் ஒரே வண்ணத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளதால், அதில் கிடைக்கக் கூடிய ஆதாயம் 1, 2, 3 வகுப்புகளில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டிருப்பதால் ஏற்படும் அதிகச் செலவைச் சமன் செய்ய உதவி செய்கிறது. இந்நிலையில் ஆரம்ப வகுப்புகளுக்கு (1 முதல் 3 வகுப்பு) புத்தகங்கள் பல இலட்சங்கள் அச்சிடப்பட்டிருந்தாலும் மிகக் குறைந்த அளவே இலாபம் ஏற்பட ஏதுவாகிறது.)

''அதே சமயத்தில் இப் புத்தகங்கள் வழக்கிலுள்ளவரை ஓரளவுக்கு அச்சுத் தாள் விலை ஏறினாலும், அச்சுக் கூலி கூடினாலும் இதே விலையை வைத்து விற்கப் போவதால், 1 முதல் 5 வகுப்புப் பொறுத்தவரை நிறுவனத்திற்கு இலாபம் இல்லை என்ற நிலை ஏற்படக்கூடும். மேலும், அச்சுத் தாளை நிறுவனம் நேராக அரசிடமிருந்து வாங்காமல் நிர்ணயப்படி அவ்வப்போது பொதுச் சந்தையில் வாங்குகிறது. மேலும், இந்நிறுவனம், உயர்ந்த ரக அச்சுத் தாள்களையே உபயோகப்படுத்துகிறது.

''நமது மாநிலத்தில் சராசரி 1 முதல் 5 வகுப்புகளுக்கு 17 சதவிகிதம் அடக்க விலையைவிடக் கூடுதலாகிறது. பிற மாநிலங்களில் புத்தக விலை நிர்ணயிக்கப்படும் முறையைத் தெரிந்து கொண்டால், இந்தக் கூடுதல் விலைப் பிரச்சனை நன்கு தெளிவாகும்.

''ஒரு மாநிலத்தில் அடக்க விலையை விட $1\frac{1}{2}$ மடங்கு அதிகமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது 50 சதவிகிதம் அதிகமாக விலை குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கீகாரம் செய்யப்பட்ட அறிவியல் புத்தகத்திற்குப் பக்கத்திற்கு $1\frac{1}{2}$ காசு வீதமும் இதர பாட நூல்களுக்குப் பக்கத்திற்கு ஒரு காசு வீதமும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிறுவன அறிவியல் புத்தகத்திற்குப் பக்கத்திற்கு ஒரு காசைவிடக் குறைவாக உள்ளது.

''பிறிதொரு மாநிலத்தில் புத்தக விலையை அதன் பக்கங்கள், பாடங்கள், வண்ணப் படங்கள், எதிர்பார்க்கும் புத்தக விற்பனை முதலியவைகளைக் கவனத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

''மற்றொரு மாநிலத்தில் 1 முதல் 5 வகுப்புகளுக்கு விலை நிர்ணயம் செய்வதில் அடக்க விலை 65 சதவிகிதம். இதரவினங்களுக்கு 35 சதவிகிதம் என்ற அளவில் புத்தக விலை கணக்கிடப் பட்டுள்ளது.

**தமிழில்**
**முதல் செய்தியிதழ்**

**தமிழகத்தில் முதன்முதலாக கி. பி. 1833-ல் 'விருத்தாந்தி' என்னும் பெயரில் தமிழிலும் தெலுங்கிலும் செய்தி இதழ்கள் வெளியாயின. இதற்கு அடுத்து வெளிவந்த இதழ்களில் குறிப்பிடத்தக்கது, 'ராஜவர்த்தி போதினி'.**

குறிப்பிட்ட விவரங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் புத்தகங்களின் விலை குறைவாகவே உள்ளன''.

இந்நிறுவன நூல்களையெல்லாம் விற்பனை செய்வதற்குத் தமிழகம் முழுவதற்கும் விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை, செங்கற்பட்டுக்கு மட்டும் இந்நிறுவனமே நேரடியாக விற்பனை செய்கிறது. பிற மாவட்டங்களில் 56 மொத்த விற்பனையாளர்கள் உள்ளனர். கல்லூரிப் பாட நூல்கள் 20 சதவீதக் கழிவில் தரப்படுகின்றன. பொது மக்களும் இந்த வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

1972 மே திங்களிலிருந்து சூலை திங்கள் வரை 400 லாரிகளில் புத்தகங்கள் தமிழ்நாடு முழுவதற்கும் ஏற்றுமதி ஆயின. ஒரு லாரியிலுள்ள புத்தகத்தின் மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரம்.

இந்நிறுவனம் பட்டப்படிப்புக்காகவும், பட்ட மேற்படிப்புக்காகவும் பல்கலைக் கழகப் பாட நூல்களின் கைப்பிரதிகளைத் தமிழில் எழுதுவதற்கு 597 ஆசிரியர்களைப் பணித்துள்ளது.

இங்கு வெளியிடப்பெறும் நூல்கள் அரசினர் அச்சகம் தவிர, சென்னையில் உள்ள 32 தனியார் அச்சகங்களிலும் அச்சாகின்றன. இந்நிறுவனத்தில் மூன்று பேர் பிழை திருத்துநராக உள்ளனர். இவ்வலுவலகத்தில் மொத்தம் 82 பேர் பணி புரிகின்றனர்.

பாட நூல்களுக்கான ஒரு நிபுணர் குழு உள்ளது. இது ஒவ்வொரு துறை பற்றிய கையெழுத்துப் பிரதிகளையும் சரிபார்த்துத் திருத்திச் செப்பனிடுகிறது.

பாடப் புத்தகத்தினை எவர் வேண்டுமானாலும் எழுத அனுமதிப்பதில்லை. அத்துறையில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாவது அனுபவம் உள்ளவர்களாலேயே எழுதப்படுகின்றது.

நிறுவனத்துக்குச் சொந்தமான 'தாள்-புத்தகக் கிடங்குகள்' நுங்கம்பாக்கம், அமைந்தகரை, தண்டையார்ப்பேட்டை, வடபழனி, ஜார்ஜ் டவுன் ஆகிய பகுதிகளில் உள்ளன.

பள்ளிப் புத்தகங்களை வெளியிடும் இந்நிறுவனத்தின் புள்ளி விவரத்தைப் பார்ப்போமா?

ஓர் ஆண்டில் அச்சிடும் தாள்கள் வாங்குவதற்காக மட்டும் ஒரு கோடி ரூபாய் செலவாகிறது! அச்சுக்கூலி மட்டும் எழுபது இலட்சம் ரூபாயாகிறது. இவ்வாண்டில் இரண்டு மூன்று திங்களுக்குள்ளேயே ரூபாய் மூன்று கோடிக்கு நூல்கள் விற்பனையாகியிருக்கின்றனவாம். 1972—73-இல் இந்நிறுவனம் வெளியிட்டுள்ள எல்லா நூல்களின் எண்ணிக்கை சுமார் இரண்டரை கோடி இருக்கும்.

தமிழக அரசின், இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டமொன்றும் உள்ளது. ஒன்று முதல் மூன்று வகுப்புகளில், மதிய உணவு பெறும் பள்ளிச் சிறுர்கள் சுமார் பத்து இலட்சம் பேர்களுக்கு இலவசமாகத் தமிழ், கணக்கு, ஆங்கிலப் பாட நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளி மட்டுமின்றி எல்லா வகுப்புப் பாடநூல்களையும் நான்கைந்து வண்ணத்தில் கண்ணைக் கவரும் வகையில் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இந்நிறுவனத்திற்குள்ளது.

பிஞ்சு உள்ளங்களில் தெள்ளத் தெளியும் வகையில், கருத்துகளைப் பதிய வைக்கும் வண்ணம் பாட நூல்களை வெளியிடும் இந்நிறுவனத்தின் பணி, பாட நூல் வெளியிடும் துறைக்கே அணி செய்பவையாக இருக்கின்றன; பிற மாநிலத்தவரால் போற்றிப் புகழப்படும் இந்நிறுவனம், நாளையத் தலைமுறையினருக்கு நல்வழி காட்டும் நற்பணி மன்றமாக விளங்கி வருவதையும் நாம் பாராட்ட வேண்டும்.

—பி.வி.ஜி.



# இனிய கீதம் பாடும் இசைக் கல்லூரி

வசந்தா

சரசாங்கி

கமலா மனோகரி

ரவிச்சந்திரிகா

சாருகேசி

நீலாம்பரி

பூர்வகல்யாணி

தேவகாந்தாரி

இந்தப் பெயர்களெல்லாம் எந்தப் பெண்களையும் குறிப்பிட வில்லை. எழுபத்தேழு ராகங்களில் இவையும் சிலவாகும். இந்த ராகங்களையெல்லாம், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நேரே, சென்னை அடையாற்றிலுள்ள கர்நாடக இசைக் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டும்.

அடையாற்றிலுள்ள கிரீன் வேஸ் சாலையில், அமைதியான சூழ்நிலையிலே அழகாக வீற்றிருக் கிறது இந்த இசைக் கல்லூரி. இயற்கை எழில் கொஞ்சும் இந்த இடத்திலே இன்னிசையின் நாதம் எங்கும் பரவி ஒலிக்கிறது.

கல்லூரிக்குள் நுழையும்போது ராகம், தானம், பல்லவி மட்டுமா கேட்கிறோம்?

குழலின் இனிமை

யாழின் இன்னிசை

நடனத்தின் சதங்கை ஒலி

நாதசுரத்தின் நாதம்

இவைபோன்ற எத்தனையோ இசை ஒலிகளையெல்லாம் காதா ரக் கேட்டு மகிழ முடிகிறது.

தமிழிசையின் பெருமையைத் தரணியெல்லாம் பரவும் வகை செய்கிறது இந்தக் கல்லூரி. ஆம்! எத்தனை எத்தனையோ இசைவாணர்களை இது வழங்கிய வண்ணமிருக்கிறது. இங்கே பயின்றவர்கள் அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளிலும், ஐதராபாத், கேரளம், தில்லி போன்ற நகரங்களிலும் இசைப் பேராசிரியர்களாகப் பணியாற்றி வருகிறார்கள்.

1949-ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசின் ஆதரவோடு துவக்கப் பெற்ற இந்தக் கல்லூரி, 1956-ஆம் ஆண்டிலிருந்து முழுக்க முழுக்கத் தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தின் கீழ்ச் செம்மையாக இயங்கி வருகிறது.

இந்த இசைக் கல்லூரியில் பயிலும் மாணவர்களில் பெரும் பாலோர் பெண்களாவர். மாணவ, மாணவிகளில் பலர், பிற மாநிலங் களிலிருந்தும், இலங்கை, ஜப்பான் போன்ற நாடுகளிலி ருந்தும் வந்து பயிற்சி பெறுகின்ற னர் என்றால் அவர்களின் ஆர் வத்தை என்னென்பது! பெண்கள் இங்கேயே தங்கிப் படிப்பதற்கான அழகான விடுதி ஒன்றும் இருக் கிறது.

இந்தக் கர்நாடக இசைக் கல்லூரியில்தான் எத்தனை வகுப்புகள்! எத்தனை பயிற்சிகள்!

வாய்ப்பாட்டு, வீணை, யாழ், குழல், நடனம், மிருதங்கம், நாத சுரம், தவுல்—இப்படிப் பல வகுப்பு கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றுக்கும் அத்துறைப் பேராசிரியர் ஒருவர் ஆசிரியராக இருந்து கற்பிக்கிறார்.

அட்டை சொல்லும் கட்டுரை





பதின்மூன்று பேர் ஆசிரியர்களாக உள்ள இந்த இசைக் கல்லூரியில், சுமார் 140 பேர் இசைப்பயிற்சி பெற்று வருகின்றனர்.

கர்நாடக இசைக் கல்லூரியில் சேர என்ன தகுதி வேண்டும்?

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். வயது 18-லிருந்து 35 வரை இருக்க வேண்டும். என்றாலும், அவர்களுக்குச் சிறிதளவாவது இசையில் ஞானம் இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்தக் கல்லூரியில் சேர அவர்கள் தகுதி பெறுவார்கள். இசை அறிஞர்கள் கொண்ட ஒரு குழு, ஆண்டுதோறும் மாணவ, மாணவிகளைத் தேர்வு செய்கிறது. ஒவ்வொரு ஜூலைத் திங்களிலும் மாணவர் தேர்வு நடைபெற்று, மே திங்களில் கல்லூரித் தேர்வு நடைபெறுகிறது.

இசைத் துறையில் உயர்தரக் கல்வி இங்கு போதிக்கப்படுவதால், திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், ஐதராபாத் இசைக் கல்லூரி, சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்கள் இந்தக் கர்நாடக இசைக் கல்லூரிக்கும் வந்து மேலும் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்கின்றனர்.

சங்கீத வித்துவான், வாத்திய விசாரதா, நாட்டிய விசாரதா போன்ற பட்டப்படிப்புகள் இங்குக் கற்பிக்கப்படுகின்றன. சங்கீத வித்துவான் படிப்பு இரண்டு ஆண்டுகளாகும். இசையின் எல்லா அடிப்படைக் கருத்துக்கள், இலக்கணங்கள், இசைக் கருவிகளின் தன்மைகள் முதலிய எல்லா விவரங்களும் கற்பிக்கப்படுகின்றன. தேர்வு பெற்றதும் இவர்களுக்குச் 'சங்கீத வித்துவான்' என்ற பட்டம் வழங்கப்படுகிறது. பல்கலைக் கழகங்களில் நடப்பது போன்றே இங்கும் பட்டமளிப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

இசையோடு மட்டும் இவர்கள் நில்லாமல் தமிழ் மன்றம், கருத்தரங்கு, ஆண்டுவிழா, விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளுக்கும் இசைந்து இணைந்து செயல்படுகிறார்கள். இங்கு மாணவர்களால் நடத்தப்படுகின்ற தமிழ் மன்றம் திங்கள்தோறும் இன்னிசைக் கச்சேரி ஒன்றுக்கு ஏற்பாடு செய்கிறது. கச்சேரி செய்பவர்கள் வெளியில் உள்ள இசை மேதைகளாகும். இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள இந்தக் கச்சேரிகள் மாணவர்களுக்கு வெகுவாகப் பயன்படுகின்றன. மேலும் வானொலி இசைப் போட்டிகளில், கலந்துகொள்ளவும், வெளியில் கச்சேரிகள் செய்யவும் இங்குள்ள மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.



பரத நாட்டிய வகுப்பில் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் பயிற்சி பெறுகின்றனர்; மிருதங்கத்திலும் அவர்கள் சளைத்தவர்களல்ல என்பதை அந்த வகுப்பைப் பார்த்தால் தெரிகிறது.



திருமணமா? திருவிழாவா? என்று இசை வரும் திசை நோக்கிப் பார்க்கிறோம். நாதசுர ஒலி காற்றிலே மிதந்து வருகிறது. அங்கே போய்ப் பார்த்தால் 'நாதசுர வகுப்பு' என்ற பெயர்ப் பலகை காணப்படுகிறது. மாணவர்கள் வரிசையாக அமர்ந்து நாயனம் வாசிக்கின்றனர். தாளமும், தவுலும் இணைந்து இசையோடு கலககின்றன. இந்த வகுப்புக்கு ஒரு தனிச் சலுகை உண்டு. அதுதான் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதாகும். இசைத்துறையில் நாதசுரம், தவுல் ஆகியவற்றுக்குச் சிறப்பான இடமுண்டு என்பதை நாமறிவோம். இதனைக் கற்றுக்கொள்ளச் சிலரே முன் வருகின்றனர். ஆகையால், இக்கலையை மேலும் வளரச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இதனைப் பயிலும் மாணவர்க்கு ஆக்கம் அளித்து ஊக்கம் தருகிறது அரசு. இந்த வகுப்பில் இப்போது மொத்தம் பதினைந்து பேரே பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்களுக்கு மாதம் ரூபாய் அறுபது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு ஒரு நூல் நிலையம் இருக்கிறது. இசைக் கலை சம்பந்தமான நூல்கள் பல, மாணவர்கள் ஐயத்தைப் போக்க உதவுகின்றன. இன்னிசையின் நாதங் கேட்டுத் தானோ என்னவோ இங்கே பாம்புகள் அவ்வப்போது படையெடுத்து வருகின்றனவாம்!

கற்றோரையும், மற்றோரையும் கவர்ந்திழுக்கும் இசைக்கலை, திசை தோறும் பரவிடத் தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வளர்த்து வருகிறது. கர்நாடக இசைக் கல்லூரிக்காகத் தமிழ்நாடு அரசு, ஓராண்டுக்கு ஒரு இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிடுகிறது. நல்ல இசைக் கலைஞர்களைத் தமிழகத்துக்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கும் வழங்கிடத் தமிழ்நாடு அரசு உறுதுணையாக இருக்கிறது என்று இசைத் துறை வல்லுநர்கள் போற்றிப் பாராட்டுகின்றனர்.

அண்மையில் கல்வி அமைச்சர், இதை ஓர் இசைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்காகத் திட்டம் அரசிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

—பி. வி. ஜி.





# இங்கே...

சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனுகக் கருதப்படுகிருன். சிந்தனையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. மனிதனைப் பிறந்தவன் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் மனிதனுடைய எண்ணங்கள் உரிய உருப்பெற்றுச் சிறப்படையும். சிந்திப்பது மனிதனுடைய தனி உரிமை! சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன்.

**ஐன்ஸ்டைன்**

உருத்திராக்க மணிகளை உருட்டுவதை விட்டு விடு: மந்திரமும் தந்திரமும், ஆடலும், பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாழிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்ருய்?' கண்ணைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கின்ருன். அவர்களுடன் அவன் மழையில் நனைகிருன்; வெயிலில் உலர்கிருன். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைத் தூக்கியெறி: அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும் புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உனது ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உன் இறைவனைக் கண்டு கொள்.

—தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து.

இந்த உலகில் மிகவும் புரட்சிகரமானது எதுவென்ருல், அது தான் கல்வி. ஓர் எழுத்தைக் கற்றுத் தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். ஒரு பள்ளியைத் தோற்றுவிப்பது என்பது எதிரியைத் தாக்க ஒரு கோட்டை கட்டப்படுகிறது என்று பொருளாகும்.

—இங்கர்சால்.

முட்டாளின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது. ஆனல் புத்திசாலியின் வாயோ அவன் இருதயத்துக்குள் இருக்கிறது.

—பெஞ்சமின் பிராங்க்ளின்.

"சந்தனத் திருமேனி தாங்கி
வந்த நம் காந்தி, தான்கொண்டு
குறளுரை எழுதாமல், தனது
வாழ்நாள் கொண்டே எழுதியவர்;
நடை, சிறந்த உரையாளர்!

கால் தடுமாறினல் சமாளித்துக் கொண்டு நிற்கலாம். ஆனல் நாக்குத் தவறினல் நீங்கள் மீளவே முடியாது.

உழைப்பு மூன்று பெருந் தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது; அவையாவன: தொந்தரவு, தீயொழுக்கம், வறுமை.

— வால்டேர்.

ஒரு பெரியார், 'திங்கள், மலர், சங்கீதம், பெண், கிறித்து ஆகிய இவ்வைந்தும் தம் உள்ளத்துக்கு இன்பமூட்டும் பொருள்கள்' எனக் கூறியுள்ளார். யான் இவ்வைந்தும் பெண்ணே என்று சொல்வேன். அழகிய திங்களையும், செழிய மலரையும், இன்பப் பாட்டையும், அன்புக் கிறித்துவையும் பெண் தெய்வத்தினிடத்தில் காண்கிறேன்.

எவர்க்கும் எல்லாவற்றிற்கும் தாய் பெண்ணே. தாயாக ஈன்று தங்கையாக நேசித்து தாரமாகக் காப்பவள் பெண்ணே. அத்தகைய பெண்ணைத் தெய்வமாக அன்றே தொழுதல் வேண்டும்.

— திரு. வி. க.

நீங்கள் விதைக்கிறீர்கள்; அயலான் அறுக்கிருன். நீங்கள் செல்வத்தைத் தேடுகிறீர்கள்; இன்னொருவன் துய்க்கிருன். நீங்கள் நெய்யும் ஆடைகளை மற்றவர்கள் அணிகிருர்கள். நீங்கள் செய்யும் படைக்கலங்களை வேருெருவன் தாங்குகின்ருன்.

விதையை விதையுங்கள் - ஆனல் எந்தக் கொடுங்கோலனையும் அறுக்கவிடாதீர்கள். செல்வத்தைத் தேடுங்கள் - ஆனல் எந்த ஏமாற்றுக்காரனையும் அதை அனுபவிக்க விடாதீர்கள்; ஆடைகளை நெய்யுங்கள் - ஆனல் சோம்பேறிகள் அவற்றை அணிய விடாதீர்கள்; படைக்கலங்களைச் செய்யுங்கள் - ஆனல் அவற்றை உங்கள் தற்காப்புக்காகவே தாங்கி நில்லுங்கள்.

— ஷெல்லி.

# தங்கச் சுரங்கம்




## 11. வலை விரிந்தது

முற்பகல் கோடை வெய்யில் கொளுத்தும் போது, இந்த அடர்த்தியான தோப்பின், இயற்கையான குளுமையை அனுபவித்துத்தான் அறிந்து கொள்ள முடியும்.

முல்லைக்காலுக்கு வடபுறம், சற்று மேட்டுப் பாங்கான சமதளத்தில் இருக்கும் வேலாயுதத்தின் தென்னந்தோப்பில் ஐநூறு மரங்களுக்கு மேலிருக்கும். கிழக்குக் கோடியில் கிணறும், ஆயில் என்சினும் இருக்கிறது. கரையிலிருந்து திரும்பும்போது, தோப்பின் முகப்பிலிருந்து சற்று உள்ளே தள்ளிச் சிறிய வீடு. நாள் பூராவும் இங்கேயே தங்கலாம். அத்தனை வசதிகளும் உண்டு.

வேலாயுதம் பெரும்பாலும் இங்கேதான் இருப்பார். அவர் இருந்தால் வில்வண்டி நிற்கும். தோப்புக்குள்ளே ஒரு கும்பலும் கூடி இருக்கும்.

வேலாயுதம் உள்ளேதான் இருக்கிறார்.

வீட்டைச் சுற்றிலும், தரவாரியாக, நான்கைந்து பேர்களாக உட்கார்ந்து, அவர்களுக்குள்ளேயே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர், இந்த அடிதடி வழக்கில் போலீஸ் விசாரணை என்று ஆரம்பித்த நாளிலிருந்து, உருட்டி முத்தையாவின் தலைமையில், மொத்தச் செலவில் தங்கி இருப்பவர்கள்.

பாண்டியனையும் லிங்கத்தையும் அழைத்துக் கொண்டு போனார்கள், கைதியாகத்தான்! —பின்னே, அடிபட்டவன் செத்துக்கொண்டிருக்கும் போது சும்மா விடுவார்களா? ஆனால், அவனுக்கும் இத்தனை படை இருக்கும் என்பதை இங்கே யாருமே எதிர்பார்க்கவில்லை. உள்ளூரில் யாருமே தலையைக் கொடுக்காவிட்டாலும், வெளியூரிலிருந்து, 'நான்', 'நீ' என்று முந்திக்கொண்டு, சொத்து விவரக் குறிப்புகளோடு, எத்தனையோ பட்டாதாரர்கள் கூடவே சென்றனர் பாண்டியனை அழைத்து வர.

மறுநாளே ஜாமீனில் வந்து விட்டதாகக் கேள்வி.

'உள்ளூரில், உற்றம் சுற்றம் என்பதையெல்லாம் பகைத்து நிற்கும் நேற்றுப் பிறந்தவனுக்கு அக்கம் பக்கத்தில் இவ்வளவு செல்வாக்கா?' என்பதில் ஏற்பட்ட திகைப்புக்கும், எரிச்சலுக்கும் மத்தியில், கோத்திருக்கும் வழக்கில் பாண்டியனது தலை நிச்சயமாகத் தப்பாது என்ற உறுதியில் ஒரு திருப்தியும் இங்கே நிலவுகிறது. உருட்டி முத்தையா, சம்பவத்தை நேரில் கண்ட முதல் சாட்சியாக நிற்கும் போது, வழக்கு விடுபட்டுப் போகுமா?

வீட்டிற்குள்ளே, உள் அறையில் வேலாயுதமும், நாச்சிமுத்துவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவன் சற்றுமுன்புதான் நிலக்கோட்டையிலிருந்து வந்திருக்கிறான்.

நாச்சிமுத்து இரண்டாவது சாட்சியாக உருவாக்கப்பட்டிருப்பவன். இவனுக்கு வயது நாற்பதுக்குள்ளாகத்தான் இருக்கும். என்றைக்குமே வேலாயுதத்திடம் நெருங்கி இருப்பவர்களில் ஒருவன். கரையடியில் வண்டியை மறித்து நடந்த தகராறையெல்லாம் நேரிலே பார்த்ததாகப் போலீஸ் விசாரணையின் போது சாட்சி சொல்லி இருப்பவன். நாளைக்கும் கோர்ட்டிலும் சொல்லப் போகிறவன்.

சன்னலோரமாகப் பிரம்பு நாற்காலியில் சாய்ந்திருக்கிறார் வேலாயுதம். முன்பாக, மேல் துண்டைக் கையிலே சுருட்டிக் கொண்டு, பணிவோடு நிற்கிறான் நாச்சிமுத்து.

''என்னடா—மாமாவை இன்னும் காணலையே'', என்று திரும்பிப் பார்த்துக் கேட்டார் வேலாயுதம்.

''நானும் அவரும் ஒண்ணாத்தானே வந்தோம். நீ முந்திப் போ—வீட்டுக்குப் போயிட்டு வாரேன்னு போனாரு'' என்ற நாச்சிமுத்து, சற்று நிறுத்தி, ''இப்பத்தாங்க பெரிசு யாருன்னு புரியுது. கச்சேரியிலே என்னென்ன சட்டமெல்லாம் பேசுறாரு'' என்று வியப்போடு சொன்னான்.

வேலாயுதம் சிரித்துக் கொண்டார்.

''சட்டம் படிச்சவங்களுக்கே, மாமா, பாயிண்ட் எடுத்துக் கொடுப்பாரே. இன்னைக்கி நேத்து அனுபவமா? நம்ம சடையன் கேசுக்கு மாமா இருந்து நடத்தலையின்னா ஜென்மமில்லே சொல்லி இருப்பான் என்று சொல்லி முடிப்பதற்குள், வாசலிலே முத்தையாவின் தலையும் தெரிந்தது.

''இப்பத்தான் மாமா.... சொல்லிக்கிட்டிருக்கேன். நீங்களும் வாரிங்க. நூத்துக்கு மேலேயும் சாகமாட்டிங்க'' என்று சொல்லி, மலர்ந்த முகத்தோடு வரவேற்றார் வேலாயுதம்.

''போதுமே மாப்பிள்ளை. அவ்வளவுக்கு இந்த மண்ணிலே கிடந்து அழுந்தணுமா? நடக்க வேண்டியதை முடிச்சு வச்சுப் போட்டுச் சீக்கிரமே போய்ச் சேரணும்'' என்ற முத்தையா நெருங்கி வந்து, நாச்சிமுத்து தூக்கிவந்து போட்ட நாற்காலியில் உட்கார்ந்து, வழுக்கைத் தலையில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

அதற்குள் நாச்சிமுத்துவும், வெளியில் போய்விட்டான்.

''என்ன சொல்றான் பயல்?'' என்று, அவன் தலை மறைந்ததும் கேட்டார் முத்தையா.

''நாச்சிமுத்து உங்க மேலே உயிரையே வச்சிருக்கான். எப்பவும் உங்க கூடவே வச்சிக்குங்க'' என்றார் வேலாயுதம்.

''இவங்ககிட்ட உயிரைத் தவிர வேறே என்ன இருக்கு?'' என்று கேட்ட முத்தையா, எழுந்து சென்று கதவைத் தாழிடாமல் அடைத்து விட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தார்.

''ஒரு தகவலும் தெரியாம இருக்கேன்னுதான் ஐயம்பெருமாளை அனுப்பி வச்சேன்'' என்று ஆரம்பித்தார் வேலாயுதம்.

''அவரு வரலையின்னாலும் இன்னைக்கும் என்னாலே வந்திருக்க முடியாது''.

''பொன்னையா எப்படி இருக்கான்''.

''பொன்னையா கொஞ்சம் தெளிவாத்தான் இருக்கான். ரெத்தம் செலுத்திக்கிட்டிருக்காங்க. இப்ப அவன் பெண்சாதி சிவந்தி இருக்காளே, அவதான் இப்ப நமக்கு பிரச்சனையா இருக்கா. அவளுக்கும் ஒரு பாதை வகுத்துக் கிட்டுத்தான் வந்திருக்கேன்'' என்றார் முத்தையா.

''அவளையும் உள்ளே இழுத்துப் போடாம. கால்லே விழுகிறவளை உயரே தூக்கி வச்சுக்கிட்டு'' என்றார் வேலாயுதம் அவசரத்தோடு.

முத்தையா சொன்னார்.

''நடக்கிறதை நமக்குச் சாதகமாப் பயன்படுத்திக்கணும். இடையிலே சிவந்தியைப் பாண்டியன் சந்திச்சிருக்கான். அவளை வச்சு, பொன்னையாவோட வாயைக் கிளறிப்பார்க்கவும் முயற்சிகள் நடந்திச்சு. நானும் முந்திக்கிட்டுப் பொன்னையாவைப் பொறுத்த வரையிலும் ஒரு அணையைப் போட்டு வச்சேன்'' என்றார்.

வேலாயுதத்தின் முகத்தில் பரபரப்புத் தென்பட்டது.

''என்ன மாமா சொல்றிங்க?'' என்றார்.

முத்தையா குரலைத் தணித்துக் கொண்டு சொன்னார்.

''கொடுத்திருக்கிற வாக்குமூலத்துக்கு விரோதமா சிவந்திகிட்ட எதையாவது சொல்லி வச்சா என்ன ஆகும்?'' பொன்னையா கிட்டத் தனியா, ''ஏற்கெனவே பாண்டியனுக்கும் சிவந்திக்கும் தொடர்பு இருந்திருக்கு. அவகிட்ட எந்தப் பேச்சும் வச்சுக்காதேன்னு சொல்லி அவன் வாயை மூடியிருக்கேன். இப்ப அவளும் இங்கேதான் வந்திருக்கா. பாண்டியனை எப்படியும் சந்திக்கப் போறான்னு எனக்கும் தெரியும். விட்டுப் பிடிச்சிருக்கேன்.'' என்றார் முத்தையா.

''இடையிலே எந்த வழுக்களும் இருக்கப்படாதுன்னு நான் பதறிப் போயிருக்கேன். இவளை இந்த நேரத்திலே, அவன்கிட்ட தள்ளிவிட்டுச் சுத்தி வளைக்கணுமா?'' என்று அவசரத்தோடு கேட்டார் வேலாயுதம்.

''இப்ப எதுவும் கெட்டுப் போகலே. இப்பப் பொன்னையாவுக்கு நினைவு வந்தாலும் அவளைத் திரும்பிக்கூடப் பாக்கிறதில்லை. இதை நினைச்சுப் பதறிப்



போய்தான் அவளும் பாண்டியனைத் தேடி இங்கே வந்திருக்கா. ஏற்கெனவே இவனுக்கும் அவளுக்கும் உறவு இருக்குங்கிறது உறுதியாகிப் போகுது. இதை ஊருக்குள்ளே விதைச்சுவிட எவ்வளவு நேரமாகும்? சம்பவம் நடந்ததுக்கு, இந்தத் தொடர்ச்சியும் ஒரு காரணம்மன்னு வரும்போது, கேசு வலுவாகும். யாராலேயும் உடைக்க முடியாது. நானும் காலத்தையும் நேரத்தையும் கணிச்சுக் கிட்டுத்தான் வாரேன்.''

''இந்த வகையிலே உங்க யோசனையே தனி மாமா?'' என்று உளமாரச் சொல்லி மெச்சிக் கொண்டார் வேலாயுதம்.

''இப்ப இங்கே தங்க நேரமில்லே. உடனடியாத் திரும்பியாகணும்'' என்ற முத்தையா, ''பெரியவர் எப்படி இருக்கார்?'' என்றும் கேட்டார்.

''அவ்வளவுதான். ஏற்கெனவே மகளை நினைச்சு ரெத்தக் கொதிப்பு இருக்கு. இந்த வேக்காடும் அணையாம பாத்துக்கிட்டாப் போதும். அப்புறம் இன்னொரு தலைமுறைக்கு உன்னை அசைக்க முடியாது.'' என்று சிரித்துக் கொண்டே சொல்லித் தனது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டார் முத்தையா.



மனத்திலே புதிய உற்சாகத்தோடு, நன்றாகச் சாய்ந்து கொண்டார் வேலாயுதம். சன்னல் பக்கமாகப் பார்த்தவர் வேறு நினைவில் மூழ்கி விட்டார்.

அன்றைக்கு நடந்தது, இருவரைத்தவிர வேறு யாருக்குமே தெரியாது. ஊராட்சித் தேர்தலின் போது., உச்சக்கட்டத்தில், பின் தொடர்ந்தே சென்று, பாண்டியனை நிலக் கோட்டையில் தனியே சந்தித்தார் வேலாயுதம். இந்த ஒரு தடவை விட்டுக் கொடுக்கும்படி, காலில் விழாத குறையாகக் கெஞ்சிய போது, எவ்வளவு அகம்பாவத்தோடு சிரித்தான் அந்தச் சிறுவன். அதற்கான தண்டனைதான் நாளைக்கு அவனுக்குக் கிடைக்கப் போவது. இவனையும் உள்ளே தள்ளிவிடும்போது, ஓடிப்போய் தாலி கட்டிக் கொண்டவளா, படியேறி வந்து, குறுக்கே நிற்கப் போகிறாள்? இருக்கும் சொத்துகளைத்தான் எண்ணத் தொலையுமா? அதில் கொஞ்ச நாள் காலூன்றி நின்றாலே போதுமே. எப்படியும்—அவனை அனுப்பிவிட வேண்டும்.

அதுவரையிலும் மாமா கையில் ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்துக் கொண்டிருந்தால், வெற்றியை இழுத்துக் கொண்டு வந்துவிட மாட்டாரா?

பெருமூச்சு உடலை அசைத்தது.

முத்தையா திரும்பிப் பார்த்தார்.

நினைவில் ஓடுவது—முகத்தில் தெரியாதா என்ன?

முத்தையாவின் முதிர்ந்த அறிவு நடப்பதையும், நடக்கப் போவதையும், எடைபோட்டுக் கொண்டிருந்தது.

விட்டதும், தொட்டதும், எல்லாமே வேலாயுதத்துக்குக் கிடைத்துவிடும் தான். இடையிலே முன்னால் நின்று, பாண்டியனை ஒழித்துக் கட்டுவதில் முத்தையாவுக்கு என்ன லாபம் இருக்கிறது? வேளா வேளைக்கு, வாய்க்கு ருசியாகச் சாப்பிடலாம். வேண்டும் போது, நூறோ ஆயிரமோ கிடைக்கும். உயிரோடு ஒருவனைக் குழியிலே தள்ளி மண்ணைப் போடுவதற்கு இது போதுமா?

முத்தையாவின் பேத்திப் பெண்ணை, அந்த லிங்கத்துக்குக் கொடுப்பதெனக் கிழவியும் ஒப்புக் கொண்டு நாள் குறித்திருக்க, யாரையும் மதிக்காது, கழுத்தில் மாலையோடு வந்து நின்றவனையும் சேர்த்துக் கம்பிக்குள் தள்ளும்போது, நினைத்ததில் ஒன்று நடக்கிறது.

### அறப்பணிகளுக்கு ஆலயப் பணம்

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மாதா கோவில் பணம், மனிதாபிமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதற்கென்று பொருளாதார வளர்ச்சி நிதி என்ற பெயரில் நிதியை உருவாக்கியிருக்கிறார்கள். 10 கோடி மார்க் (ஜெர்மன் நாணயம்) தொகைக்கு மேல் இம்மாதிரி மனிதாபிமானப் பணிகளின் தர்மத்திற்கு மாதா கோவில்கள் அளித்துள்ளன. இத்தகவலை வளர்ச்சி—உதவிச்சங்கத் தலைவர் ஆல்வின் புருச் தெரிவித்திருக்கிறார்.

இத்தோடு முடிகிறதா? இன்னும் மாலை பூக்காது உட்கார்ந்திருக்கும் பேத்திக்கு, ஊரெல்லாம் மெச்ச உயர்ந்த இடத்தில் திருமணம் செய்துவைக்க வேண்டாமா? வடக்கு தெற்கு தெரியாதவன், முத்தையாவின் மருமகன் காடுபட்டியான், அவனுக்கே இப்படியொரு யோசனை தோன்றியிருக்கும் போது நடத்தி வைக்க வேண்டியதுதானே.

''என்ன மாமா யோசனை பலமாயிருக்கு?' என்று இடையிலே கேட்டார் வேலாயுதம்.

முத்தையா குலுங்கினார்.

''நினைக்கிறது நடந்தாகணும் அந்த யோசனைதான்!'' என்றார்.

''என்ன ஆனாலும் சரி மாமா? இந்தப் பயலை இத்தோட நசுக்கிப் போடணும். பணம் எவ்வளவு செலவானாலும் அதைப் பத்திக் கவலைப்படாதிங்க'' என்று சொல்லி மாமனை ஊக்கப்படுத்தினார்—வேலாயுதம்.

முத்தையா உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். அவர் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள், கதவைத் தள்ளும் சந்தடி கேட்டுத் திரும்பினார்.

கந்தையா வந்து கொண்டிருந்தான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, வேலாயுதத்தின் வீட்டில், சாப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துக் கொண்டிருப்பவன். பேசும் போதும், நடக்கும் போதும் பெண்மையின் சாயல் இருக்கும். இவனது கைச்சமையலை நளபாகம் என்பார்கள். வேலாயுதம் உட்பட, கந்தையாவை யாருமே அதட்டிச் சொல்லிவிட முடியாது. அத்தனை செல்வாக்கு.

உள்ளே வந்தவன், நின்று, முத்தையாவையும் ஒரு பார்வை பார்த்து விட்டு, மூலையில் குவிந்து கிடந்த தேங்காய்களில் முற்றியவையாகப் பொறுக்கியெடுத்து, ஒரு குட்டிச்சாக்கில் போட்டுக்கட்ட ஆரம்பித்தான்.

''வீட்டு வேலையை விட்டுப் போட்டு, இவன் எதுக்கு இங்கே வந்திருக்கான்?'' என்று முத்தையா கேட்பதும் இவன் காதுகளில் விழுந்தது.

கந்தையாவுக்கு என்றைக்குமே—இந்த வழுக்கைத்தலைக் கிழவனைக் கண்டால் பிடிக்காது.

நேரா நேரத்துக்கு வீசம்படி நெய்யையும் கொட்டித் தின்று விட்டுக்கூடவே, ஒட்டிக்கொண்டு இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிக்கொண்டு . . . .

குழந்தையைப்போலக் குட்டிச் சாக்கை இடுப்பிலே தூக்கி வைத்து அணைத்துப் பிடித்தவாறு, எதிரிலே போய் நின்றான் கந்தையா. அவனுக்கென்ன பயமா ?

''சமயலுக்குத் தேங்கா வேணும்னு நானும் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டேன். தோப்பிலேயிருந்து தினைக்கும் எத்தனை பேரு திங்கிறதுக்கு வாராங்க. யாராவது கொண்டாராங்களா ? இதுக்கும் நான்தான் வேலைமெனக்கெட்டு வரவேண்டியிருக்கு. இதுக்கொரு பேச்சா?'' என்று மூக்கிலே விரலை வைத்துக் கேட்டான் கந்தையா.

முத்தையா முகத்தை திருப்பிக் கொண்டார்.

''சீக்கிரம் போடா. மாமாவுக்குப் பால் பாயாசம் செய்து வை. என் கையாலே போடணும்.'' என்றார் வேலாயுதம்.

'' எம்புட்டு நேரமாகப் போகுது அந்தப் பாயாசத்தைத் செய்து வைக்க'' என்ற கந்தையா போய் விட்டான்.

வேலாயுதம் சிரித்தார்.

''உங்களுக்கும் கந்தையாவுக்கும் எப்பவும் போட்டிதான்!'' என்றார்.

கந்தையாவின் நடையழகை ரசித்த எரிச்சலுடன் திரும்பினார் முத்தையா.

''முதல்லே நம்ம வீட்டுக்குச் சீதேவி வரணும். அப்பத்தான் எல்லாமே கூடிவரும்'' என்றார் சற்றுப் படபடப்புடன்.

''அவன் கைச் சமையலைச் சொல்லுங்க. அந்தப் பக்குவம் வேறே யாருக்கு மாமா வரும்?'' என்றார் வேலாயுதம் வெகுளியாக.

''உனக்கு எதுதான் புரியப் போகுது? நம்ம மைனர் நடேசனுக்கு உடனடியா கல்யாணத்தை முடிச்சுப் போடணும்'' என்று உத்தரவிடுவது போல் சொன்னார் முத்தையா.

''அவனுக்கென்ன வயசாகிப் போச்சு. போன தையோட இருபத்திரண்டு முடியுது.''

''நடேசன் எப்பவோ சுவரேறிக் குதிச்சிட்டான். அவன் வயசிலே நீ திரியலையா ?'', என்று கேட்டார் முத்தையா.

வேலாயுதம் சாய்ந்து கொண்டார்.

''நானும் அதை நினைக்கத்தான் செய்யிறேன். தாயில்லாப் பிள்ளையின்னு செல்லமா வளத்தாச்சு. படிக்கத்தான் இல்லையின்னாலும் இன்னமும் எதிலேயும் பொறுப்பு வரலையே'' என்றார் பெருமூச்சோடு.

''கால்கட்டைப் போடு. பொறுப்புத் தன்னாலே வரும்'' என்றார் முத்தையா அவசரத்துடன்.

''செய்யணும். அப்பவாவது ஊரைச் சுத்தாம வீட்டோட இருக்கானா பாக்கலாம்'' என்றார் வேலாயுதம் திரும்பாமலே.

முத்தையா நிமிர்ந்து உட்கார்ந்தார்.

உள்ளத்தில் இருப்பதைச் சொல்லுவதற்கென்று, இருக்கும் அவசரத்தில், இனியும் ஒரு நேரம் வந்து நிற்கப் போகிறதா ?

அவர் நிதானித்து வாயெடுப்பதற்குள், வாசலில் ''ஐயா'' என்றழைக்கும் குரல் கேட்டது. சொல்ல எண்ணியது உள்ளுக்குள்ளேயே அமுங்கிப் போயிற்று.

உட்கார்ந்தபடியே திரும்பி, 'யாரது?' என்று குரல் கொடுத்தார்.

உள்ளே நுழைந்து, எட்டத்திலேயே பணிவோடு நின்று, ''ஐயா உங்களைக் கூட்டியாறச் சொன்னாங்க'' என்று சொல்லி நின்றான், குருபாதத்தின் பண்ணையாட்களில் ஒருவன் சின்ன வெள்ளை.

''நீ முன்னாலே போடா. . . . . வாரேன்'' என்றார் வேலாயுதம்.

சின்ன வெள்ளை சென்றதுமே, ''நிலத்தைப் பக்குவமா உழுது வச்சிருக்கோம். விதைக்கிறதெல்லாம் முளைக்கும். எப்பவும் நாம் முந்திக்கணும்'' என்று அடியெடுத்துக் கொடுத்தார் முத்தையா.

''நீங்க வண்டியைப் போடச் சொல்லுங்க மாமா!'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் வேலாயுதம்.

(வளரும்)

**நம் நாட்டில் பாதுகாக்கப்படும் காட்டு விலங்குகள்**

1. சிங்கம், 2. புலி, 3. வெள்ளைப் புலி, 4. வேட்டைச் சிறுத்தை 5. மரமேறும் சிறுத்தை 6. பனிச் சிறுத்தை, 7. சிவிங்கிப் பூனை, 8. பெரிய புனுகுப் பூனை 9. தங்கநிறப் பூனை, 10. சலவைக் கல் போன்ற பூனை, 11. புள்ளிப் பூனை, 12. அஸ்ஸாம் குரங்கு, 13. சின்னப் பாண்டா, 14. சதுப்பு நிலக்கலைமான், 15. மணிப்பூர் கொம்பு மான், 16. நான்கு கொம்பு மான், 17. கறுப்பு மான், 18. சிங்காரா வகை மான், 19. காஷ்மீர் மான், 20. கஸ்தூரி மான், 21. ஒற்றைக் கொம்பு காண்டா மிருகம், 22. சின்னக்காட்டுப் பன்றி, 25, காஷ்மீர்காட்டு ஆடு, 26. மலை ஆடு, 27. காட்டுக் கழுதை, 28. இமாலயக் காட்டு ஆடு (தாகின்), 29. முதலை, 30. மலைப் பாம்பு, 31. எறும்பு தின்னி 32. பெரிய இந்திய பஸ்டர்ட், 33. வெள்ளைக் காட்டு வாத்து, 34. சிகப்புத் தலை வாத்து, 35. மயில், 36. ட்ராகோபான்ஸ் (ஒருவகை வான் கோழி), 37. பட்டாம் பூச்சி.

**வெள்ளைப் புலிகள்**

உலகில் இன்று 39 வெள்ளைப் புலிகள் இருக்கின்றன. இவற்றில் 25 இந்தியாவிலும், 10 இலண்டனிலும், 4 அமெரிக்காவிலும் இருக்கின்றன. இந்தியாவில் டில்லியில் 13-ம், கல்கத்தாவில் 7-ம், ரேவா அரண்மனையில் 5-ம் இருக்கின்றன.

புத்தம் புதிய ரகங்களும், சாகுபடி முறைகளும் ஆராய்ச்சி நிலையங்களிலே நித்தம் நித்தம் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அப்புதிய ரகங்களும், சாகுபடி முறைகளும், நெற்றி வியர்வை நிலத்திலே விழப் பாடுபட்டு வரும் ஏழை எளிய உழவர்களிடையே பரவா விட்டால், பலகோடி ரூபாய் செலவில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களால் பயன் கிட்டாது. நாட்டில் எதிர்பார்க்கப்படும் உற்பத்திப் பெருக்கமும் கானல் நீராகவே இருக்கும்!

''ஆராய்ச்சி நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ரகங்களும், புதிய சாகுபடி முறைகளும் பாமர உழவர்களை வந்தடையாவிட்டால் ஆராய்ச்சியின் நோக்கம் முற்றுப் பெறுது'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவன்று குறிப்பிட்டார்.

இவைகளை மனத்திற்கொண்டே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அண்மையில் ''தகவல் தொடர்பு நிலையம்'' ஒன்றைத் துவக்கிப் புதிய கண்டுபிடிப்புகளைப் பல்வேறு விரிவினை முறைகளில் பரப்பி வருகிறது. உழவர்களின் உயர்விலே நாட்டம் கொண்டுள்ள ''தமிழரசு'', தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ''தகவல் தொடர்பு நிலையம்'' அவ்வப்பொழுது அனுப்பி வரும் தகவல்களைத் தொகுத்து ''தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்'' என்ற தலைப்பிலே 16—9—1972 ''தமிழரசு'' இதழில் வெளியிட்டிருந்தோம். அக்கட்டுரையைப் பல உழவர் பெருமக்கள் விரும்பி வரவேற்றதால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, ''தகவல் தொடர்பு நிலையம்'' அனுப்பிய கீழ்க்கண்ட ஆராய்ச்சி முடிவுகளையும் ''தமிழரசு'' பெருமையுடன் வெளியிடுகிறது. இதுபோன்று தொடர்ந்து வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், புதிய கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திப் பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### வெண்டைக்கு வேண்டியன . . .

குறைந்த செலவிலும், எளிய முறையிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகவும், குறுகிய காலத்தில் அதிக மகசூல் அளிக்கக் கூடியதாகவும் இருப்பதால் தமிழ் நாட்டில் வெண்டை ஒரு முக்கியக் காய்கறிப் பயிராகப் பயிரிடப்படுகிறது. வெண்டையில் பெரு மகசூல் காணத் தகுந்த விதைப்புக்காலம், சீரான இடைவெளி, ஏற்ற இர்சாயன உர அளவு மிகவும் அவசியமாகும். இவைகளைப் பற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்ட இயல் துறையைச் சார்ந்த காய்கறிப் பிரிவில் ஆராய்ச்சிகள் நடத்தப்பெற்றன.

வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டர் (2 அடி) இடைவெளியும், செடிக்குச் செடி 20 சென்டிமீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் கொடுத்து நடப்பட்ட வெண்டைச் செடிகள், 60 செ.மீ. (2 அடி) ×30 செ.மீ. (1 அடி), 60 செ.மீ. (2 அடி)×40 செ.மீ. (1 அடி 4 அங்குலம்) ஆகிய இடைவெளிகளில் நடப்பட்ட வெண்டைச் செடிகளை விட 26.6 சதம் முதல் 43.7 சதம் வரை அதிக மகசூல் அளித்துள்ளன. எனவே, வெண்டை நடுவதற்கு 60 செ.மீ.×20 செ.மீ. இடைவெளியே சிறந்தது என்பது தெளிவாகியுள்ளது.

வெண்டைக்கேற்ற இரசாயன உர அளவைப்பற்றி நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து, ஹெக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல்சத்து (ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்து; 20 கிலோ சாம்பல்சத்து, 12 கிலோ சாம்பல்சத்து), என்ற அளவே அதிக மகசூல் அளிக்க வல்ல இரசாயன உர அளவு என்பது புலனாகியுள்ளது.

வெண்டை ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கு ஏற்றது எனினும் சில மாதங்களில் விதைக்கப்படும்பொழுது மட்டுமே, வெண்டை நல்ல மகசூல் கொடுக்கின்றது. இதுபற்றி நடத்தப் பெற்ற சோதனையில், நல்ல வெய்யில் உள்ள நீண்ட பகல் நேரம் கொண்ட மார்ச்சு ஏப்ரல், மே மாதங்களே வெண்டை விதைப்பதற்குச் சிறந்த காலமாகத் தெரிய வருகிறது. மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் தனித்தனியே விதைத்துச் சாகுபடி செய்யப்பட்ட வெண்டைச் செடிகள் முறையே ஹெக்டேருக்கு 16,654 கிலோ, 14,434 கிலோ, 14,426 கிலோ வெண்டைக் காய்களை கொடுத்துள்ளன. இந்த மாதங்களில் விதைக்கப்பட்ட விதைகளின் முளைக்கும் தன்மை அதிகமாகவும், செடிகள் நல்ல வீரியம் மிகுந்ததாகவும் காணப்படுகின்றன.

மேற்கண்ட சோதனைகளிலிருந்து வெண்டைச் சாகுபடியில் பெரும் மகசூல் பெறுவதற்குப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது விளங்குகிறது.

தகுந்த விதைப்புக் காலம்— மார்ச்சு, ஏப்ரல், மே.

சீரான இடைவெளி—60 செ.மீ.×20 செ.மீ.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்



# புதிய கண்டுபிடிப்புகள்!

ஏற்ற இரசாயன உர அளவு ஹெக்டேருக்கு 40 கிலோ தழைச் சத்து, 50 கிலோ மணிச் சத்து, 30 கிலோ சாம்பல் சத்து.

எனவே, மேற்கண்டவாறு வெண்டை சாகுபடி செய்து பெருமகசூல் பெற்று அதிக இலாபம் அடையுங்கள்.

### நுண்ணுயிர் ராசி

'லெக்யூம்' (Legume) எனப்படும் தாவர வகையைச் சார்ந்த பயறு வகைகள், காய்கறிகள், பசுந்தாள் உரங்கள் ஆகியவை காற்றிலுள்ள எரிவளி (நைட்ரஜன்) வாயுவைப் பரிமாற்றத் தன்மை மூலமாகத் தனது வளர்சிக்குப் பயன்படுத்துகிறது. இந்தப் பரிமாறும் தன்மையானது வேர்களில் உள்ள வேர் முடிச்சுகள் மூலமாக நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கான தாவரங்களில் 'ரைசோபியம்' என்ற நுண்ணுயிர் வகையினுல் வேர் முடிச்சுகள் உண்டாயினும், அவையாவும் ஒருசில அயல் இனவூட்டுத் தொகுதிகளைச் சாரும்.

பயறு வகைகள், நிலக்கடலை, போன்ற பயிர்களின் விளைச்சல் 5 முதல் 15 சதம்வரை 'ரைசோபியல்கல்சர்' எனப்படும் நுண்ணுயிர் ராசி உபயோகிப்பதால், அதிகரிக்கும் எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல் துறையைச் சார்ந்த நுண்ணுயிர் பிரிவின் ஆராய்ச்சியாளர்களால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நுண்ணுயிர் ராசிகள் (ரைசோபியல் கல்சர்) தயாரித்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு வேளாண்மைத் துறையைச் சேர்ந்த விரிவாக்க அலுவலர்கள் மூலமாகப் பெரும் அளவில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1971-ஆம் ஆண்டு வரை இந்த நுண்ணுயிர் ராசிகள் 'கூழ் கரைசல்களாக' சிறு பாட்டில்களிலும், குடுவைகளிலும் விநியோகம் செய்யப்பட்டு வந்தன. இந்தக் 'கூழ் கரைசலைச்' சுத்தம் செய்யப்பட்ட நீருடன் கலந்து விதையுடன் கலக்கவேண்டும்.

1972-ஆம் ஆண்டு முதல் நுண்ணுயிர் ராசிகள் புதிய முறையில் உலர்ந்த அங்ககப் பொருட்களுடன் கலந்து, விளக்கம் அச்சிட்ட 'பாலிதீன்' பைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிலோ ராசியும் ஒரு ஏக்கர் விதைக்குப் போதுமானது. இதன் விலை ரூபாய் 2 தான். இந்தப் பைகளின் மேல் ராசியின் வீரியத் தன்மைக்கான தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. தவிரவும், உயிரியல் துறை அவ்வப்போது சோதித்து இதன் தரத்தைப் பாதுகாத்து வருகிறது.

---

### பழச்சத்து

பழச்சாற்றில் உள்ள உடல் வளர்க்கும் பொருட்கள் எந்த அளவில் உள்ளன என்பதை கண்டுபிடிக்கும் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதை உருவாக்கும் பொறுப்பு ''ஹைட்ரோ நாட்டிக்ஸ்-இஸ்ரேல்'' லிமிடெட் என்ற நிறுவனத்திடம் இருக்கிறது. ஏற்கெனவே ஆரஞ்சுப் பழச் சாற்றில் உள்ள உடல் வளர்க்கும் சத்துப் பற்றி இது கணக்கிட்டுள்ளது.

இப்போது காற்றில் உள்ள பிராணவாயு எவ்வளவு என்பதை இந்த நிறுவனம் கண்டுள்ளது. மற்றும் பொட்டாசியம், கால்சியம் போன்றவைகளும் ஒவ்வொன்றிலும் எவ்வளவு உள்ளன என்பதைக் கண்டுபிடிக்கின்றன.

---

அங்ககப் பொருளுடன் கலந்த நுண்ணுயிர் ராசியை $\frac{1}{4}$ கிலோ வெல்லக்கரைசலுடன் கரைத்துத் திரவ வடிவில் செய்யவேண்டும். இவ்விதம் செய்வதால், எல்லா விதைகளுக்கும் விதையின் மேல் இந்த ராசி ஒரே சீராக ஒட்டுவதற்கு ஏதுவாகிறது.

அங்ககப் பொருளுடன் கலந்த நுண்ணுயிர் ராசியின் நன்மைகள்:—

1. இதை நீண்ட நாள் சேமித்து வைக்கலாம்.

2. எளிதாக கையாளலாம்.

3. அங்ககப் பொருள்களினுல் இந்த நுண்ணுயிர்கள் சிறப்பாக பாதுகாக்கப்படுகிறது.

4. இதைத் திரவ உருவத்திலேயோ, அல்லது பொடி வடிவத்திலேயோ உபயோகிக்கலாம் ஆனுல் திரவ உருவத்தில் உபயோகிப்பது மிகச் சிறந்தது.

5. இந்த அங்ககப் பொருள் கலந்த நுண்ணுயிர் ராசி மிக விலை மலிவானது. கூழ் நுண்ணுயிர் ராசி கலக்க ஒரு ஏக்கருக்கு ரூபாய் 8 தேவை. ஆனுல், அங்ககப் பொருள் கலந்த ராசி கலக்க ரூபாய் 2 தான் செலவாகிறது.

மருந்துடன் கலந்த விதைகளை, நுண்ணுயிர் ராசி கரைசலுடன் கலக்கக் கூடாது. மருந்து கலந்த விதைகளை, நன்ருகத் தண்ணீரில் கழுவிய பின்புதான் கலக்க வேண்டும். இல்லையேல், விதைகளுடன் கலக்கப்பட்ட மருந்தினுல் நுண்ணுயிர்கள் பாதிக்கப்படும்.

இந்த நுண்ணுயிர் ராசி (ரைசோபியல் கல்சர்) தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்தில் விற்பனைக்குத் தயாராக உள்ளது.

### எள் மகசூல் பெருக்கிட மாங்கனீஸ் சல்பேட் இடவும்

எள், தமிழகத்தின் ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர். ஏறத்தாழ 3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் இங்கே எள் பயிரிடப்படுகிறது. கால்சியம் சத்தை மிகுதியாகக் கொண்டுள்ளதால் எள்ளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் ஒரு சிறந்த உணவு எண்ணெய்யாகவும், சில சமயம் மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

'மாங்கனீஸ் சல்பேட்' என்ற இரசாயன உரத்தை எள் பயிருக்குப் போடுவதால் எள் விளைச்சல் அதிகரிக்கிறது என்பது ஆராய்ச்சி மூலம் தெரிய வந்தது. இந்த உண்மையை ஆராயும் பொருட்டுத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வேளாண்மை விரிவாக்கத் துறையினரால், மாநில வேளாண்மை துறையினர் உதவியைக்கொண்டு, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் கீழ்க்கண்ட உழவர் பெருமக்கள் நிலங்களில் சோதனைச் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன.

1. திரு சி. ஆறுமுகம்,
நம்பியாம்பாளையம்,
அவிஞசி வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திரு எம். பழனியப்பன்,
வேப்பம்பாளையம்,
ஈரோடு வட்டாரம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திரு ஆர். நடராஜன்,
இடையன்காடு,
புலிபாக்கம் (வழி),
செங்கற்பட்டு மாவட்டம்,

4. திரு சி. ஆறுமுகம்,
பூசாரிபட்டி,
கடையம்பட்டி வட்டாரம்,
சேலம் மாவட்டம்.

மேற்கண்ட உழவர்களின் வயலில் நடத்தப்பட்ட சோதனை யில் எள் பயிருக்கு வழக்கமாகப் பரிந்துரை செய்யப்பட்ட இரசாயன உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ 'மாங்கனீஸ் சல்பேட்' போடப்பட்டது.

அச்சோதனைச் செயல் விளக்கங்களில் 'மாங்கனீஸ் சல்பேட்' போட்டதால் 20 முதல் 23·10 சதம் வரை அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. சராசரியாக 21·39 சதம் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.

ஆகவே, 'மாங்கனீஸ் சல்பேட்' எள் பயிரின் விளைச்சலைப் பெருக்கவல்லது என மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால், எள் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற, ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 'மாங்கனீஸ் சல்பேட்' இடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## வள்ளிக் கிழங்கு மகசூல் பெருக

தமிழகத்தில் ஏறத்தாழ 5,000 எக்டேர் பரப்பில் சர்க்கரை வள்ளிக்கிழங்கு முக்கிய உணவுப் பயிராக பயிர் செய்யப்படுகிறது. இந்தக் கிழங்கு வகையானது அன்றாட உணவில் அரிசி உணவை 25 சதவிகிதத்திற்குச் சரிக்கட்டவல்லது. இதில் மாவுச் சத்துடன் 'ஏ', 'சி', ஆகிய வைட்டமின்கள் அடங்கியுள்ளன. இதன் மாவை கோதுமை மாவுடன் கலந்து, சிறந்த சத்துணவாகப் பயன்படுத்தலாம். ஒரு டன் சர்க்கரை வள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்ய 30 மனித நாட்களும், 1 டன் நெல் உற்பத்தி செய்ய 153 மனித நாட்களும், 1 டன் மக்காச் சோளம் உற்பத்தி செய்ய 78 மனித நாட்களும் தேவை.

சர்க்கரை வள்ளிக் கிழங்கானது மிகக் குறைந்த செலவில் சுமார் 4½ மாதத்தில் நிறைந்த இலாபம் கொடுக்கும் ஒரு சிறந்த பயிராகும். இந்தக் கிழங்கின் பரப்பளவை அதிகரிப்பதற்குச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. இந்த கிழங்கானது மாவுப் பொருள் (ஸ்டார்ச்), பற்பசை போன்ற பல வேளாண்மையைச் சார்ந்த சிறு தொழில்களைத் தொடங்க உதவியாக இருக்கும். எனவே இந்த முக்கியமானக் கிழங்கு வகைக்கு ஆராய்ச்சியின் அடிப்படையில் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளை கண்டறிவது மிக இன்றியமையாததாகியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள தோட்ட இயல் துறையைச் சேர்ந்த காய்கறி இயற் பிரிவில் நடத்திய சோதனைகளில் சர்க்கரை வள்ளிக் கிழங்குப் பயிருக்குகந்த நடவுகாலமும், நடவுக் கொடிகளும், இரசாயன உர அளவும் முக்கிய அங்கமாகும். இது காறும் சர்க்கரை வள்ளிக் கிழங்கானது, இதன் கொடியின் பல பாகத்தை நடுவதன் மூலம் பயிராக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2 ஆண்டுகளாக இந்த கிழங்குப் பயிரின் நடுப்பாக கொடி, நுனிக்கொடிக் மற்றும் கிழங்குக் கரணை ஆகியவைகள் விதைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் நுனிக் கொடியே மற்றவைகளை விடச் சிறந்தவையென மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இது, நடுக்கொடி, கிழங்குக் கரணை ஆகியவைகளை விதைப் பொருளாக நட்ட பயிரைவிட, அதிக விளைச்சல் கொடுத்துள்ளது.

ஏற்ற பருவத்தை அறியும் பொருட்டு சூன் முதல் அக்டோபர் மாதம் வரை இருவார இடைவெளியில் தொடர்ந்து நடவு செய்து, இரண்டாண்டுக் காலத்திற்குச் சோதனைகள் நடத்தப்பட்டன. செப்டம்பர் 2-வது பதினைந்து நாளில் நடப்பட்ட பயிரானது ஒரு ஹெக்டேருக்கு, 25·200 டன் கிழங்கு விளைச்சல் கொடுத்துள்ளது. இதை அடுத்து அக்டோபர் முதல் பதினைந்து நாளில் நடவு செய்த கிழங்கு ஒருஹெடக்ருக்கு 25·020 டன் கிழங்கு விளைச்சல் கொடுத்துள்ளது.

சர்க்கரை வள்ளிக் கிழங்கு மகசூலைப் பெருக்க இலைவழி உரமளித்தல் ஒரு சிறந்தமுறையாகத் தெரியவந்துள்ளது. ஹெக்டேருக்கு இடப்படும் 80 கிலோ தழைச்சத்தைப் பாதியாகப் பிரித்து, ஒரு பாதியை நடும் போது அடியுரமாகவும், மற்றப் பாதியை அதாவது (40 கிலோ தழைச்சத்தை) 30, 60 மற்றும் 90-வது நாளில் பகிர்ந்து இலைவழி உரமாகவும் தெளித்ததால், விளைச்சல் கணிசமாக அதிகரித்துள்ளது. அதாவது சர்க்கரை வள்ளிக் கிழங்குப் பயிருக்குத் தேவையான தழைச்சத்தில் பாதியை இலைவழி மூலம் அளிப்பதால், நேரடியாக உர மிடுவதைவிட 23 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கும் என்பது புலனாகியுள்ளது.

தமிழகத்திற்கு ஏற்ற சர்க்கரை வள்ளிக்கிழங்கு ரகங்களுக்கான பரிசோதனையில் 'வி. 2', 'வி. 6', 'வி. 8', 'வி. 12', ஆகியவை நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளன. அண்மைக் கால ஒருங்கிணைப்புத் திட்டத்தில், சில வீரிய ரகங்கள் உட்பட 32 ரகங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இவற்றில் 'வி' ரகங்கள் நல்ல பலன் கொடுத்துள்ளன. சிறப்பாக வி. 6 என்ற ரகம் எக்டேருக்கு 25 டன் வரை மகசூல் கொடுத்துள்ளது. வீரிய ரகங்களில் 'எச். 3' (H3) என்ற ரகம் மிகுந்த விளைச்சலைக் கொடுத்துள்ளது. இதைத் தவிர முசிரி தண்டல் (எஸ். பி. 1), முசிரி (எஸ். பி. 4), ரத்னகர் (எஸ். பி. 13), ஆலாங்குளம் சிவப்பு (எஸ். பி. 18) என்ற உள்ளூர் ரகங்கள் ஹெக்டேருக்கு 15லிருந்து 19 டன்கள் விளைச்சலைக் கொடுத்துள்ளன.

தகவல் :—'' தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.

### உயிர் இருப்பதை உணர்த்தும் கருவி

மனிதர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதை எதிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம்; நாம் காற்றை உள்ளிழுத்து வெளியே விடுவதை வைத்துத்தான்! அறுவைச்சிகிச்சை செய்கிற சமயங்களில் நோயாளி மூச்சு விடுகிறாரா என்பதைக் கண்டறியப் புதிய கருவியை இஸ்ரேல் நாட்டில் கையாளுகின்றனர்; இதை நேரடியாக நோயாளி உடலில் சேர்த்து வைக்க வேண்டியதில்லை.

அறுவைச் சிகிச்சை செய்கிற அரங்கில் ஒரு குழாயுடன் இக்கருவியை இணைத்து வைத்து விடுகிறார்கள். அது சரியாக இணைக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதைக் கூட அக்கருவி காட்டிவிடுகிறது. மூச்சு நிறுத்தினால், அது 10 முதல் 45 வினாடிகள் வரை தான் முடியும்; அதனால் அந்தக் குறிப்பிட்ட காலக் கட்டத்திற்கு மேல் மூச்சு நின்றுவிட்டால் உடனே அக்கருவியில் உள்ளமணி அலறத் தொடங்கிவிடும்.

VOLTAS

# பருத்திப்பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க மிகச் சிறந்தது



## ஜோலோன்®

மூலப் பொருள்

## 'ரோன்-பொலெங்க்'

பாரிஸ், பிரான்ஸ், ஸ்தாபனத்தாரால் கண்டுபிடிக்கப்பட்ட போஸலோன் பூச்சி மருந்து

RHÔNE-POULENC

உலகப் புகழ்பெற்ற பூச்சி மருந்து தயாரிப்பாளர்களான, பிரான்ஸ் நாட்டு ரோன்—பொலெங்க் நிறுவனத்தாரால் கண்டுபிடிக்கப் பட்ட போஸலோனை மூலப்பொருளாகக் கொண்ட ஜோலோன் பூச்சி மருந்து இப்போது இந்தியாவில் கிடைக்கிறது. அது விவசாயி களுக்கு நோயற்ற, செழிப்பான பருத்தி மகசூலை அளிக்கிறது. காய் துளைக்கும் புழுக்கள், வெள்ளை ஈக்கள், உறிஞ்சும் பூச்சிகள், இலை தின்னும் புழுக்கள், செடிப் பூச்சிகள், வண்டுகள் முதலியவற்றிலிருந்து பரிபூரணப் பாதுகாப்பு அளிப்பதைத் தவிர, ஜோலோன் பருத்திப்பயிர்களைக் காய்ப்புழுக்கள் தாக்குவதிலிருந்தும் பரிபூரணமாகப் பாதுகாக்கிறது. மேலும் ஜோலோன் பயிர்ச்சிலந்திகளை ஏற்ற முறையில் கட்டுப்படுத்துவதால், அதனுடன் கலப்பின அல்லது வேறு எந்தப் பூச்சி மருந்தோ உபயோகப்படுத்தத் தேவையில்லை.

காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதுகாத்திட ரோன்—பொலெங்கின் மற்றுமோர் தயாரிப்பு கில்வால் (மூலப்பொருள் வேமிடோதியோன் சிஸ்டமிக் (Systemic) பூச்சிமருந்து) மிகச்சிறந்தது.

பாரதத்தின் பசுமைப் புரட்சியை பாதுகாப்பது

## 'ரோன்-பொலெங்க்'

பூச்சி மருந்துகள்

மேலும் விவரங்களுக்கு, கீழ்க்கண்ட முகவரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்க:
வோல்டாஸ் லிமிடெட்
கெமிக்கல்ஸ் டிவிஷன்,
19, கிரஹாம் ரோடு, பேலார்ட் எஸ்டேட்,
பம்பாய்-1.



# கண்

நிலமீதில் வான்மீதில் கடலின் மீதில்
நெஞ்சினிக்கும் மலைமீதில் கொஞ்சி நின்றே
உலகத்துக் காட்சியெல்லாம் காட்டு கின்றாய்
உள்ளத்தில் உவகைத்தேன் ஊட்டு கின்றாய்
பலகற்றும் பட்டங்கள் பெற்றும் கல்விப்
பாசறையில் ஒளிகாணத் துணைசெய் கின்றாய் !
துலங்குமணி விளக்கான கண்ணே ! உன்றன்
துணையில்லை என்றாலே உலகம் இல்லை !

சலசலக்கும் சிற்றாறு : சாய்ந்த தென்னை :
சதிராடும் நீர்வீழ்ச்சி ; சரியும் பூக்கள் :
கலகலக்கும் மலைச்சாரல் : கமழும் பூங்கா ;
கார்மேக விளையாட்டு : மின்னல் வெட்டு ;
குலமான்கள் குதியாட்டம் : கொஞ்சும் கிள்ளை ;
குதூகலிக்கும் பெண்ணினத்தார் கும்மி யாட்டம் ;
மலர்க்கூட்டம் ; மயிலாட்டம் : மானின் ஓட்டம் ;
மணிக்கண்ணே! நீயின்றேல் காண்ப தெங்கே ?





தாயின்றேல் குழந்தைகளுக்(கு) இன்பம் இல்லை
தணல்இன்றேல் சுவையுணவு சமைத்தல் இல்லை
வாயின்றேல் வயிறில்லை வாழ்வும் இல்லை
வளமின்றேல் பசிதீர்க்கும் வழியும் இல்லை
ஓய்வின்றேல் உடம்பிற்கு நன்மை இல்லை
உணர்வின்றேல் உள்ளத்தில் உணர்ச்சி இல்லை
நீயின்றேல் கண்ணே !இவ் வுலகம் இல்லை !
நெஞ்சத்தில் நிம்மதியும் இல்லை ! இல்லை !!

உனையிழந்து தவிப்போர்க்கே உதவும் வண்ணம்
ஒளிவழங்கும் திட்டத்தைத் தந்த தாலே
அனைவருமே போற்றுகின்றார் 'கலைஞர்' தம்மை
அகிலத்தில் 'உனை நல்கும் இறைவன்' என்றே !
உனைவழங்கி ஒளிகொடுக்கும் அரசு, கண்ணே !
உழலுகின்ற ஏழைமக்கள் ஒளிவி ளக்காம் !
வினைப்பயனே எனஇருந்த நிலையை மாற்றி
விழிகொடுக்கும் 'தமிழரசை' வாழ்த்து வோமே

கவிஞர்
மணிவேந்தன்





# மகளிர் பகுதி

மகளிர் பகுதி என்றால் உணவுப் பழக்கங்களைப் பற்றியே எழுதுகிறோம் என்ற ஐயப்பாடு சிலருக்கு ஏற்படலாம்.

அடிப்படையாக ஒவ்வொரு பெண்ணுக்கும் ஊட்ட உணவு பற்றிய விவரம் தெரிந்திருப்பது அவசியமாகும். தொட்டிலை ஆட்டுவோருக்குள்ள உணவுப் பழக்கம் பற்றிய அறிவே, எதிர்காலச் சமுதாயத்தை வலு மிக்கதாக அமைக்கும்.

சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்? உடலை நன்கு பாதுகாத்தால்தானே உலக வாழ்வை அனுபவிக்க முடியும்? ஆகவே இந்த இதழிலும் உணவுப் பழக்கங்கள் பற்றிய செய்திகளை தெரிவிக்கப் படுகின்றன.

நம் நாட்டின் வெவ்வேறு பகுதியில் வாழும் மக்களின் உணவு எவ்வாறு உள்ளது என்றும், அவற்றிலுள்ள குறைபாடுகள் யாவை என்றும், அவற்றை எப்படிப் போக்கலாமென்றும் கவனிப்போம்.

நம் நாடு மிகவும் பெரியது; எனவே, வெவ்வேறு பகுதிகளிலுள்ள வெப்ப தட்ப நிலைகள் பெரிதும் மாறுபடுகின்றன. எல்லா இடங்களிலும், மழை ஒரே அளவில் பெய்வதில்லை; சில இடங்களில் மழை மிகவும் பெருமளவில் பெய்கிறது. வேறு சில பகுதிகளில் மிகவும் குறைந்த மழையே பெய்கிறது; சில இடங்களில் சிறிதும் மழையின்றிப் பாலைவனமாகவே இருக்கிறது. இவைகளுக்கேற்ப, வெவ்வேறு இடங்களிலும், வெவ்வேறு உணவுப் பயிர்கள் உண்டாகின்றன. இவற்றை ஒட்டியே, ஆங்காங்குள்ள மக்களின் உணவுப் பழக்கங்களும் அமைகின்றன. உணவுக்கேற்ற படி, அவர்களின் உடலமைப்பு, சக்தி முதலியனவும் வேறுபடுகின்றன.

பஞ்சாபில் கோதுமை மிகுதியாக விளைகிறது. ஆகையால், அங்கு வசிப்பவர்கள் ரொட்டியை முக்கிய உணவாகக் கொள்கிறார்கள். பஞ்சாபிலுள்ள சீக்கியர்கள் கோதுமை, பால், இறைச்சி முதலியவற்றை உண்கிறார்கள். கீரை, கிழங்கு காய்கறிகளையும் பயன்படுத்துகிறார்கள். எனவே, அவர்கள் உடற்கட்டுள்ளவர்களாக இருக்கிறார்கள். பஞ்சாபிலிருந்து கிழக்கே செல்லச் செல்ல, உணவின் சத்துக் குறைந்து கொண்டே போகிறது. வங்காளத்தில் நெல் மிகுதியாகப் பயிராகிறது. அங்குள்ள மக்கள் அதையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுடைய உணவில் அரிசி, பருப்பு, பால் முதலியன மிகுதியும் இடம்பெறுகின்றன. இதைப் போன்று தமிழ் நாட்டிலுள்ளவர்களும் அரிசியையே முக்கிய உணவாகக் கொள்கிறார்கள். பொதுவாக, வட இந்தியர்கள் கோதுமையையும், தென்னிந்தியர்கள் அரிசியையும் முக்கிய உணவுகளாகக் கொள்கின்றனர் என்று கூறலாம். அரிசி, கோதுமையைக் காட்டிலும் சத்துக் குறைவானது. அதில் புரதம் குறைவாகவுள்ளது. இவ்வளவு வேறுபாட்டின் காரணத்தால், பஞ்சாபினின்றும் கிழக்கேயும், தெற்கேயும் செல்லச் செல்ல உணவுச் சத்தும் குறைகிறது; மக்களின் உடலும் வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது. இக்குறைபாட்டை நீக்கும் ஒரே சிறந்த வழி, கலப்புணவை உட்கொள்வதேயாகும்.

அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளவர்கள் தங்கள் உணவில் 1/3 அல்லது 1/2 பாகம் கோதுமையால் செய்த பொருள்களைச் சேர்த்து கொண்டு பால், பழம், கிழங்கு, காய்கறி, கீரைகள் முதலியவற்றையும் அதிகமாகச் சேர்த்துக் கொண்டால் அவர்களுடைய உணவு, சத்துள்ளதாகி, நன்கு சமன்செய்யப்பட்ட உணவாகவும் ஆகும். இவ்வாறு உணவுத் திட்டத்தை மாற்றிக் கொள்வதற்கான சூழ்நிலையும் இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

இரண்டாவது உலகப் பெரும்போருக்கு முன்னால், தென்னக மக்கள் கோதுமையை உணவுத் தானியத்தின் வடிவில் பெரும்பாலும் பயன்படுத்தவேயில்லை. அல்வா, பூரி போன்ற பண்டங்களுக்கே பயன்படுத்திவந்தனர். சில சமயங்களில், நீரழிவு நோயுள்ளவர்கள் கோதுமையத் தானிய வடிவில் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால், இரண்டாவது உலகப் பெரும்போர், பெரும் மாறுதலை ஏற்படுத்திவிட்டது. நாட்டில் உணவுப் பற்றாக்குறையின் காரணத்தால், உணவுப் பங்கீட்டு முறை ஏற்பட்டது. எல்லாருக்கும் போதிய அளவு அரிசி கிடைக்கவில்லை. இவ்வுணவுக் குறையை நிரப்பக் கோதுமையும் வழங்கப்பட்டது. இதனால் தென்னகத்தைச் சேர்ந்தவர்கள் கோதுமையை வேறு வழியின்றிப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. அவர்கள், சப்பாத்தி, பூரி முதலியவைகளை முன்பைவிடக் கூடுதலாக உண்டனர். இவ்வுணவும் ஒருவகையில் பழக்கமாகிவிட்டது. இவ்வுணவு மாற்றத்தால், அவர்களுடைய உடலுக்கும் நன்மை ஏற்பட்டது. ஆனால், இப்பொழுது அரசினரின் முயற்சியால் அரிசிப் பற்றாக்குறை ஒருவாறு நீங்கிவிட்டதால், மக்கள் மறுபடியும் முன்போல் அரிசியை மிகுதியாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இது சரியன்று.

அரிசியுடன் கோதுமையையும் பயன்படுத்திப் பால், தயிர், வெண்ணெய், மோர், கிழங்கு, கீரைகள், காய்கறிகள் முதலியவற்றையும் மிகுதியாகப் பயன்படுத்துவதால் நமது உணவு, சத்துள்ளதாகவும் நன்கு சமன் செய்யப்பட்டதாகவும் அமையும். மரக்கறி உணவையே நம்பியுள்ளவர்களுக்குப் பால் குடிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரு நாளுக்குக் குறைந்தது 8 அவுன்ஸ் பாலாவது குடிக்க வேண்டும். அரிசிச் சோற்றிலுள்ள புரதக் குறைவைப் போக்கப் பருப்பை மிகுதியாக உட்கொள்ள வேண்டும். புரதத்தைக் கருத்திற் கொண்டு பார்த்தால், முட்டையைவிடப் பருப்பில் மிகுதியான புரதச் சத்து இருக்கிறது. உலோகச் சத்தைப் பெறுவதற்காகக் காய்கறி, 'கீரை, பழங்களை உட்கொள்ள வேண்டும். நாள்தோறும், 2, 3 அவுன்ஸ் நெய் அல்லது எண்ணெயையும் அருந்த வேண்டும். புலால் உணவு உண்பவர்கள், தங்களுடைய உணவில் முட்டை, மீன்கள் முதலியவற்றைச் சிறிது அதிக அளவில் சேர்த்துக் கொள்வதால், அரிசியிலுள்ள புரதக் குறைவைப் போக்கிக் கொள்ளலாம். இம்

மாதிரியான உணவினால் நாள்தோறும் ஏறக்குறைய 3,000 வெப்ப அளவு எண்கள் கிடைக்கும். இதற்கு மாறாக அரிசியை மட்டும் முக்கிய உணவாகக் கொண்டு, சிறிது காய்கறிகளையும், எண்ணெயையும் உட்கொள்வதால், பொதுவாக 1,500 வெப்ப அளவு எண்களே கிடைக்கக்கூடும்.

நாட்டில் உணவுப் பொருள்களின் விளைச்சல் மிகுதியாக இருந்து அவற்றின் விலையும் குறைவாக இருந்தாலே, மக்களுக்குச் சத்துள்ள உணவு கிடைப்பது எளிதாகும். முக்கியமாகக் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், உடல் நலத்திற்கும் பால் மிகவும் இன்றியமையாததாகும். இதற்காக நாட்டின் பல இடங்களிலும் குழந்தைகள் வளர்ப்பு விடுதிகள் திறந்து, அங்கு ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால், பால் பொடி, பாலடைக்கட்டி முதலியன அளிக்கப்பட்டு வருகின்றன.

இச்செய்திகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு, நாம் சில உணவுத் திட்டங்களைத் தயாரிக்கலாம். சில உணவுத் திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

1. 8—12 மாதக் குழந்தைக்கு (நாளொன்றுக்கு)

பால்—32 அவுன்ஸ்.
நன்ருகச் சமைத்த சோறு—ஒரு சிறு கோப்பை.

நன்ருகச் சமைக்கப்பட்டு மசிக்கப்பட்ட கீரை—1 சிறு கரண்டி.

நன்ருகச் சமைக்கப்பட்டு மசிக்கப்பட்ட உருளைக்கிழங்கு அல்லது சர்க்கரை வள்ளிக்கிழங்கு—1 சிறு கரண்டி.

ஆரஞ்சு அல்லது தக்காளி பழச்சாறு—4 அவுன்ஸ், முட்டை—1.
வெண்ணெய் அல்லது நெய்—ஒரு சிறு கரண்டி.
சர்க்கரை—ஒரு சிறு கரண்டி.

இவ்வுணவின் மூலம் சுமார் 900 வெப்ப அளவு எண்கள் கிடைக்கலாம். மரக்கறி உணவு மாத்திரம் உண்பவர்கள் முட்டைக்குப் பதில் துவரம் பருப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பருப்பு நன்ருக வெந்து பக்குவமாக இருக்க வேண்டும். இவ்வுணவுத் திட்டத்தின் படி போதிய வைட்டமின்களும் கிடைக்கும்.

2. $1\frac{1}{2}$ வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான சமன் செய்த உணவுத் திட்டம்.

நன்கு சமைத்த சோறு—2 சிறு கோப்பைகள்.
பால்—20 அவுன்ஸ்.
நெய்—2 சிறு கரண்டிகள்.
கிழங்கு, கீரைகள்—4 சிறு கரண்டிகள்.
பசுமையான காய்கறிகள்—2 சிறு கரண்டிகள்.
வாழைப்பழம் (மொந்தன்)—1 (சிறியது).
ஆரஞ்சு அல்லது தக்காளிச்சாறு—$1\frac{1}{2}$ அவுன்ஸ்.
சர்க்கரை—2 சிறு கரண்டிகள்.
முட்டை, மாமிசம் அல்லது பருப்பு $1\frac{1}{2}$ அவுன்ஸ்.

இவ்வுணவின் மூலம் சுமார் 1,200 வெப்ப அளவு எண்களைப் பெறக்கூடும்.

3. வயது வந்தவர்களுக்கான சமன்செய்த உணவு.

நன்கு சமைக்கப்பட்ட ஏதேனும் இரண்டு தானியங்களின் சோறு சுமார்—300 கிராம்.
துவரை (பருப்பு) சுமார்—55 கிராம்.
உளுந்து சுமார்—15 கிராம்.
இலை காய்கறிகள் (கீரை வகைகள்)—50 கிராம்.
பசுமையான காய்கறிகள் சுமார்—84 கிராம்.
தக்காளி—20 கிராம்.
தேங்காய் (வெண்பருப்பு) சுமார்—4 சிறிய துண்டுகள்.
வெல்லம் அல்லது சர்க்கரை சுமார்—70 கிராம்.
நெய் அல்லது எண்ணெய்—சுமார் 1 அவுன்ஸ்.
இறைச்சி, முட்டை அல்லது கொட்டைகள் சுமார் 90 கிராம்.
பால் சுமார்—8 அவுன்ஸ்.

இவ்வுணவின் மூலம் ஏறக்குறைய 2,500 வெப்ப அளவு எண்கள் பெறக்கூடும்.

—அஞ்சன

---

# புலி! புலி!!

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை, இராஜஸ்தான், பஞ்சாப், கட்ச்சுப் பாலைவனப் பகுதிகள் நீங்கலாக, இந்தியாவில் நெடுகிலும் புலியைக் காணலாம். வனப்பான வண்ணம்; அழகான வரிக்கோடுகள்; நன்கமைந்த உடல்; இதுவே புலியின் தோற்றம்.

பசுமையான, இலையுதிர்க் காடுகளிலும், வறட்சியான திறந்த வெளி வனங்களிலும், மலையடிவாரப் புல்வெளிகளிலும் இவை வசிக்கின்றன. சுந்தர்பான்ஸ் பகுதியில், மரங்களும், சேறும், நீரும் நிறைந்த இடங்களில் இவை அலைந்து திரிகின்றன.

அடித்துத் தின்பதற்குக் ஏதுவாகப் பெரிய மிருகங்கள், தூங்குவதற்கு நிழலுடன் கூடிய வசதியான இடம், தாகத்தைத் தணித்துக் கொள்ள நீர் இவை மூன்றும் புலிக்குத் தேவை. சாதாரணமாகப் புலி இரவில் வேட்டையாடுகிறது. மப்பும் மந்தாரமாகவோ, குளிர்ந்தோ இருக்கும் பகல் நேரங்களிலும் புலி



இரை தேடுவதுண்டு. யானை, காட்டெருது, எருமை போன்ற பலவகை மிருகங்களை புலி வேட்டையாடும். மான், நீல எருது (நீல்காய்), காட்டுப்பன்றி, கரடி, முள்ளம்பன்றி ஆகியவற்றைப் புலி அடித்துக் கொல்லும். இரைக்கு வன விலங்குகள் கிடைக்காவிடில் கால் நடைகளையும், மனிதர்களையும் புலி வேட்டையாடுகிறது. கனமான உடல் இருந்தாலும் புலி துடிப்புடன் இருக்கிறது. புலி நீரைக் கண்டு பயப்படுவதில்லை. எளிதில் நீந்தி விடுகிறது.

சொந்தம் கொண்டாடும் தன்மை புலிக்கு அதிகம். அது வாழும் எல்லைக்குள் எவரையும் சாதாரணமாக அண்ட விடுவதில்லை. சாதாரணமாகப் புலிக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள் பிறக்கும். சில சமயங்களில் ஆறு குட்டிகள் பிறப்பதும் உண்டு. குட்டிகள் ஆறு மாத காலம் வரை இருப்பிடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும். பிறகு, தாய்ப் புலியுடன் சென்று அவை வேட்டையாட ஆரம்பிக்கின்றன. தாய்ப் புலியுடன் குட்டிகள் இரண்டாண்டுகளே கூடவே தங்கியிருக்கும். சாதாரணமாகப் புலி 20 ஆண்டுகள் வாழ்ந்திருக்கும்.

# குறளோவியம்

யாராவது நம்மை நினைக்கும் போது தும்மல் வருமென்றும், அப்படித் தும்மிடும் போது வாழ்த்துச் சொல்வது என்றும் ஒரு நம்பிக்கை பழங்காலந் தொட்டுத் தமிழகத்தில் பரவி நிற்கிறது. அந்தப் பழக்கத்தை வைத்து வள்ளுவனார் ஒரு அரிய காதல் காட்சியைச் சித்திரிக்கிறார்.

சோலைப் பசும் புற்றரையிலே—பால் வண்ண உடை உடுத்தி—காதல் மகனும் காதல் மகளும் இன்ப யாழை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆரத் தழுவி அக மகிழும் போது முகத்தில் பதிந்த முழு நிலவுப் பெண்ணின் கரிய கூந்தலின் சிறு தொகுப்பு அவளையு மறியாமல், அவன் மூக்கிலே பட்டதாலோ என்னவோ தும்மிவிட்டான். உடனே அந்த அணங்கு அவனை 'வாழ்க' என்று வாழ்த்தினாள். வாழ்த்தியவளுக்குத் திடீரென ஒரு நினைவு எழுந்தது.

"ஆமாம்—எந்தப் பெண்மயில் உம்மை நினைத்தாள்? அதனால் தும்மினீர்?" என்று ஒரு கேள்வியைப் போட்டு ஊடல் புரிந்தாள். செல்லமாக அழுதாள். காதலனுக்கு மீண்டும் தும்மல் வந்தது. காதலி, ஐயத்தால் அழுவாளே என்று அந்த முறை தும்மலை அவன் அடக்கிக் கொண்டான்! அவளோ, காதலனை நினைத்து ஏங்குகிற இன்னொருத்தி இருக்கிறாள் என்பதை நிச்சயமாக முடிவு செய்து கொண்டவள் போல்,

"ஓகோ! இன்னொருத்தி உம்மை நினைப்பதை, எனக்குக் காட்டிக் கொள்ளாமல், தும்மலை அடக்கி மறைக்கிறீரோ?" என்று மீண்டும் அழுதாள். அதை விளக்கும் குறளோவியங்கள் இரண்டு—இதோ!

வழுத்தினாள் தும்மினேன்
ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று.

தும்முச் செறுப்ப
அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.



# முதல்வர் கலைஞர்



தும்மினால் அருகிருப்போர் வாழ்த்துவர்.
இது பழைய கால வழக்கம். அந்த வழக்
கத்தை வைத்து வள்ளுவர், காதலர்களை
ஊடல் புரிய மட்டும் விடவில்லை. ஊடல்
தீர்ப்பதற்கும் அந்தப் பழக்கத்தைப் பயன்
படுத்துகிறார்.

துப்புறச் சிவந்த வாயாள் தூயபஞ்
சணையின் மீது ஒப்புறக் கணவனுடன்
இருந்த காலை இடையே எழுந்தது ஊடல்
என்னும் காதல் திருவிளையாடல்! ஒன்பது
முத்தம் தருவேன் என்று எட்டுத் தந்து
நிறுத்தினானோ; அல்லது அவள்தான்
எட்டி நின்றுவிட்டாளோ—கட்டிக் கரும்பே
என அழைத்துவிட்டுச் சுவைக்காமல்
தயங்குகிறானே என்று ஊடல் புரிந்
தாளோ? எண்ணி ஏன் ஒன்பது கேட்
டாள்? எண்ணாமல் பெறுவதற்கு ஏன்
அஞ்சினாள், என்று அவன் தான் மடிவிட்டு
எழுந்தானோ? எப்படியோ உல்லாசபுரி
யில் ஊடல் நிலவு உதயமாகிவிட்டது.
சில விநாடிகள் அமைதி!

காதலன் திடீரெனத் தும்மி விட்டான்.
காதலியும் ஊடலை மறந்து "வாழ்க"
என்று வாழ்த்திவிட்டாள்.

தோற்றாய்! தோற்றாய்! என்று
தோகையின் சிவந்த கன்னத்தைச் சிவக்க
வைத்தான். அவளும் பின்னிக் கொண்
டாள். 'தும்மல்' அவர்கள் ஊடலைத்
தவிர்த்து விட்டது.

காதலன் சாதாரணமாகக்கூடத் தும்மி
யிருக்கலாம். ஆனால் அவளோ மறுநாள்
காலை தன் தோழியிடம், தன் காதலனின்
திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக,

"நான் ஊடினேன்—அவர் வேண்டு
மென்று தும்மினார். நான் ஊடலை மறந்து
வாழ்த்திவிட்டேனடி!" என்று கன்னத்தைத்
தடவிக்கொண்டே கனிமொழி சிந்து
கிறாள். அந்தக் குறள் இதோ!

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

# பெற்ற விடுதலையின் பெரும்பயன் காண- நலிவுற்ற மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும்!

**வா**ழ்க நீ எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்

தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை

வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா ! நீ வாழ்க ! !
வாழ்க !!!

என்று பாரதியார், அண்ணல் காந்தியடிகளின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி, அவர் பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தினர்.

அண்ணல் காந்தியடிகள் இறந்து விட்டாலும், அவர் கற்பித்த அன்பு நெறி, அவர் கூறிய அறிவுரைகள், அவர் காட்டிய நல்வழிகள் நம் மனக்கண் முன்னே காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் எண்ணிஎண்ணிச் செயல்படுவதற்குரிய நினைவு நாளாக அவருடைய பிறந்தநாள் அமைகிறது.

இன்று அக்டோபர் இரண்டாம் நாள்; அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள். தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் நாட்டின் நல் வாழ்வுக்காக நல்கிய தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள் பிறந்த புனித நாள்.

''நலிவுற்ற சிற்றூரர்கள் நல்வாழ்வு பெற்றாலன்றி நாம் பெற்ற சுதந்தரத்தின் முழுப் பயனும் நமக்குக் கிட்டாது'' என்ற அண்ணலின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, 1952—ஆம் ஆண்டு அவர் பிறந்த இதே நாளில் நாடெங்கும் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது.

அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தில் ஒன்றியிருந்த ஊர் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் தொடங்கி, ஒருவார காலத்தைச் சமுதாய நலத்திட்ட வாரமாக 1970—ஆம் ஆண்டு முதல் நாடெங்கும் கொண்டாடி வருகிறோம்.

காலத்தால் சீர்குலைந்துவிட்ட சமுதாயம், ஞாலத்தில் உயர்வு பெற உழைப்பு ஒன்றே உற்ற துணையாகும். சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ்வதிலும், வளர்வதிலும், ஆர்வம் மிக்க அனைவரும் ஒருங்கிணைந்து பங்கு கொள்வதே, சமுதாய நலத் திட்டமாகும்.

கடந்த 20 ஆண்டுகளாக ஊர் வளர்ச்சிக்கான பணிகளில், திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம். நாடெங்கும் நிறைந்துள்ள ஊராட்சி நிறுவனங்கள் வலுவடைந்து செயல் திறன் மிக்கவையாக மாற்றியமைக்கும் முயற்சியில், முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளோம்.

பசுமைப் புரட்சியில் ஒவ்வோர் ஊராட்சியும் முழுமையாகப் பங்கு பெறச் செய்ய, 'உற்பத்திப் பெருக்கத் திட்டம்' என்ற பெயரால், வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன் வளர்ப்பு ஆகிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இம்முயற்சியின் காரணமாக, ஒவ்வோர் ஊராட்சியின் தேவைகளும் ஆராயப்பட்டு, அவற்றிற்கேற்ப வளர்ச்சிப் பணிகளில் தக்க மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. இன்றியமையாத பணிகளோடு, அந்தந்த இடத்துக்கேற்ப வகையில் சிறப்புத் திட்டங்களை அமைத்துக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டது. மக்களின் தேவைக்கேற்பத் திட்டங்களைத் தீட்டும் மாபெரும் உரிமை ஊராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. அதன் விளைவாக இன்றைய ஊராட்சி நிறுவனங்களின் பணிகளில் ஒரு மாபெரும் மறுமலர்ச்சியைக் காண முடிகிறது. பல்கிப் பெருகி வரும் மக்கட் பெருக்கத்திற்கேற்பப் பசுமைப் புரட்சிக்கு, வித்திட்டு உற்பத்தியில் தன்னிறைவு கொள்ள முடிந்தது.

'உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போரே' என்பது முதுமொழி. நாட்டில் பெருகி நிறைவுபெறும், ஏனைய தொழில் வளத்துக்கெல்லாம் உயிரளிப்பது உழவுத் தொழிலேயாகும். வேளாண்மையைத் தொழிலாக மட்டுமல்லாமல், வாழ்க்கை நெறியாகவே ஏற்றுக்கொண்டுள்ள கோடிக் கணக்கான உழவர்களை நம்பித்தான், இந்நாட்டில் செழிப்பும், செம்மையும் தழைத்து வளர்ந்துள்ளன.

ஆயினும், அடுத்துச் செய்து முடிக்க வேண்டிய ஆக்கப்பணிகள் இன்னும் சிலபல உள்ளன. அவற்றைப் பற்றித் திட்டமிடவும், மக்கள் சக்தியை ஒன்று திரட்டவும், இந்தச் சமுதாய நலத்திட்ட வாரவிழா பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறேன். ஒவ்வோர் ஊராட்சி நிறுவனமும், தனது ஊரை மேலும் வளமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் ஆக்க என்னென்ன பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதில்முழுமையாகக் கவனம் செலுத்துவதே, ஊராட்சி உறுப்பினர்களின் மாபெரும் பொறுப்பாகும். வளர்ச்சிப் பணிகள் அந்தந்த ஊர்களில் வாழும் மக்களின் அனுபவத்திலிருந்தே உருவாக வேண்டும். அரசையும், அரசு ஊழியர்களையும் பக்கத் துணையாகவே கொள்ள வேண்டும்.

1972-73-ஆம் ஆண்டிற்கெனப் பல்வேறு வரவு செலவுத் திட்டத் தலைப்புக்களில், ஊராட்சிகளின் மேம்பாட்டுக்கெனத் தமிழக அரசு ரூபாய் 77.14 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதைக்கொண்டு ஊராட்சி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுகிறதென்பது நன்கு புலப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஆட்சி அமைப்பு முறையில் அவ்வப்போது, பயனளிக்கும் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

ஒருங்கிணைந்த திறமையான நிர்வாக அமைப்பாக இயங்குவதற்கென்றே, இந்த ஆண்டி

லும் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாக அமைப்பை அரசு திருத்தி அமைத்துள்ளது. இதன்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உற்பத்திப் பிரிவு, கல்விப் பிரிவு, கூட்டுறவுப் பிரிவு, பணிகள் பிரிவு, ஊராட்சி நிர்வாகப் பிரிவு, பொதுப்பிரிவு ஆகிய ஆறு பிரிவுகள் செயல்பட ஏற்பாடாகியுள்ளது. ஒவ்வொரு பிரிவின் தலைவரே, அப்பிரிவின் முறையான நிர்வாகத்துக்கும், தொடர்பான பல்வேறு திட்டங்களை இணைத்து நிறைவேற்றுவதற்கும், பொறுப்புள்ளவராகிறார். வளர்ச்சி அலுவலர்களின் தலைவர் என்ற முறையில், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் விளங்கவும், அதற்கேற்ப அவர்களின் கரங்களைப் பலப்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

ஆயினும் ஊர் வளர்ச்சி என்பது, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியோர் ஆக்கப் பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே அமைய முடியும்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள், எவ்வளவு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள் என்பதைக் கணக்கிடுவதைவிட, அந்தக் கால வரம்பிற்குள் மக்களுக்கு உண்மையில் பலன் தரத்தக்க நற்பணிகள் எத்தனை செய்து முடித்துள்ளார்கள் என்பதே வரலாற்றில் பொறிக்கத்தக்க சாதனையாக இருக்கும். அவையே, என்றென்றும் அவர் புகழை நிலைத்து நிற்கச் செய்யும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், ஊராட்சித் தலைவர்களைக் குறித்துச் சொன்ன மணிமொழி ஒன்று, இன்று என் நினைவிற்கு வருகிறது :

‘‘நீங்கள், உங்கள் சொந்த வாழ்க்கையைக் கவனிக்க வேண்டாமென்று, நான் சொல்லவில்லை. நீங்கள் சமுதாயத்துக்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்றுதான் சொல்லுகிறேன்; அடிப்படையிலிருந்து, நீங்கள் செய்யும் உதவியால்தான், சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்’’ என்றார்.

இருபது ஆண்டுக் கால சமுதாய வளர்ச்சித் திட்டத்தால், எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும், ஊர்களில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளதை யாரும் மறுக்க இயலாது. ஊர்கள்தோறும் நம்பிக்கை ஒளிவீசும் நற்காட்சியைக் காண்கிறோம்.

மக்கள் ஆட்சிக்கு அடிப்படையான பண்புகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் இன்று பாதுகாத்துப் பலப்படுத்தி வருகின்றன. மக்களுக்குச் சேவை செய்வதில் தலைமைப் பொறுப்பேற்க, ஊர்கள் தோறும் பல புதிய சக்திகள் உருவாகி வருவதைக் காண முடிகிறது. இன்றைக்குக், கிராமப்புற மக்களைத் தங்கள் வளர்ச்சிக்கான வழிகளில் அவர்களையே ஈடுபடுத்தி இருப்பது, சமுதாய நலத்திட்டங்களின் மிகச் சிறந்த, நிலையான சாதனையாகும்.

உலக உத்தமர் பிறந்த இத்திருநாளில், சமுதாய வேலைகள் இன்னும் தீவிரமாக நடைபெற, நாம் அனைவரும் ஒன்றுபட்டு முயல்வோமாக!

காந்தியடிகளின் கருத்துகள் எத்தனை எத்தனையோ இன்னும் நிறைவு பெறாமல், சொல் அளவிலும் பேச்சளவிலும் நிற்கின்றன என்பதை, ஊன்றிக்கவனிப்போர் நன்கு உணர்வர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். மேடைகளில் பேசுகிறோம். ஆனால் பேசும் அளவுக்குச் செயலில் துடிப்பு இருப்பதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் மேன்மைக்கான வகையில், காந்தியண்ணல் பிறந்த இப்புனித நன்னாளில் சிறந்த பணிகளை மேற்கொள்வது சாலப் பொருத்தமாகும்.

சமுதாயம் ஒவ்வொரு வினாடியும், மாறியமைந்து வருகிறது, இதுவே, வளர்ச்சியின் அறிகுறி. வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்றவாறு, திட்டப் பணிகள் அமையவேண்டும். அவ்வாறு அமைக்க, இந்தச் சமுதாய நலத்திட்ட வார விழாவை உறுதுணையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அரசு அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், மக்களும் இணைந்து நின்று, நிலையான சமுதாயச் சொத்துகளை உருவாக்கத் தக்க ஆக்கப் பணிகளில் ஈடுபட, இந்த விழா பெரிதும் உதவுமென நம்புகிறேன்.

ஊராட்சி அமைப்புகள் வேரும், விழுதுமாக நின்று நிலைபெற்று ஒற்றுமையின் சின்னமாக, ஊக்கத்தின் பிறப்பிடமாக, நாம் அனைவரும் இணைந்து செயலாற்றினால்தான் உலகம் விரும்பும் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

தமிழகமெங்கணும் விரிந்துள்ள ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய நலத்திட்ட விழாவில் பெரும் பங்கேற்பதோடு, மக்கள் தலைவர்களும் அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து விழாவைச் சிறப்புடையதாக்கும் சீரிய பணியை மேற்கொள்வார்களென எதிர்பார்க்கிறேன்.

இருட்டை எதிர்த்து முழக்கமிடுவதைவிட, ஒரு மெழுகுவத்தியை ஏற்றி வைப்பதே இன்றைய தேவை! சமுதாய இடிபாடுகளையும் குறைபாடுகளையும் சாடுவதைவிட, நலம் அமையும் நல்ல சமுதாயத்தை உருவாக்க ஒவ்வொருவரும் தமது பங்கை அளித்துப் பணியாற்ற முன்வருவதே போற்றுதற்குரியது.

பொதுப்பணி ஏற்பீர்!
புகழ் பெற வாழ்வீர்!
வணக்கம்.

(வானொலியில் சமுதாய நலத்திட்ட வார விழாவை ஒட்டி ஆற்றிய உரை)



## கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர்
# நாவலர் நெடுஞ்செழியன்

# கல்வெட்டுக் கூறும் செய்தி



கு. தாமோதரன்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையால் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்தில் உள்ள தாமரைப்பாக்கம் என்ற ஊரில் கல்வெட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இவ்வூர் கல்வெட்டுகளில் "திருத் தாமரைப் பாக்கம்" என்று குறிக்கப்பட்டுள்ளது. பெயருக்கு ஏற்ப இவ்வூர் சிறந்து விளங்குகிறது. இங்கு எடுப்பிக்கப்பட்டுள்ள திரு அக்னீசுவரர் கோயில் சோழர் காலப் பாணியில் அமைந்துள்ளது. கோயிலில் காணப்படுகின்ற சிற்பங்கள் மிகவும் எழில் வாய்ந்தவைகளாக விளங்குகின்றன. முப்பது தமிழ்க் கல்வெட்டுகள் இங்கிருந்து படி எடுக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் இரண்டு மிகவும் சிறப்பான செய்தியினை நமக்குத் தெரிவிக்கின்றன. இவைகள் சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனின் 10-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1188-ஆம் ஆண்டு) பொறிக்கப்பட்டனவாகும்.

முதல் கல்வெட்டில் சோமனான பிரிதிகங்கன் என்பாருடைய தந்தை கூத்தாடும் தேவரான பிரிதிகங்கர் என்பார் கூத்தாடும் தொழிலில் வல்லவராய் விளங்கினார் என்றும், இவர் பள்ளி கொண்ட (இறந்து பட்ட) பொழுது இவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தியும் பள்ளி கொண்டாள் என்றும், இவள் பள்ளி கொண்டதால் இவளுடைய குடும்பத்திற்கு ஏற்பட்ட வருத்தத்தையும், இழப்பையும் போக்குவதற்கு இவளுடைய சந்ததியினருக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டது என்றும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டு இறந்தவரின் குடும்பத்துக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைத்தான் தெரிவிக்கிறது.

ஆனால், சில சமயங்களில் பள்ளி கொண்டவர்களுக்கு அவர்கள் நினைவாகப் பள்ளிப்படை அமைத்தலும் உண்டு. சிறந்த அரசர்கள் பள்ளி கொண்ட பொழுது அவர்கள் நினைவாக நிறுவப்படும் நினைவுச் சின்னத்திற்குப் பள்ளிப்படை என்று பெயர். இந்தப் பழக்கம் தமிழகத்தில் இருந்து வந்திருக்கின்றது. சோழர்கள் காலத்தில் கோயில்கள் பள்ளிப்படையாக எடுப்பிக்கப்பட்டன.

முதலாம் பராந்தகனின் தந்தையான முதலாம் ஆதித்தன் என்பவர் பள்ளிகொண்ட பிறகு, அவரது நினைவால் பள்ளிப்படையாகத் தொண்டை மாநாட்டில் ஆதி ஈசுவரர் கோயில் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்டது. இதைப் போலவே ஆற்றூரில் பள்ளி கொண்ட அரிஞ்சயனுக்காக முதலாம் இராசராசன் மேல்பாடி என்ற ஊரில் அரிஞ்சிகை ஈசுவரர் கோயிலை எடுப்பித்தான்.

இங்குப் பள்ளி கொண்ட பாடும் பெண்ணுக்கு நிலம் அளிக்கப்படுகிறது இந்த நிலம் 'பதினாறு சாண் கோலால், அளந்து விடப்பட்ட ஒரு வேலியாகும் (இருபது மா). இதை இவளுடைய சந்ததி உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது. இந்த நிலத்திற்கு சோமன் பிரிதிகங்கனுடைய வழிமுறையைச்சார்ந்தவர்கள் தீங்குச் செய்ய நினைத்தால் அவர்கள் எத்தகைய பாவத்தைச் செய்தவர்கள் ஆவார்கள் என்பதைக் கல்வெட்டு மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறது.

கணவன் இறந்துபட்ட பொழுது மனைவியும் உயிர் நீத்தல் (உடன்கட்டை ஏறுதல்) வேண்டும் என்ற பழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கின்றது. இலக்கியங்களில் ஒரு சில இடங்களில் இதைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இதைப் போலவே சுந்தர சோழனின் பட்டத்தரசி வானவன் மாதேவி என்பவள் மன்னன் இறந்த பொழுது அவன் இழப்பைத் தாங்க மாட்டாதவளாய்த் தீப் பாய்ந்தாள் என்பதை நம்மால் காண முடிகிறது.

கணவனுடன் மனைவி உயிர் நீத்தலை வேண்டுமானால் முறையாகக் கொள்ளலாம். ஆனால் இங்குப் பேசப்படுகின்ற கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கன் என்பவருடன் பாடும் தொழிலில் வல்ல பெண் ஒருத்தி பள்ளி கொண்டது(உடன்கட்டை ஏறியது) மிகவும் சிறப்புடையதாகும்.

இதே அரசனுடைய காலத்தைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு, கூத்தாடும் பிரிதி கங்கருடன் ஆடும் தொழிலில் வல்ல ஆழ்வார் ஒருவரும் இறந்துபட்டதைக் குறிக்கிறது. கூத்தாடும் தொழிலில் வல்ல பிரிதிகங்கருடன் பாடும் பெண்ணும், ஆடலில் சிறந்த ஆழ்வாரும் பள்ளி கொண்ட காரணத்தை நோக்கும் பொழுது நமக்கு உணர்ச்சி மேலோங்குகிறது. கூத்தாடுதல், பாடுதல், ஆடுதல் போன்ற மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள தொழில்களாகையால் ஏற்பட்ட உறவு காரணமாகவோ, அல்லது அவர்பால் ஏற்பட்ட அன்பின்பெருக்காலோ அவருடன் பள்ளி கொண்டிருக்கக் கூடும். இறந்துபட்டஆழ்வார்க்கு அளிக்கப்பட்ட நிலம் 'பதினாறு சாண் கோலால்' அளந்து விடப்பட்டது என்பதை நோக்கும் பொழுது மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் நிலத்தை அளக்கும் பொதுஅளவு கோலாக இது நிலவியிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

எனவே கல்வெட்டுகளின் வாயிலாக ஒரு நாட்டின் நாகரிகத்தையும், சமூகத்தில் நிலவிய பழக்க வழக்கங்களையும், அளிக்கப்பட்ட கொடை முறைகளையும், நாட்டில் நிலவிய அளவை முறைகளையும் நம்மால் காண முடிகிறது. இத்தகைய காட்சிகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகக் கல்வெட்டுகள் விளங்குகின்றன.

# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்



களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!




இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.




நம் நாட்டில் தாவரங்களையும், தாவர இனப் பெருக்கத்திற்கான தண்டுகள், கிழங்குகள், பதியங்கள், ஒட்டுகள், ஆகியவற்றையும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்குச் சில ஒழுங்கு முறைகள் உள்ளன என்பது பலருக்குத் தெரியாது. உலகமெங்கணும், வேகத்திலும், போக்குவரத்தின் வகையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக அனைத்து நாட்டுப் பயணமும், வாணிபமும் பெருமளவில் பெருகியுள்ளன. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும்—அறிந்ததும், அறியாததுமான—தீங்கு விளைவிக்கக் கூடிய பல்வேறு பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளின் தாக்குதலுக்கு இலக்காகின்றன. அந்தப் பூச்சிகளும், நோய்களும் மனித இனத்தையும், கால்நடைகளையும் தாக்குவதுடன், பல்வேறு வகையான தாவரங்களையும், உணவு, நார், மற்றும் மதிப்பு வாய்ந்த பொருள்கள் அல்லது நாட்டின் முன்னேற்றத்திற்கும், செழிப்பிற்கும் உதவக் கூடிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் ஆகியவைகளைக் கொடுக்கக் கூடிய தாவரப் பொருள்களையும் தாக்கிப் பாழ்படுத்துகின்றன. அவற்றுள் சில களைகளும், நோய்களும், பூச்சிகளும் புதிய பகுதிகளில் புகுந்து, ஆங்காங்கே நிலைத்து நின்று தொடர்ந்து தீங்கு விளைவித்து வருவதற்குச் சில ஆதாரங்களும் காணக் கிடக்கின்றன.

தென் அமெரிக்காவிலிருந்து வந்த 'லாண்டானா' (Lantana), 'ஆகாயத் தாமரை' அல்லது 'வெங்காயத் தாமரை' (Water Hyacinth) எனப்படும் களைகள் இந்தியாவில் வேளாண்மை உற்பத்தியை வெகுவாகப் பாதித்து வருகின்றன.

வாழையின் முடிக் கொத்து நோய் (Bunchy top disease of Banana) ஒரு வகை கருநச்சு நுண்ணுயிரினால் (Virus) ஏற்படுகிறது. இந்த நோய் ஒரு வகைப் பூச்சியினால் பரவுகிறது. இந்நோய் 1940-ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து கேரளாவிற்கு வந்தது. 1943-ஆம் ஆண்டிலேயே கேரள மாநிலத்தில் கோட்டயம் பகுதியில் சில நூறு ஏக்கர்களில் இந்நோய் பரவி விட்டது.

கேரளா, ஒரிசா, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களுக்கு 4கோடி ரூபாய் நட்டத்தை முடிக்கொத்து நோய் ஏற்படுத்துகிறது. அண்மைக் காலத்தில் கேரளாவிலிருந்து கட்டுப்பாடின்றி, வாழைக் கன்றுகளை இறக்குமதி செய்து வந்ததன் காரணமாகத் தமிழ்நாட்டிலும் முடிக்கொத்து நோய் புகுந்து விட்டது.

உருளைக் கிழங்கில் 'வார்ட்' (Wart) எனப்படும் நோய் மேற்கு வங்காளத்தில் 'டார்ஜிலிங்' மாவட்டத்தில் 1952-ஆம் ஆண்டில் முதன் முதலில் காணப்பட்டது. இந்நோய் 'ஹாலந்து' (Holland) நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு மூலமாக இந்தியாவில் பரவியது. பத்தாண்டுக் காலத்தில், அதாவது 1962-ஆம் ஆண்டிலேயே, இந்நோய் ஏறத்தாழ 2,500 ஏக்கர் பரப்பில் பரவிவிட்டது. சமீப காலத்தில் நேபாள நாட்டிலும், இந்நோய் பரவியுள்ளதாகத் தெரியவருகிறது. இக்கொடிய நோய் மற்ற மாநிலங்களில் பரவுவதைத் தடுப்பதற்காக, இந்திய அரசின் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், பயிர்ப்பூச்சிகள் சட்டம் 1914-இன் படி (Destructive Insects and Pests Act, 1914 of Government of India) மேற்கு வங்காளத்திலிருந்து உருளைக் கிழங்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

உருளைக் கிழங்குச் செடியைத் தாக்கும் 'பொன்னிற நூற்புழுக்கள்' (Golden Nematode) முதன் முதலில் 1961-ஆம் ஆண்டில் நீலகிரியில் தோன்றின. 'கிரேட் ஸ்காட்' (Great Scot) என்னும் ஒருவகை உருளைக் கிழங்குகளை விதைக்காக, ஸ்காட்லாந்திலிருந்து (Scotland) பெருமளவில் இறக்குமதி செய்ததன் மூலமாக பொன்னிற நூற் புழுக்கள் இந்தியாவில் புகுந்துவிட்டன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு (Survey) மூலமாக உதகமண்டலத்தைச் சுற்றிலும் உள்ள 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பில் பொன்னிற நூற்புழுக்கள் பரவியுள்ளன என்பது தெளிவாகிறது.

இக்கொடிய புழுக்களை அறவே ஒழிக்க வேண்டுமானால் ஏக்கருக்கு ரூபாய் 3,000 முதல் ரூபாய் 4,000 வரை செலவிட வேண்டியுள்ளது. இந்திய—ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இப்புழுக்களை அழிப்பதற்காக மேற்கு ஜெர்மனி அரசாங்கம் 'டாசனிட்' (Dasanit) என்னும் நூற்புழுக் கொல்லி மருந்தை இலவசமாக வழங்கி வருகிறது.

ஆப்ரிக்காவிலிருந்து நம் நாட்டிற்கு வந்து சேர்ந்த ஜெயின்ட் ஆப்ரிக்கன் ஸ்நெயில் (Giant African Snail) என்னும்

ஒருவகை நத்தை, சென்னை நகரிலும், கேரளா, ஒரிசா, அசாம் ஆகிய மாநிலங்களிலும் சாகுபடி செய்யப்படும் காய்கறிச் செடிகளைப் பழாக்கி வருகின்றன.

ஆப்பிள் மரத்தில் காணப்படும் 'சான்ஜோஸ் ஸ்கேல்' (Son Jose Scale) எனப்படும் செதில் பூச்சிகளும் இறக்குமதியின் மூலமாக இந்தியாவில் புகுந்தவையே என்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்பூச்சிகள் தற்பொழுது ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், இமாசலப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்காளம், அசாம், ஒரிசா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன. ஆப்பிள் மரமின்றி, இருநூறுக்கும் மேற்பட்ட பழமரங்கள், செடிகள், வண்ணப் பூச்செடிகள் ஆகியவை இப்பூச்சிகளை உயிர்வாழ வைக்கின்றன என்பதால்இவைகளை கட்டுப்படுத்துவதென்பது எவ்வளவு சிரமமான செயல் என்பது விளங்குகிறது. இச்செதில் பூச்சிகளைப் போலவே 'உல்லி ஏபிட்' (Woolly Aphid) எனப்படும் உரோமம் போன்ற வளர்ச்சி கொண்ட அசுவணிப் பூச்சிகளும் ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், இமாசலப் பிரதேசம் உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சாகுபடி செய்யப்படும் ஆப்பிள் மரங்களில் தோன்றிச் சேதம் விளைவிக்கின்றன. இதுவும் இறக்குமதியின் மூலம் இந்தியாவில் புகுந்த பூச்சி வகையேயாகும்.

குறுகிய காலத்தில், மிகு பயன் தரவல்ல வெளிநாட்டு ரகங்களைப் பெரும் பரப்பில் பயிரிட வேண்டும் என்ற நோக்குடன் பெருமளவு விதைகள் தற்போது இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. புத்தம் புதிய ரகங்களைப் பயிரிட வேண்டும் என்ற பேரவாவுடன், கொடிய பூச்சிகளும் நோய்களும் அவ்விதைகளுடன் சேர்ந்து இந்தியாவில் புகுந்து விடக் கூடாதென்பதற்காக, முன்னெச்சரிக்கையான சில தடுப்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற பேரவா இன்று நம்மிடையே எழ வேண்டும். ஏனெனில், இறக்குமதியாகும் விதைகளின் மூலம் பல்வேறு கொடிய நோய்களும், பூச்சிகளும், களைகளும் இந்தியாவில் புகுந்து நம் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெரிதும் சீர்குலைத்து விடக்கூடும்.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், கோதுமை விதை இறக்குமதி செய்யப்படுவதை எடுத்துக் கொள்ளுங்கள். கோதுமை விதை 55 வகையான பேக்டீரியல் மற்றும் பூஞ்சாள நோய்களைப் (Bacterial and Fungal diseases) பரப்பக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்நோய்களில் சில கோதுமைப் பயிரை மட்டுமல்ல, மற்றத் தாவரங்களையும் தாக்கக் கூடியவையாகும்.

அது போலவே, ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக் கிழங்குகள், 'எக்ஸ்' (X) 'ஒய்' (Y) என்ற இரு கடும் நச்சு நுண்ணுயிர்களைக் கொண்டு வருகின்றன. இவ்விரு நுண்ணுயிர்களும் உருளைக் கிழங்குச் செடிகளைத் தாக்குவதில்லை. ஆனால் அவைகள் வெகு வேகமாகக் பெருகிப் புகையிலைச் செடிகளைத் தாக்கி, முழு அளவில் சேதம் விளைவிக்கின்றன.

எனவே, எந்த முன்னேறும் நாடும், எல்லா வகையான தாவரங்களையும், தாவரப் பொருள்களையும் கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்வதையும் அல்லது அவைகளைத் தங்கள் நாட்டு எல்லைக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கட்டுப்பாடின்றிக் கொண்டு செல்வதையும் அனுமதிக்காது. இறக்குமதி செய்யப்படும் நாற்றங்கால் செடிகள், பதியன்கள், கிழங்குகள், வேர்கள் ஆகியவை மூலமாகவும் அல்லது பழங்கள், காய்கறிகள், கொட்டைகள், விதைகள், இலைகள், வைக்கோல் முதலிய பல்வேறு பொருட்களின் மூலமாகவும் தாவரப் பூச்சிகளும், நோய்களும் பரவிப் பெருகுவதால் அவைகளை இறக்குமதி செய்வதற்குச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதை உலக நாடுகள் உணர்ந்தன. இதன் காரணமாகவே, உணவு வேளாண்மை நிறுவனத்தின் (Food and Agriculture Organisation) பேருதவியுடன், தென்மேற்கு ஆசியாவிற்கும், பசிபிக் மண்டல நாடுகளுக்குமான பயிர்ப் பாதுகாப்பு உடன்படிக்கை 1956-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அதே ஆண்டில் ஆஸ்திரேலியா, இலங்கை, ஐக்கிய அரசு (U.K.), லாவோஸ், நெதர்லாந்து இந்தோனிசியா, போர்ச்சுகல், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் இந்த உடன்படிக்கையில் பங்கேற்றது.

நமது இந்திய அரசாங்கம் அந்த உடன்படிக்கையின் படி தாவரங்கள், தாவரப் பொருள்களின் பூச்சிகளும், நோய்களும் இந்தியாவில் புதிதாகப் புகுவதையும், பரவுவதையும் தடுப்பதற்குரிய பொதுவான தீவிர நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய முறைகளை ஊக்குவிக்கவும், உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள சட்டப்பூர்வமான முறைகளை மேற்கொள்வதற்கும் ஒப்புக் கொண்டது. மேலும் இவ்வுடன்படிக்கையின்படி இந்திய எல்லைக்குள் முழு அளவில் செயல்பட எல்லா வகையான பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள நமது இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

இந்தியாவில் தாவரப் பூச்சிகளும், நோய்களும் புகுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நன்நோக்குடன்-எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாகவும், இந்தியாவின் சக்திக்கும் ஏற்ப-ஓர் அரசாங்க பயிர்ப்பாதுகாப்பு நிறுவனத்தை நிறுவுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிட இந்திய அரசு ஒப்புக் கொண்டது. தாவரங்களும், தாவரப் பொருள்களும் இந்தியாவில் இறக்குமதி செய்யப் படுவதை ஒழுங்குபடுத்த இந்திய அரசு முழு அதிகாரத்தைப் பயன்படுத்தவும் ஒப்புக் கொண்டது. அதன்படி இந்திய அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(அ) தாவரங்கள் அல்லது தாவரப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதற்குக் கட்டுப்பாடுகளையோ அல்லது தேவையான முறைகளையோவிதிக்கலாம்.

(ஆ) குறிப்பிட்ட தாவரங்களையோ அல்லது தாவரப் பொருட்களையோ இறக்குமதி செய்வதைத் தடைபடுத்தலாம். அல்லது அவைகளின் குறிப்பிட்ட இறக்குமதி முழுவதையுமே தடைப்படுத்தலாம்.

(இ) தாவரங்களும் தாவரப் பொருட்களும் அடங்கிய குறிப்பிட்ட இறக்குமதியைப் பார்வையிடலாம் அல்லது அவைகளை இறக்குவதற்கு அனுமதியளிக்காமல் நிறுத்தி வைத்துவிடலாம்.

டாக்டர் எஸ்.என்.பானர்ஜி
இந்திய அரசின் பயிர்ப் பாதுகாப்பு அறிவுரை வழங்குநர்

(ஈ) குறிப்பிட்ட இறக்குமதியில் உள்ள பூச்சிகளையும், நோய்களையும் தடுப்பு மருந்து தெளித்து அழிக்கலாம். அல்லது குறிப்பிட்ட இறக்குமதிக்கு அனுமதி மறுக்கலாம். குறிப்பிட்ட இறக்குமதிக்கு மருந்து தெளிக்கும்படி கட்டாயப்படுத்தலாம். அல்லது அவைகளை அறவே அழித்துவிடலாம்.

இந்தியாவில், பூச்சிகளும், நோய்களும் புகுவதைத் தடுக்க 1914-ஆம் ஆண்டு முதலே, சட்ட அடிப்படையான நடவடிக்கைகளை இந்தியஅரசு மேற்கொண்டு வருகிறது. அனைத்து நாட்டு வாணிபம், போக்குவரத்து நடைபெற்று வரும் முக்கியத் துறைமுகங்களிலும், விமான நிலையங்களிலும் தாவரப் பூச்சி நோய்த்தடுப்புப் பணிகள், இந்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. பம்பாய், கல்கத்தா, கொச்சி, சென்னை, இராமேசுவரம், தூத்துக்குடி, விசாகப்பட்டினம், பவநகர் முதலிய துறைமுகங்களிலும், அமிர்தசரஸ், பம்பாய், திருச்சிராப்பள்ளி, சென்னை கல்கத்தா, புதுடில்லி முதலிய விமான நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ள தாவரப் பூச்சி, நோய்த் தடுப்பகங்களில் (Plant Quarantine Stations) தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் பார்வையிடவும், அவைகளுக்குத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளவும் வசதி உள்ளன.

ஆப்கானிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்களை, இந்திய-பாகிஸ்தான் எல்லையில் உள்ள 'ஹசையினிவாலா' (பெரோஸ்பூர்) வில் நிறுவப்பட்டுள்ள தாவரப் பூச்சி நோய்த் தடுப்பகம் மற்றும் புகைபோடும் நிலையத்தில் (Plant Quarantine and Fumigation Station) பார்வையிடப்பெற்று புகை போடப்படுகிறது. நேபாளத்திலிருந்து இறக்குமதியாகும் உருளைக் கிழங்குகளை இந்திய-நேபாள எல்லையில் உள்ள 'சுக்கியா போக்ரி' (டார்ஜிலிங்) என்னுமிடத்திலிருக்கும் தாவரப் பூச்சி நோய்த் தடுப்பு நிலையத்தில் பார்வையிடப்படுகிறது.

நடைமுறையில்உள்ள எல்லாத் தாவரப் பூச்சி நோய்த் தடுப்புச் சட்டங்களும், புதிய பகுதிகளில் பூச்சிகளும், நோய்களும் நுழைவதையும், பரவுவதையும் தடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எனவே இக் குறிக்கோளினை எய்திட மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்புடைய பூச்சி அல்லது நோயின் வகையுடன் நேரடித் தொடர்புடையதாக உள்ளன.

பொதுவாக எல்லாத் தாவரங்களையும், தாவரப் பொருள்களையும் குறிப்பிட்ட துறைமுகங்களின் மூலமாகவே இறக்குமதி செய்யப்பட வேண்டும். தற்பொழுது பம்பாய், கல்கத்தா, கொச்சி, பவநகர், இராமேசுவரம், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி, விசாகப்பட்டினம் முதலிய துறைமுகங்களின் மூலமாகவே இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்துறைமுகங்களில் இறக்குமதியாகும் தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் பார்வையிட்டுத் தேவையானால், தகுந்த தடுப்புச் சிகிச்சைகளும் செய்யப் படுகின்றன. அவைகள் தாவர நலச் சான்றிதழுடன் (Phytosanitary Certificate) வந்திருந்தால்தான் அவ்வித துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்படும்.

விமானம் மூலமாகத் தாவரங்களை இறக்குமதி செய்ய வேண்டுமானால், இந்திய அரசின் பயிர்ப் பாதுகாப்பு அறிவுரை வழங்குநர் (Plant Protection Advisor to the Government of India) அவர்களிடமிருந்து அனுமதிச் சீட்டுப் (Permit) பெற வேண்டும். நிறையத் தாவரங்களையும், தாவரப் பொருட்களையும் விமானம் மூலமாக இறக்குமதி செய்ய, மேற் குறிப்பிட்டவரிடமிருந்து சிறப்பு அனுமதிச் சீட்டுப் (Special Permit) பெற்றிருக்க வேண்டும். அனுமதிச்சீட்டுடன், பச்சை, ஆரஞ்சு வண்ணக் கலர் விவரச் சீட்டுகள் (Tag) வழங்கப்படுகின்றன. அனுமதிச் சீட்டையும், விவரச் சீட்டையும் பொருட்களைப் அனுப்புநருக்கு அனுப்ப வேண்டும். தாவர நலச் சான்றிதழ், அனுமதிச் சீட்டு, விவரச் சீட்டு ஆகியவைகளைத் தாவரங்கள் அல்லது தாவரப் பொருட்களுடன் அனுப்பப்பட வேண்டும். விவரச்சீட்டு மூலமாக உடனுக்குடன் தாவரப்பூச்சி, நோய்த் தடுப்பகப் பணியாளர்களால், பல்வேறு தாவரப் பூச்சி, நோய்த் தடுப்பகம், மற்றும் புகை போடும் நிலையங்களில் தாவரப் பூச்சிகள் அல்லது நோய்களைக் கண்டுபிடித்து, சோதனை செய்து, தேவையானால் அவைகளுக்குத் தடுப்புச் சிகிச்சை செய்து, அவைகள் மனநிறைவு அளிக்கும் வகையில் இருப்பின் உரியவர்களுக்கு வழங்க அனுமதியளிக்கப்படுகின்றது.

## வெண்பாப் போட்டி-45.

**முறிப்படி :**

**சிக்கலைகள் கற்போம் சிறந்து.**

**முடிவு நாள் : 1-11-1972.**

பரிசு : ஓராண்டு ''தமிழரசு'' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



# காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு

சென்ற இதழ்த் தொடர்ச்சி

முத்து

பாசன முறையில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்க்க இன்றைய அரசு என்ன செய்தது?

இச்சிக்கல்களைத் தீர்க்கக் காவிரி கழிமுகப்பகுதியில் உள்ள பழைய பாசன முறையைப் புதுப்பிக்க ஒரு தனித் திட்டம் (A Master Plan) தீட்டப் பெற்றது. சீரிய முறையிலும், சிக்கனமாகவும் பாசனம் செய்யவும், விருப்பத்திற்கேற்பப் பாசனத்தைக் கட்டுபடுத்தவும், மழையின்மூலம் காவிரியில் வரும் நீரையும், காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள நில நீரையும் (Ground water) ஒருங்கிணைத்துப் பயன் படுத்திக் கொள்ளவும், தஞ்சை மாவட்டக் கழிமுகப் பகுதியில் உள்ள பாசன அமைப்பு முறைகளைக் காலத்திற்கேற்ற வகையில் சீரமைப்புச் செய்ய இத்திட்டம் வகை செய்கிறது.''

''காலத்திற்கேற்ற முறையில் காவிரியைச் சீரமைப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் என்னென்ன பணிகள் அடங்கியுள்ளன?''

''காலத்திற் கேற்ற வகையில் காவிரியைச் சீரமைப்புச் செய்யத் திட்டத்தில் 6 முக்கியப் பணிகள் அடங்கியுள்ளன. அவற்றில் முதலாவது பணி, காவிரி நதியில் வரும் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த, கல்லணையைப் பலப் படுத்துவதாகும்.''

''இரண்டாவது பணி காவிரி கழிமுகப் பகுதியில் பாயும் ஆறுகளை மேம்படுத்துவதாகும். இப்பணியின் கீழ் 3 வகையான வேலைகள் மேற்கொள்ளப்படும். இப்பணியின் கீழ் முதலாவதாகத் தேவையான இடங்களில் ஆற்றின் கரைகளுக்கு வலிவூட்டுவதுடன் கரையின் உயரத்தையும் உயர்த்தப்படும். இரண்டாவதாக, ஆறுகளில் வாய்க்கால்களில் அதிக அளவு நீர் கசிந்து விடும் ( seepage ) பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அப்பகுதிகளிலெல்லாம் கான்கிரீட் பலகைகளைக் கொண்டு தளம் அமைத்துத் தண்ணீர் கசிவதைத் தடுத்து நிறுத்தப்படும். மூன்றாவதாக, முக்கிய ஆறுகள் கிளை ஆறுகளின் குறுக்கே பொறி மதகுகள் அமைப்பதுடன், மொட்டைஅணைகளைப் (bed dams) பொறி மதகு கொண்ட அணைகளாக மாற்றப்படும்.''

''மூன்றாவது பணி, 'எ' வகுப்பு வாய்க்கால்களைத் தேவையான இடங்களில் சீரமைத்துத் தரப் படுத்துதல், பிரிவு அணை, மதகுகள், சரிவுச்சுவர்கள் ஆகியவைகளைக் கட்டுதல் மூலமாக மேம்படுத்துதலாகும்.''

''நான்காவதாக 50 ஏக்கர் பாசனப்பரப்பு வரை செங்கற்களால் அல்லது குழாய் மூலம் மதகு அமைப்பதுடன், தேவையான இடங்களில் வாய்க்கால்களை நேர்படுத்தி, தரப்படுத்தித் தூர் எடுக்கப்படும்.''

ஐந்தாவதாகப் பாசனம், வடிகால் ஆகிய இரு பணிக்காகவும் பயன்பட்டு வரும் ஆறுகளுக்கு அதிக அளவு நீர் வழங்கப்படும்.

ஆறாவதாகக் கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டு மேம்படுத்தப்படும். இவைகளுடன் வேறுசில முக்கியப் பணிகளும் இத்திட்டத்தின் கீழ் அடங்கியுள்ளன.''

'' அவைகளையும் கூறு தம்பி?''

'' ஐயா, தற்பொழுது காவிரி கழிமுகப் பகுதியில் ஏறத்தாழ 40,000 ஏக்கர் சாகுபடி நிலம், 20 நாள் முதல் 5 மாதம் காலம் வரை, வெள்ளத்தில் அமிழ்ந்து விடுகிறது. இதனால் ஏற்படும் சேதம் அதிகமாக உள்ளது. அதுவும் குறிப்பாகச் சீர்காழி வட்டத்தில் வடிகால் வசதி மிகவும் குறைவு. வெண்ணாற்றுப் பாசனப் பகுதியில் உள்ள அதிக அளவு தாழ்ந்த நிலங்கள் வடகிழக்குப் பருவமழை காலத்தில் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்நிலைமையைப் போக்க வேண்டுமென்பதற்காகத் தற்பொழுதுள்ள வடிகால் ஆறுகளை மேம்படுத்தவும், வெள்ளத்தை வேகமாகவும் விரைவாகவும் வடியச் செய்து வெள்ளத்தால் அமிழ்ந்த நிலங்களை மீட்கவும், வளைந்து வளைந்து செல்லும் வடிகால் வாய்க்காலில் தேவையான இடங்களில்நேருக்கு நேராக வெட்டி விடவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதிக அளவு வெள்ளம் காவிரியில் புகுவதைத் தடுக்கும் நோக்குடன் மேல் அணைக்கட்டில் காவிரியின் குறுக்கே, வெள்ளத் தடுப்பு அணை (barrage) கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.''

'' நில நீர் உபயோகிக்கப் படும் என்று குறிப்பிட்டாயே ! அதுவும் காவிரி சீரமைப்புத் திட்டத்தில் அடங்கியதா ?''

'' ஆமாம் ! குறைவான தண்ணீர் இருப்பது காரணமாக மேட்டூர் அணை திறந்து விடப்படுதல் காலங் கடந்த போதிலும் காலத்தில் நாற்று விடுவதற்காக மழையினால் கிடைக்கும் மேல் நீரையும், நில நீரையும் ஒருங்கிணைத்து உபயோகிப்பதற்காகவும், காவிரி கழிமுகப் பகுதியில் 5,000 முனைக் குழாய்களும் (Filter points), 1,000 ஆழ் குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும். இது காவிரி சீரமைப்புத் திட்டத்தில் ஒரு சிறப்பு அம்சமாகும். நிலவங்கிகள் வழங்கும் கடன் தொகையைக்கொண்டு உழவர்களே வடிமுனைக் குழாய்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் ஓர் அங்கமாக 1,000 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்துக்கொடுக்கப் படும். ''

''நவீனப் பாசன முறை என்று முன்பு குறிப்பிட்டாயே ! அது என்ன ? அதுவும் காவிரி சீரமைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறதா ?''

'' தஞ்சை மாவட்டத்தில் ஒரு வயலிலிருந்து, மற்றொரு வயலுக்கு என்ற முறையில்தானகவே பாசனம் நடைபெற்று வருகிறது. இதனால் தண்ணீர் சேதமாகிறது. இம்முறையை மாற்றியமைக்கக் காவிரி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒரு துணைத்திட்டம் உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 'சித்தமல்லி' என்ற கிராமத்தில், வேளாண்மைத் துறையினரால் ஒவ்வொரு வயலுக்கும்தனித்தனியாகப் பாசன வாய்க்காலும், வடிகால்வாய்க்காலும்அமைத்துப் பாசனம் செய்யப்பட்ட சோதனைகளிலிருந்து, பாசனநிருவாகத்தில் சிக்கனமும் நற்பயனும் கிட்டுவது தெரிய வந்துள்ளது. சித்தமல்லி பாசன முறையைக் காவிரி

சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 3,00,000 ஏக்கர் நிலத்திற்கு விரிவுபடுத்தப்படும். இவ்வாறு காவிரி சீரமைப்புத் திட்டத்தில் பல கூறுகள் அடங்கியுள்ளன.''

'காவிரி சீரமைப்புத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் ?''

'' தஞ்சை மாவட்டத்தில் பழைய காவிரி கழிமுகப் பகுதி பாசன முறையைக் காலத்திற்கு ஏற்ற வகையில் சீரமைக்கும் திட்டத்திற்கு 49 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.''

'' இத்திட்டத்தின் இன்றைய நிலை என்ன தம்பி ?''

'' காலத்திற்கு ஏற்ற வகையில் காவிரி சீரமைப்புச் செய்யும் திட்ட மதிப்பீடு இந்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. இத்திட்டம் மைய அரசின் நீர் மின்சார ஆணைக்குழுவின் (Central water and power Commission) ஆய்வில் உள்ளது. இதற்கிடையில் உலகவங்கிக்குழு (world Bank Team) இத் திட்டத்திற்கு உதவ முன்வந்து, காவிரி கழிமுகப் பகுதியைப் பார்வையிட்டு, இத்திட்டத்தை ஆய்வு செய்து வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு அரசுக்கும், மைசூர் மாநில அரசுக்கும் இடையே காவிரி நீர் பெறுவதில் தகராறு ஏற்பட்டு விட்டது. தமிழ் நாட்டிற்கும் மைசூருக்கும் இடையே 1892-ஆம் ஆண்டிலும், 1924-ஆம் ஆண்டிலும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறிக் காவிரியிலும், அதன் கிளை நதிகளிலும் மைசூர் மாநில அரசு ஹேமாவதி, கபினி, ஹரங்கி, யாகாஷி முதலிய பாசனத் திட்டங்களை—இந்திய அரசின் அனுமதி பெறாமலேயே—துவக்கியதனால், இத் தகராறு ஏற்பட்டு விட்டது. இதைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டு மென்பதற்காகத் தமிழ் நாடு அரசு, இந்தியத்தலைமை நீதி மன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. இதன் காரணமாகக் காவிரி சீரமைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்த முடிய வில்லை.''

'' நீ கூறுவதைப் பார்த்தால் இத்திட்டம் இன்னும் செயல்படத் துவங்கவில்லை போலிருக்கிறதே !''

'' நீங்கள் நினைப்பது தவறு ஐயா ! மைய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்பதற்காகவும், உலக வங்கியின் கடன் உதவி கிடைக்கவில்லை என்பதற்காகவும், இந்நல்ல திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தள்ளிப் போட்டுவிட வில்லை ! 'காலம் பொன் போன்றது கடமை கண்போன்றது' என்பதை நன்கு உணர்ந்துள்ள கலைஞர், காவரி பாசன முறையைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் சில முன்னோடித் திட்டங்களைச் (Pilot Schemes) செயல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

தமிழ் நாடு அரசு, முன்னோடித் திட்டங்களின் கீழ் இதுவரை 149 வாய்க்கால்களைச் சீரமைப்புச் செய்ய, ரூபாய் 146 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களை அனுமதித்துள்ளது. அவைகளின் சீரமைப்பு வேலைகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்ற பாங்கில் நடைபெற்று வருகின்றன. இது போலவே, ரூபாய் 135 இலட்சம் மதிப்புள்ள, 44 வடிகால் திட்டங்களும்தமிழ்நாடுஅரசால் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவிரி கழிமுகப் பகுதியில் உள்ள பாசன வாய்க்கால்களில் உள்ள தூர்களை எடுக்கும் வேலையைக் குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் உழவர்களே செய்ய வேண்டும். உழவர்கள் குடி மராமத்துத் திட்டத்தில் நாட்டம் கொள்ளாததன் காரணமாகப் பெரும்பாலான வாய்க்கால்களில் மண் மூடிவிட்டது. பொதுப் பணித்துறையினரால்பராமரிக்கப் பட்டு வரும் வாய்க்கால்களில், குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசு 1971—72-ஆம் ஆண்டில் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கியது. இத்துடன் தமிழ்நாடு அரசு நின்றுவிட்டதாக எண்ணிவிடாதீர்கள்''.

'' நான் அப்படி நினைக்கவில்லை தம்பி ! நாட்டிற்கு நல்லது எனின் அதை விரைந்து செயல்படத்தமிழ்நாடு முதல்வர்கலைஞர் கருணாநிதி தயங்க மாட்டார் என்பது என் நம்பிக்கை ! மேலும் இத்திட்டத்தின்கீழ் என்னென்ன பணிகள் செய்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள ஆர்வத்துடன் இருக்கிறேன். சீக்கிரம் சொல் தம்பி.''

'' காவிரி கழிமுகப் பகுதியின் பாசன அமைப்பைப் பராமரிப்பதில்உள்ளசங்கடங்களைத்தவிர்ப்பதற்காகத்தற்பொழுதுள்ளபாசன அமைப்பைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் விரைவுத் திட்டத்தையும் (Accelerated Programme of repairs to and renavation of the Cauvery Delta Irrigation system) கலைஞர் கொண்டு வந்துள்ளார். இத் திட்டத்தை1972—73-ஆம்ஆண்டு தொடங்கி நான்காண்டுகளில், 1,298.33 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றத் தமிழ் நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 244 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

காவிரி கழிமுகப் பகுதியில் வெள்ளக்கட்டுப்பாடு வடிகால் திட்டங்களுக்காக இந்த ஆண்டிற்கு 20.73 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கொள்ளிடம், காவிரி ஆகியவற்றின் கரைகள் எங்கெல்லாம் வலு விழந்து உள்ளனவோ அங்கெல்லாம் வெள்ளத் தடுப்புத்திட்டத்தின் கீழ் அவைகளை வலுப் படுத்துவதற்காக இந்த ஆண்டிற்கு ரூபாய் 22.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



காவிரி கழிமுகப் பகுதியில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபாய் 212 இலட்சம் செலவில் மேல் அணைக் கட்டில், காவிரியின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஆணைக்குழுவின் ஏற்பளிப்புப் பெறப்பட்டவுடன், இப்பணி மேற்கொள்ளப்படும். காவிரி சீரமைப்புத் திட்டத்தினைப் பற்றி எனக்குத் தெரிந்தவைகளைக் கூறிவிட்டேன். இனிமேலாவது, கரிகாற் சோழனின் குரலில் தாங்கள் பேசுவீர்கள் என்று நம்புகிறேன்.''

''சரி தம்பி'' என்று கூறிவிட்டு, உடனே அவர் கரிகாற் சோழனின் குரலில் பேசத் துவங்கினர்.

''தம்பி, என்னை அரசாளவிடாமல் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட எண்ணிய பகைவர்கள், என்னைச் சிறையிலடைத்துச் சிறைக் கோட்டத்திற்கே தீயிட்டனர். சிறையிலிருந்து தப்பி, என் பகைவர்களை வென்று அரசு கட்டிலில் ஏறினேன். என்னை அரசாளவிடக் கூடாதென்பதற்காக எத்தனை போராட்டம் தமிழ்நாட்டில் நடந்தது தெரியுமா? என்னை எதிர்த்த சேர, பாண்டிய மன்னர்களை 'வெண்ணி என்னுமிடத்தில்போரிட்டு அவர்களைத் தோற்கடித்தேன். அப் போரில் சேரமான் நெடுஞ் சேரலாதனின் மார்பில் என் அம்பு பாய்ந்து உடலை ஊடுருவி முதுகுப்புறமாக வந்துவிட்டது. அதனல், ஏற்பட்ட முதுகுப் புண்ணை, நெடுஞ் சேரலாதன் புறப் புண்ணாகக் கருதி, வெட்கப் பட்டு, வடக்கிருந்து உயிர் துறந்ததை நினைக்கும் பொழுது என் உடல் இன்றும் புல்லரிக்கின்றது. எனக்கு இன்னல் பல கொடுத்துவந்த இருங்கோவேளை அடக்கினேன். கற்கா, வேள்நாடு, குட்டம், குடம், பூழி தென்பாண்டி நாடு, தொண்டை நாடு ஆகியவைகளை வென்று அவைகளை என் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தேன். தமிழ்நாடு முழுவதும் வென்றபின், வட நாடு நோக்கிப் படையைச் செலுத்தினேன். இமயமலையை அடுத்த வச்சிர நாட்டு மன்னன் நான் படையெடுத்து வருவதைக் கேட்டு, எனக்கு 'முத்துப்பந்தர்' ஒன்றைத் திறையாகக் கொடுத்து என்னுடன் நட்பு கொண்டான். மகத நாட்டு மன்னன் எனக்குப் பணியமறுத்துஎதிர்த்துத்தோற்று இறுதியில் பணிந்து, 'பட்டிமண்டபம்' ஒன்றினைத் திறைப் பொருளாகக் கொடுத்தான். அவந்தி நாட்டு மன்னன் என் ஆற்றலை அறிந்து, அஞ்சி, என்னை எதிர்கொண்டு அழைத்துத் தன்னிடமிருந்த மிக உயர்ந்த வாயில் தோரணம் ஒன்றைக் கொடுத்தான். எதிர்ப்பவர் இல்லாது முன்னேறிய என்னை, இமயமலை தடுத்தது. எனவே அம் மலையின் மேல் என் அடையாளச் சின்னமாகிய புலியைப் பொறித்துவிட்டு வெற்றி வாகையோடு திரும்பினேன். கடற் படையைச் செலுத்தி ஈழத்தை வென்றேன். ஈழத்திலிருந்து போர்க் கைதிகளைக் கொண்டு வந்தேன்.''

''தங்கள்வாழ்நாளில், பெரும் பகுதியைப் போர்க்களத்திலேயே கழித்து விட்டீர்கள் போலிருக்கிறது?'



''இல்லை தம்பி! நான் போர்க்களத்தில் விருப்பம் உள்ளவனல்ல! நாட்டிற்கு நல்லது செய்ய நினைத்தேன்! ஆனல் நயவஞ்சகர்கள் எனக்கு எண்ணற்ற தொல்லைகளை அடுக்கடுக்காய்க் கொடுத்து வந்ததால், நான் போராட நேர்ந்தது. போரில் கிடைத்த வெற்றியும் பரிசுப் பொருள்களும் என்னைப் பரவசப் படுத்தியது என்று நினைக்கிருயா? இல்லவே இல்லை. என் பகைவர்களை எல்லாம் அடக்கியபின், நான் சுகபோகத்திலே ஈடுபட்டிருப்பேன் என்று நினைக்கின்ருயா?''

''இல்லை! தாங்கள் நாடெங்கும் குளந்தொட்டு வளம் பெருக்கியதாகவும், காடு வெட்டி நாடாக்கியதாகவும், காவிரியின் இரு மருங்கும் பெருங்கரை கட்டியதாகவும் பல புதிய கால்வாய்களை வெட்டுவித்ததாகவும், கல்லணையைக் கட்டிக் காவிரியின் நீரினை வாய்க்கால்களின் வழியே செலுத்தி, உழவுத் தொழிலை விழுமியதாக்கியதாகவும் பழந்தமிழ்ப் பாடல்கள் மூலமாக அறிந்துள்ளேன்!''

''பழந்தமிழ்ப் பாடல்களைத் தவிர வேறு சான்று இல்லையா?''

''ஏனெனில், ஏறக்குறைய 1,800 ஆண்டுகளுக்கு முன்பே கரிகாற் சோழன் கற்களையும் மண்ணையும் கொண்டு, உள்ளாற்றின் குறுக்கே 1,080 அடி நீளமும், 40 முதல் 60 அடி அகலமும், 15 முதல் 18 அடி ஆழமும் உள்ள பாம்புபோல் வளைந்த அணையைக் கட்டி, உள்ளாறு வழியாகக்கொள்ளிடத்தில் வீணுகச் சென்ற வெள்ளத்தைக் காவிரியில் திருப்பி விட்டதாக திரு எப். ஆர். கெமிங்வே, ஐ.சி.எஸ், (F. R. Hemingway, I.C.S.) அவர்கள் சென்னை மாநில தஞ்சாவூர் மாவட்ட கெசட்டியரின் பகுதி நான்கில், பக்கம் 104-இல் குறிப்பிட்டுள்ளார்.

''நான் காவிரியின் இரு மருங்கும் கரையெடுத்ததற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?''

''மாடர்ன் ரிவியூ (Modern Review) என்னும் 1955-ஆம் ஆண்டின் புத்தகத்தில், 309—312-ஆம் பக்கங்களில் தெலுங்கு—சோழமன்னர்களின் தாமிரச் சாசனத்தில் கண்டபடி வெள்ளத்தைக் கட்டுப் படுத்துவதற் காகவும், புதிய கால்வாய்களைக் கட்டுவதற்காகவும் காவிரியின் இருமருங்கும் தாங்கள் பெருங்கரையெடுத்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

''ஈழத்தை வென்று, கொண்டு வந்த கைதிகளைக் கொண்டு என்ன செய்தேன் தெரியுமா?''

''தெரியுமே!, ஈழத்திலிருந்து கொண்டு வந்த கைதிகளைக் கொண்டு காவிரியின் கரையைப் பலப் படுத்தியுள்ளீர்கள். அதற்குக் கைம்மாருக ஈழத்திற்கு அரிசியும் அனுப்பி வைத்தீர்கள்! இச் செய்தி பழந்தமிழ் இலக்கியங்கள் மூலமாக தெரிய வருகிறது. அத்தோடு திரு கே.வி. சுப்பிரமணியம் என்பார் எழுதியுள்ள ஆராய்ச்சி நூலிலும் (T.A.S. III) பக்கம் 154—155-இல் காணக் கிடைக்கிறது.''



"இவ்வாறு பலவகையிலும் நீர்வளம் பெருக்கி, நில வளத்தைகசெழிக்கச்செய்ததால், என் காலத்தில் "ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்தது" எனப் 'பொருநர் ஆற்றுப்படை' என்ற இலக்கியம் கூறுகிறது. இந்நிலை ஏற்பட்ட பின்புதான், 'சோழவளநாடு சோறுடைத்து' என்று பெயர் பெற்றது. தமிழின் அறிவும், ஆற்றலும் கண்டு பிற நாடு வியந்தது! தமிழனின் நாகரிகமும், வாணிபமும், வளர்ந்து பிற நாடுகளுக்கும் பரவியது! அதன் பின்புதான் என் மனத்தில் நிலையான நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது!

"உங்கள் காலத்தில் சோழ வளநாடு செழித்திருந்ததுபோலத் தஞ்சை மாவட்டத்தை இப்பொழுது செழிக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகவே காலத்திற்கேற்ற வகையில் காவிரியைச் சீரமைக்க இன்றைய அரசு முயன்றுள்ளது."

"கரிகாற் சோழன் காலத்திற்குப் பிறகு கலைஞரின் ஆட்சியில்தான் காவிரி சீரமைக்கப் படுகிறது என்பதைக் கேட்டு நான் மனமகிழ்கின்றேன்! கலைஞரின் முயற்சி வெல்லும்! அதனால் தமிழ்நாடு தரணி போற்ற வாழும், என்பது திண்ணம்" என்று கூறிக்கொண்டே அவர் கடலில் இறங்கினார்.

"ஐயா, கடலில் இறங்குகின்றீர்களே! ஆபத்தாயிற்றே" என்றேன்.

"கடல் அலைகளையும், காற்றையும், கலங்களையும் அடக்கி ஆண்ட கரிகாலன் நான்தான். கடலுக்கடியில் மறைந்துள்ள காவிரிப்பூம்பட்டிணத்தில் நான் வாழ்கின்றேன். வருகின்றேன் தம்பி வணக்கம்!" என்றார்.

"வணக்கம்" என்று கூறி நானும் கை குவித்து வணங்கினேன்.

"வாழ்க தமிழ், வாழ்க தமிழ் நாடு" என்று கூறிவிட்டு அவர் கடல் அலைகளுக்கிடையே கம்பீரமாகப் புகுந்து மறைந்து விட்டார்.

கண்களைத் துடைத்துக் கொண்டு கடற்கரை மணலிலிருந்து எழுந்தேன். இரவு மணி 8 ஆகியது. என் இருப்பிடத்திற்குத் திரும்பினேன். என் கற்பனை ஓர் கட்டுரை உருவாக உதவியது. அதன் முடிவுதான் இக்கட்டுரை. நான் கரிகாலனைக் கண்டு பேசியதை நீங்கள் நம்ப மறுக்கலாம். ஆனால் கட்டுரையில் கூறப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மையே"

—ஆர். எம்

---



# தொழிற்சாலை துவங்கச் செப்பனிட்ட நிலங்கள்!

தமிழ் நாட்டில், பல இடங்களில் தொழிற்பேட்டைகளை நிறுவித் தொழில்கள் மலரத் தமிழ்நாடு அரசு உதவி செய்கிறது. அது போலவே, தமிழ்நாட்டின் தொழிற் பகுதிகளைச் சுற்றியுள்ள இடங்களைக் குறைந்த செலவில் கையகப்படுத்தி, சாலைவசதி, மின்வசதி, நீர்வசதி, கழிவுநீர் அகற்று வசதி, பொருள்களை அனுப்பி வைக்க இருப்புப்பாதை வசதி முதலியவற்றுடன் அவற்றை மேம்படுத்திப் பெரிய நடுத்தர, சிறு தொழிலதிபர்களுக்கு வழங்குவதிலும் தமிழ்நாடு அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. தொழிலதிபர்கள் எளிதில் அங்குத் தொழிற்சாலைகளை அமைத்து உற்பத்தித் தொடங்கப் பெரிதும் இதனால் வசதி ஏற்படும்.

செப்பனிட்ட நிலங்களின் விலையைச் செலுத்துவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்தும் நோக்கத்துடனும், தொழில் அதிபர்களை அதிகமாக ஈர்க்கும் கருத்துடனும், 1969 நவம்பரில் தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிட்டது.

1. அம்பத்தூரில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த மட்டில், ஏக்கர் ஒன்றுக்கான விலை 30,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2. கிண்டியில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்த வரையில், அந்த நிலத்திற்கான விலையை ஆறு தவணைகளில் செலுத்தலாம்.

3. தலைநகருக்குத் தொலை தூரத்தில் இருக்கின்ற மதுரை, திருச்சி, மேட்டூர் ஆகிய பகுதிகளில் உள்ள செப்பனிட்ட நிலங்களைப் பொறுத்தவரையில், விலையை ஆறு தவணைகளில் வசூலிக்கலாம் என்று அரசு இசைவளித்தது.

தலை நகருக்குத் தொலை தூரத்தில் உள்ள இடங்களைப் பொறுத்தவரையில், 95 ஆண்டுக்கால நீண்டகால அளவுக்குக் குத்தகை அடிப்படையில், தொழில் அதிபர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்படலாமென்கிற வகையில் புதிய தூண்டுகோல் இப்போது அளிக்கப்படுகிறது. செப்பனிட்ட நிலங்களின் செலவில் 6 சதவீதம்தான் ஆண்டுக் குத்தகைத் தொகையாகிறது. எனினும், குத்தகைதாரர் குத்தகைக்கால அளவில் முதல் பத்தாண்டுகளுக்குள்ளாக, அந்த இடத்தை ஒரேயடியாக வாங்கிக் கொள்வது அவருடைய விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

தமிழ்நாடு அரசு அளித்துவரும் மேற்கண்ட சலுகைகளைப் பயன்படுத்திப் புதிய தொழிற்சாலைகளைத் துவங்க முன்வருமாறு தொழிலதிபர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சங்கிலித் தேவன்!

பெயரிலே இருக்கும் கம்பீரம் அவனது தோற்றத்திலும் இருந்தது. அவன் மகன் கந்தனுக்கு இருக்கின்ற இளமை மிடுக்கும் துடுக்கும் வயதான சங்கிலித் தேவனிடமும் இருந்ததில் வியப்பில்லை!

குலவித்தை கல்லாமல் பாகம்படும் என்பார்களே, அது பொய்க்கவில்லை. பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த பழக்கம் சங்கிலித்தேவனுக்கும், அவன் மகனுக்கும் இருந்ததில் என்ன வியப்பு இருக்க முடியும்?

''பயங்கரக் கழுகின் தங்க இறகைக் கொண்டு வந்தால் தான் புலிவேட்டையில் கலந்து கொள்ள முடியுமாம். தந்தை சொல்கிறார் இப்படி! நான் கை தேர்ந்த வீரன் இல்லையாம். வீரர்களின் தலைவர் மாடசாமி குத்திக் காட்டுகிறார்! இப்போது நான் காட்டுகிறேன் என் கைவரிசையை!'' எண்ணச் சுழலுடன் காட்டுப் பாதையைக் கடந்து கொண்டிருந்தான் கந்தன்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு மலை. விண்ணைத் தொடும் அளவுக்கு அது உயர்ந்திருந்தது. அதன் அடிவாரத்தில் கற்பாறைகள் சரிந்தும், விழுந்தும், குவிந்தும் கிடந்தன. சிறுசிறு முட்புதர்களும், புற்களும், பச்சைப் பசேலென அடர்ந்து காணப்பட்டன.

பயங்கரக் கழுகு !

அந்தச் சமயத்தில் அதை நினைக்கும் போதே அவனுக்கு— அந்த வீர நெஞ்சினனுக்குச் சிறிது பயங்கரம் தட்டியது என்னவோ உண்மைதான்.

மலையின் அடிவாரத்தில் நின்று கொண்டு வானத்தினை அண்ணாந்து பார்த்தான் அவன். வானமும் மலையும் ஒட்டிக் கொண்டதோ என்று எண்ணும் அளவுக்கு உயர்ந்திருந்தது. நாலு பக்கமும் அவனது கண்கள் சுழன்றன.

எங்கும் ஒரே அமைதி!

இப்போது மலையின் ஒரு பகுதியில் நின்று கொண்டு பெருமூச்சு வாங்கக் கழுகு இருக்கும் இடத்தைத் தேடினான்.

அதோ! அந்தத் தங்க இறக் கழுகேதான்!

அவன் எதற்காக வந்தானோ அந்தக் காரியம் நிறைவேறப் போகிறதா ?

அகலமான பரந்த சிறகு; கரிய கூரிய வளைந்த மூக்கு; நாலா பக்கமும் பார்வையைச் சுழல விடும் பயங்கரக் கண்கள்; பருத்த உடலில் கூர்மையான நீண்ட விரல்கள். உண்மையில் இது பயங்கரக் கழுகு தான்.

பயங்கரக் கழுகு, தன் பரந்த சிறகைக் குறுக்கிக் கொண்டு கூனிக் கிடக்கிறது. சிறகின் ஒரு பகுதியில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ஐயோ பாவம்! நடக்கவும் முடியாமல் தத்தித் தடுமாறுகிறதே !

வளைந்த வில்லிலிருந்து புறப்படவேண்டிய அம்பை எடுத்து உறைக்குள் போட்டான் கந்தன். அதற்குள்ளாகவா அவன் மனத்தில் 'கருணை' உட்புகுந்து கொண்டது? கந்தனும் மனிதன்தானே ?

'பயங்கரக் கழுகு, பயங்கரக் கழுகு' என்று இதுவரை பயந்து கொண்டிருந்த கந்தனுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டதேன் ?




ஏற்படாதா என்ன ? தாயைக் காணாத குஞ்சுகள் கூட்டிலே பசியால் துடிதுடிக்க, குஞ்சுகளைக் காணாத தாய் அடிபட்டு அடங்கிக் கிடக்க, இத்தருணத்தில் அதன் கொட்டத்தை அடக்க வேண்டும் என்றுதிட்டம் போட்டிருப்பவன் உண்மையில் மனிதன்தானா ?

கந்தன் இப்படி எண்ணினானோ இல்லையோ 'தாய்க் கழுகை—பயங்கரக் கழுகு என்று பட்டம் சூட்டிக் கொண்ட கழுகை நோக்கிச் சென்றான்.

ஆனால், எட்ட இருந்தபோது சும்மா கிடந்த கழுகு, கிட்ட வந்தால் பயங்கரமாக அலறிக் கொண்டு தன் கூரிய நகங்களால் உடலைக் கிழிக்க வருமோ ?

கந்தன் தாமதிக்க வில்லை; வில்லை வளைத்தான். வில்லிலிருந்த அம்பு புயலெனப் பாய்ந்தது. இரத்தம் சொட்டச் சொட்டக் கீழே விழுந்து இறந்தது—ஒரு வெள்ளை முயல் !

கந்தன் பாறைவிட்டுப் பாறை தாவித் தாவிக் கீழே வந்தான். முயலைத் தூக்கிக் கொண்டு கழுகு கிடந்த பக்கத்தை நெருங்கினான்.

பயங்கரக் கழுகு கண்களைச் சுழலவிட்டுக் கந்தனைப் பார்த்தது. கந்தன் தைரியமாக அதனை நெருங்கிக் கொண்டிருந்தான். கழுகு தன் அகலச் சிறகை மெல்ல விரிக்க முயன்றது. ஆனால், அதனால் முடியவில்லையோ என்னவோ, மீண்டும் சிறகைக் குறுக்கிக் கொண்டது. அதனுடைய கண்களில் வழிந்த நீர், அதற்குப் பொறுக்க முடியாத வலி என்பதை நிரூபித்துக் காட்டியது. தனக்கு அருகில் கூட்டிலிருந்த குஞ்சுகளை ஓரக் கண்ணால் அடிக்கடி பார்த்தது.

கந்தன் இறந்த முயலைத் தூக்கிக் கொண்டு கழுகுக் குஞ்சுகள் இருக்கும் கூண்டை நெருங்கிக் கொண்டிருந்தான்.

கூண்டுக்கு அருகே அடிபட்டுக் கிடக்கும் தாய்க்கழுகு, தன் குஞ்சுகளை அடைய எத்தனித்துக் கொண்டிருந்ததைக் கந்தன் கவனித்தான். கழுகுக் குஞ்சுகள் பசியால் கத்திக் கொண்டிருந்தன. கந்தன் தான் கொண்டு வந்திருந்த முயலின் தோலை உரித்து, அதனுடைய கறித்துண்டுகளைக் குஞ்சுகளுக்கு ஊட்டினான்.

இதைப் புரிந்து கொள்ளாத தாய்க் கழுகு, கந்தனால் தன் குஞ்சுகளுக்கு ஏதோ ஆபத்து என்று தவறாகக் கருதிக் கந்தன்

மேல் பாய முயற்சித்தது. ஆனால், கந்தனின் கழுகுக் கண்கள் அந்தப் பயங்கரக் கழுகின் மீது அடிக்கடி படாமலில்லை.

குஞ்சுகளின் பசியை ஆற்றிய கந்தன் தாய்க் கழுகை நெருங்கி வந்தான். பெருத்த உருவமான அந்தப் பயங்கரக் கழுகை நெருங்கக் கந்தனுக்குச் சிறிது அச்சமாகவே இருந்தது. கழுகுக் குஞ்சுகளுக்குப் போட்ட மாமிசத் துண்டுகளில் மீதித் துண்டுகளை எடுத்துக் கொண்டு பயங்கரக் கழுகின் முன்னால் வந்து நின்றான்.

பார்க்கவே மெய் சிலிர்க்கும் அந்தக் கழுகு, தன் கண்ணாடிக் கண்களால் கந்தனைப் பார்த்தது. கந்தன் மாமிசத் துண்டுகளை அதன் முன்னால், சற்றுத் தூர நின்றே போட்டான். மிகுந்த பசியால் துவண்டு கிடந்த அந்தக் கழுகு மிக்க ஆவலுடன் மாமிசத் துண்டுகளைத் தின்றது. கந்தனை நன்றிப் பெருக்குடன் பார்த்துச் சிறிது தூரம் தத்தித் தத்தி வந்தது.

உடனே, கந்தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு 'பொல்லாத கழுகு' என்று ஊராரிடம் பெயர் வாங்கிவிட்ட அந்தக் கழுகைத் தொட்டுத் தடவிக்கொடுத்தான். தங்க நிறமான, பார்க்க அழகான அந்தச் சிறகில் தைத்திருந்த கூரிய அம்பை மெல்ல எடுத்துக் காயத்துக்குப் பச்சிலைகளைக் கசக்கி வைத்துக் கட்டினான்.

பயங்கரக் கழுகு அவனை ஒன்றுமே செய்யவில்லை. அதனால் கந்தன் அதனிடம் மிக்க அன்பு காட்டினான்.

கழுகு மலையில், அந்தப் பயங்கரமான காட்டில் கந்தன் சில நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள்—

வெகு தூரம் அலைந்தும் வேட்டை ஏதும் இன்றி வெறுங்கையுடன் திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்போது—

பயங்கர உறுமலுடன் ஒரு பெரிய சிறுத்தை கழுகுக் கூண்டுக்கு மேலே நின்று கொண்டிருந்தது. அது கூண்டுப் பக்கமாக இறங்கி வருவதற்கு இப்படியும் அப்படியுமாகத் திரிந்து கொண்டிருந்தது.




வெறுங்கையுடன் வந்த வெறுப்பு ஒரு பக்கம்; அன்பாய்க் கவனித்து வரும் கழுகுக் கூண்டை அழிக்கப்பார்க்கும் சிறுத்தையின் மீது ஏற்பட்ட ஆத்திரம் ஒரு பக்கம். உடனே வலிமை மிக்க வில்லினை வளைத்து அம்புகளைச் சரமாரியாகப் பல கோணங்களில் தொடுத்தான். அவ்வளவுதான்; சிறுத்தை பெருத்த உறுமல் சத்தத்துடன் கீழே உள்ள பாறைகளில் மோதித் 'தொபார்' எனக் கீழே விழுந்தது.

'ஆகாரத்துக்கு இனிப் பஞ்சமில்லை. ஆடைக்கும் தொல்லையில்லை' என்று சொல்லிக் கொண்டே, மிக்கச் சிரமத்துடன் சிறுத்தைப் புலியின் தோலை உரித்துக் காய வைத்தான்.

இப்படி நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் காலை அவன் கண் விழித்து எழுந்த போது தாய்க் கழுகைக் காணாமல் திகைத்தான். பிறகு அவன் கழுகுக் குஞ்சுகளோடு விளையாடிக் கொண்டிருந்த போது அந்தப் பயங்கரக் கழுகு தன் வலிமை மிக்கக் கால்களில் ஒரு காட்டுப் பன்றிக் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தது. கந்தன் மிகவும் ஆச்சரியத்துடன் அதைப் பார்த்தான். கழுகு அந்தக் 'கொழு கொழு' குட்டியை அவன் காலடியில் போட்டது.

பறக்கவும், இரை தேடவும் வலிமை பெற்றுவிட்ட கழுகு தன் நன்றியைக் காட்டுகிறது என்பதைப் புரிந்துகொண்டான் கந்தன். இனிமேல் அவனுக்கு அங்கு வேலை இல்லை. அக் கழுகுக் குடும்பத்துக்குத் தன் உதவி தேவையில்லை என்று அவன் அறிந்ததும் தன்னிருப்பிடத்திற்குத் திரும்ப முடிவு செய்தான்.

ஆனால்—

ஆனால் என்ன? அவன் வந்த காரியத்தை முடிக்க வேண்டுமே!

கந்தன் பலத்த சிந்தனையில் இருந்தான். கழுகு அப்போது தான் எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டுக் கூண்டுக்கு வந்தது. முதலில் குஞ்சுகளுக்குத் தான் கொண்டுவந்த உணவை ஊட்டிவிட்டு, மெல்லச் சிறகடித்துக் கந்தன் முன்னால் வந்தது. கந்தன் அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தான். அப்படி அதைத் தடவிக் கொடுக்கும்போது கந்தன் கண்களில் கண்ணீர் வருகின்றதே அது ஏன்? இத்தனை நாள் பழகி விட்டு இன்று பிரியப் போகிறோமே என்ற பிரிவாற்றாமையா? கழுகும் அடிக்கடி அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, அவனிடம் நெருங்கி நெருங்கி வந்தது.

"உன் அன்புக்கடையாளமாக என் வீரத்தன்மையை வேடுவத்தலைவருக்கு எடுத்துக் காட்ட இந்தச் சிறகை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்ட கந்தன் தங்க நிறமான அந்த அழகிய சிறகுக் கற்றையிலிருந்து ஓர் இறகைப் பிடுங்கித் தன் அம்பு உறைக்குள் போட்டுக் கொண்டான்.

கழுகு தன் குஞ்சுகளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தது. இதுதான் சமயம் என்றிருந்த கந்தன் மெல்ல, கழுகுக் கண்களுக்குப் படாமல் அவ்விடத்தை விட்டு நழுவினான். ஆனால், அவன் கண்கள் அடிக்கடி கழுகுக் கூண்டை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டன.

கந்தன் நடந்து கொண்டேயிருந்தான்.

எங்கும் இருள் அரக்கன் வாசம் செய்து கொண்டிருந்தான். அந்தக் குக்கிராமமே பூரண அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. அந்தக் கிராமத்தின் ஒரு பகுதியில் ஒரு பெரிய

தீப்பந்தம் எரிந்து கொண்டிருந்தது. அதற்குக் கீழே வேடுவர்கள் பலரும் கும்பலாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மத்தியில் மாடசாமி முறுக்கிய மீசையுடன் உட்கார்ந்திருந்தார்.

பொழுது விடிந்தால் புலி வேட்டை!

மெல்லத் தள்ளாடி நடந்து கொண்டே தன் குடிசையை அடைந்தான். குடிசையின் சிறிய சன்னலினுள் பார்த்தான். மங்கலாக விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சங்கிலித் தேவன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

இருமுறை கதவைத் தட்டிவிட்டு, அப்படியே உட்கார்ந்துவிட்டான். சிறிது நேரங்கழித்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார் சங்கிலித் தேவன்.

'' யார் ? ஓ, கந்தனா ? இந்த நள்ளிரவிலா வந்தாய்? '' அவனை அப்படியே அணைத்துக் கொண்டார்.

'' தங்க நிற இறகைக் கொண்டு வந்து விட்டாயா ? நாளை புலி வேட்டை !'' என்றார் சங்கிலித்தேவன்.

'' கொண்டு வந்து விட்டேன், பயங்கரக் கழுகின் தங்க நிற இறகை '' என்று கந்தன் அம்பு உறையிலிருந்த கழுகின் இறகைத் தந்தையிடம் கொடுத்தான்.

அளவற்ற மகிழ்ச்சியுடன் கழுகின் நீண்ட இறகை வாங்கித் தன் மகனைப் பெருமிதத்துடன் பார்த்தார். கந்தன் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு நடந்த கதையை விளக்கமாகச் சொல்லிவிட்டு, '' அப்பா ஒரு சந்தேகம், பயங்கரக் கழுகின் இறகைக் கொண்டு வருவது எளிதான செயலல்ல; உண்மையில் பயங்கரமாகப் போரிட்டால்தான் அதன் இறகைக் கைப்பற்ற முடியும். ஆனால்...... '' என்று இழுத்தான் கந்தன்.

'' ஆனால், என்ன கந்தா ? தயக்கமில்லாமல் சொல் ! '' சங்கிலித் தேவன் அவனுக்குத் தைரியம் சொன்னார்.

''நான் அந்தப் பயங்கரக் கழுகினிடம் அன்பாகப் பழகினேன். அப்படிப் பழகும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தக் கழுகும் என்னை ஒன்றும் செய்யாமல் அன்பாகப் பழகியது. அப்படி நான் அன்பாகப் பழகிய கழுகின் சிறகைத்தான் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். பயங்கரக் கழுகுடன் பயங்கரமாகப் போரிட்டு அதன் இறகைக் கொண்டு வருவதுதானே வீரத்திற்கு அழகு ? ஆனால், நான் அப்படிச் செய்யவில்லையே ? ஆகவே, தான் இந்தத் தேர்வில் எனக்குச் சந்தேகம் வந்து விட்டது !'' என்றான் மூச்சு வாங்க.

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த சங்கிலித்தேவன், ''சரி, நாளை மாடசாமியைக் கலந்துவிட்டு இதைப்பற்றிச் சொல்கிறேன். நேரமாகி விட்டது. நீ போய்ப் படுத்துக் கொள் '' என்றார்.

மறு நாள் காலை.

புலிவேட்டைக்குப் போவதற்குச் சில மணி நேரங்களே இருந்தன.

சங்கிலித்தேவனும், மாடசாமியும் திண்ணையில் அமர்ந்திருந்தனர். வேட்டைக்குப் போகும் வேடுவர்கள் கூட்டமாக நின்றிருந்தார்கள். அவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ, ஏது செய்யப் போகிறார்களோ என்ற அச்சம் கந்தனை உலுக்கிக் கொண்டிருந்தது.

'பகைவனை நேசி' என்ற அமுத வாக்கை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா ? கொடிய பகைவன்தான் என்றாலும், அவன் துன்பத்திலே கருணை கொண்டு உதவுவதுதான் உண்மையான வீரமாகும். மேலும், அக்கருணையால் கொடிய பகைவனையும் நட்பாக்கிக் கொள்வதோ அதனினும் சிறந்த வீரமாகும். கந்தனின் கருணையே கருணை ! கந்தன் ஒரு வீரனுக்குரிய குணநலன்களைப் பெற்று விட்டான். இனிப்புலிவேட்டைக்குப் புறப்படக் கந்தனுக்கு எந்த விதத் தடையும் இல்லை. '' என்று மாடசாமி சொல்லும் போது கந்தனுக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை !



# முயற்சி திருவினையாக்கும்

பன்னிரண்டு
ஆண்டுகளில் வருவாய்
இரட்டிப்பாக
தமிழக மாநிலத் திட்டக்
குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய
அமைப்பை
உருவாக்கும்
அரசின்
பணிகள்
செயல்திட்டங்கள்.

இப்படி
எந்த
நோக்கிலும்
நமது
நல்வாழ்வுக்காக
புதிய புதிய
திட்டங்கள்

இன்னும்
ஐந்தாண்டுகளில்
தமிழ்நாட்டில்
பெருந்துவழித்
தடங்கள்
அனைத்தும்
நாட்டுடைமை.

இவைகளால் புதுவாழ்வு
மலர நாம் ஆற்றவேண்டிய
கைம்மாறுதான்

## அளவான குடும்பம்!

பெருகிடும் மக்கள்தொகையே இன்றையப் பெரும் பிரச்சினை!

## குடும்ப நலத்திட்டம்

- நமக்கும் நல்லது
- நாட்டுக்கும் நல்லது

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்

குடும்ப நலத்துறை தமிழ்நாடு




## 42. ‘பண்’ எனத் தொடங்கிப் ‘பாட்டு’ என முடித்தல்

பண்பாடு மென்காதல் பார்போற்றும் ஒள்வீரம்
கண்டாங்கு யாம்தேறக் கைவளையாய் !—உண்டென்க
எண்டிசையும் ஏற்றமிகும் எங்கள் கருவூலம்
பண்டைத் தமிழ்ப்புறப் பாட்டு.

—ஆர். பிரபா, திருவேற்காடு.

பண்ணிருக்கும் வாய்திறந்து பாடுதற்குப் பால்மணக்கும்
புண்ணிருக்கும் சிந்தைக்குப் பொன்மருந்தாய்க்—கண்ணிருக்கும்
சீரழகுச் செந்தமிழில் சேர்ந்திருக்கும் நம்கவிஞர்
பாரதியின் தேசபக்திப் பாட்டு.

—ச. கருணாநிதி, மேலைச்சிவபுரி.

பண்-பாட்டுப் போட்டிப் பரிசதனை நாடாதிவ்
வெண்பாவைத் தீட்டி வெளியிட்டேன்—பெண்பாலோர்
சேர்க்காமல் ஒப்பனையைச் செய்கின்ற நாட்டியத்தைப்
பார்ப்பதுபோல் தோற்றுமிப் பாட்டு.

—க. இராதாகிருட்டிணன், காவேரிப்பாக்கம்.

பண்ணை விளைக்கும் பயன்பொருள்கள் அத்தனையும்
திண்ணை இருந்தே திளைக்கின்றீர்—மண்ணுழைப்பின்
தேட்டம் கவர்வதிலே தேர்ந்தோரே ! என்றுணர்வீர்
பாட்டாளி பரடுகின்ற பாட்டு ?

—த. தமிழரசி, குட்டப்பட்டி.

பண்பாட்டின் காவலர்கள் பைந்தமிழ் நன்னாட்டைக்
கண்போலக் காக்கின்றார் ; காலமெல்லாம்—துன்புற்றோர்
வீடுநிலம் பெற்றுவிட்டார் ; வேதனைகள் அற்றுவிட்டார்
பாடுகின்றார் ஆனந்தப் பாட்டு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

பண்டு தமிழரசர் பாப்புனையும் பாவலரைக்
கண்டு பரிசளித்துக் காத்ததெல்லாம்—கண்டீர் !
அரிதென்று செய்தேன் ; அறைவீர் அரசின்
பரிசும் பெறுமோ என் பாட்டு ?

—மு. சேதுபதி, மேலச்சிறுபோது.

பண்படுத்தி நல்ல பசுந்தாள் உரமிட்டு
மண்ணை வளமாக்கி மாவிளைச்சல்—உண்டாக்கப்
பாடுபடும் பாட்டாளிக் கூட்டத்தைப் போற்றியே
பாடுவோம் சேர்ந்தொரு பாட்டு.

—வை. இரத்தினசாமி, தேத்தாக் குடி.

பண்ணும் பரதமுமே பாடிடுவார் ஆடிடுவார்
எண்ணில் அவற்றுக் கெதிருண்டு—கண்ணாடிக்
காட்டிக் கருத்தழிக்கக் கற்றவளே ! பாரிலெதிர்ப்
பாட்டில்லாப் பாட்டேற்றப் பாட்டு !

—இரெ. மல்லபிள்ளை, மேட்டுப்பாளையம்.

பண்டைப் பொழுதினிலே பண்பாளர் நாவினிலே
உண்டாகி வந்த உயிரான—வண்டமிழே !
நெஞ்சத்தில் என்றும் நீயிருந்தால் இவ்வுலகில்
பஞ்சமா என்றனுக்குப் பாட்டு ?

—அ. அறிவுநம்பி, காரைக்குடி.

---

**பரிசுபெற்ற வெண்பா எழுதியவர்:—**

**பிரபா,**
**மே/பா P.R.S.**
**S. K. D. J. உயர் பள்ளி**
**திருவேற்காடு, சென்னை-56.**

பண்ணோர்க்கும் வண்டாடும் பன்வண்ணத் தேன்மலர்கள்,
கண்ணாடிப் பூமேனிக் கைவளையல்,—கண்ணீரை
வார்த்தெழுதும் துன்பூறும் வாழ்க்கைநிலை, என்றிவற்றைப்
பார்த்தாலே ஊறுதடா பாட்டு.

—கு. ஜெயபிரகாஷ் நாராயணன், திருமங்கலம்.

பண்ணிசைத்துப் பாடப் பகுத்தறிவுத் தேன்சிதறும்
எண்ணந் தமிழ்காக்க ஏகிடுமே—ஒண்கருத்துப்
பூவேய்ந்(து) அணிசெய் புரட்சி மணங்கமழும்
பாவேந்தன் சொற்சுவைசேர் பாட்டு.

—தா. பகவதிஅப்பன், யாதவன்புதூர்.

பண்ணமுதம் காதினிலே பாய்ந்தினிக்க நாற்றுநடும்
வண்ணமுடன் பாடுகின்றாள் மாங்குயிலாய் !—பெண்ணமுதம்
பாடுபடும் வேளையிலே பற்றும் அலுப்பகலப்
பாடுகின்ற பாட்டன்றோ பாட்டு !

—வெங்கடேசன், மருதங்குடி.

பண்ணும் பொருளுடன் பாரோர் விரும்பிடும்
வண்ணச் சிறப்பு வடிவுமிக்க—எண்ண
அலகுள சீர்நடை ஆரணி கொண்ட
பலநயம் பெற்றதே பாட்டு.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

பண்படுத்தி நீர்பாய்ச்சிப் பாழ்நிலத்தில் நல்விளைச்சல்
உண்டாகச் செய்த உழவரினப்—பெண்டிரெல்லாம்
ஆடிடுவர் தைத்திருநாள் ஆனந்தப் பொங்கலிட்டுப்
பாடிடுவர் பைந்தமிழிற் பாட்டு.

—இரா. சுப்பிரமணியன், பேராவூருணி.

பண்ணிற் பிறந்தவளைப் பாராளும் பைங்கிளியை,
வண்ணப் புலவோரின் வண்டமிழை,—மண்ணகத்தில்
வேலுண் விழியாளை வேண்டி மணப்பவர்க்குப்
பாலும் பழமுமென் பாட்டு.

—புலவர் சோ. பா., வேதாரண்யம்.

பண்ணிசைக்கும் தென்றலிசை பாடிவரும் புள்ளினங்கள்
வண்ணமலர்த் தேன்சொரிய வாயவிழும் !—தண்டினால்
ஓடையொலி 'கிண்கிணு' வென் றோங்குமே ஓர்கலைஞன்
பாடவே பைந்தமிழ்ப் பாட்டு!

—கே. டி. அரசு, கொளக்குடி.

பண்ணில்லாப் பாட்டால் பாரில் பயனுண்டோ ?
கண்ணில்லா வாழ்வில் களிப்புண்டோ ?—எண்ணற்றோர்
கண்ணொளி பெற்றுக் களிகொள்ளும் காட்சியைப்
பண்ணிசைக்க இன்னிசையாம் பாட்டு.

—சீ. சங்கரகோமதி, சம்புக்குட்டப்பட்டி.

பண்ணோ இனிமை ! பருகுவதோ தேன்துளிகள் !
வண்ணம் கறுப்பாம் ; வகைவகையாம்—வண்டிசைக்கும்
அந்திப் பொழுதில் அழகான மல்லிகைப்பூம்
பந்தரின்கீழ் நான்கேட்கும் பாட்டு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

பண்ணற்ற யாழானேன் ; பைங்கிளியே ! என்வாழ்வில்
புண்பட்டு வாடுகிறேன் ! போக்காயோ ?—கண்மணியாய்
என்னுள் இருந்தாளை ஏன்பிரித்தான் ? பாவியெனப்
பன்னாளாய்ப் பாடுகின்றேன் பாட்டு.

—புலவர் ஏ. மாணிக்கம், விசூர்.

பண்ணென்றால் தாலாட்டு ; பாசமெனில் அன்னைமனம்
பொன்னென்றால் இல்லாளின் பூமுகமே—என்றெண்ணி
நல்லறத்தை நாடுமெழில் நற்றமிழர் வாழ்வதனைப்
பல்சுவையாய்ச் சொல்லுவதே பாட்டு.

—ஏ. காந்தி, தேவத்தூர்.

பண்ணைமீன் மேதிஎன்று பாய முகில்மடியில்
தண்ணியதென் காற்றென்று தான்சுரக்க !—தெண்ணறுநீர்க்
காவிரிபாய் நாடா ! நீ கங்கைதரு நன்னீரால்
பாவைதமி ழைக்குளிப் பாட்டு.

—பேகன், மதுரை-1.

பண்ணும் இசையும் பரதமும் பைந்தமிழின்
கண்ணாய் விளங்கிடுதல் காணீரோ—எண்ணரிய
பாடுதற்கே ஈட்டுதமிழ்ப் பாவிருந்தும் ஏன்மயங்கிப்
பாடுகின்றீர் வேற்றுமொழிப் பாட்டு.

—தவ. சரோசா, கோவை-14.

பண்டைத் தமிழரின் பாங்கான வாழ்வியலை
விண்டுரைத்துச் சொல்லும் விளக்கமெல்லாம்—பெண்ணே!
அழகுபெறு சங்கத்தில் ஆன்றோர்கள் யாத்த
பழகு தமிழ்ப்பத்துப் பாட்டு.

—வை. வைரவன், சிறுகூடல்பட்டி.

பண்பின் உறைவிடமாய்ப் பாங்கின் நிறைகுடமாய்த்
தொண்டில் முதலிடமாய்த் தோன்றிடுவீர்—கண்ணியமாய்
நாட்டுக்கும் மக்கட்கும் நன்றுற்ற நீர்படும்
பாட்டுக்குப் பாடுவரே பாட்டு.

—கதி. சானகி, காரைக்குடி.

பண்டிங்கே மண்டிப் பரந்திருந்து பாழாக்கிக்
கொண்டிருந்த மூடக் கொடுமையெலாம்—விண்டுரைத்துக்
காட்டிப் பகுத்தறிவாம் கண்ணொளியை நல்கியதே
பாட்டிலுயர் பாவேந்தர் பாட்டு.

—மு. வள்ளியம்மை, காரைக்குடி.

ணைப் பசுந்தமிழாய்ப் பாலாய் நறுந்தேனாய்க்
ணைப் மணியாய்க் கனிச்சுவையாய்—எந்நாளும்
டில் வளர்பாட்டு நற்றாயர் தாலாட்டு
டில் தலையாய பாட்டு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

ணைச் செவிகளிலே பாயும்! குழந்தைகளைக்
ணயரச் செய்யும்! களிப்பூட்டும்—பெண்மைநலம்
ம் பொழுதிற் குலவிமகிழ் தாய்மார்கள்
வதே தாலாட்டுப் பாட்டு!

—நெல்லை. ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

ணிற்கே ஏற்ற பதங்கள் அமைத்துமே
ணிலே மக்களுக்கு மாண்புடனே—கண்ணொளிபோல்
மையைப் போதிக்கும் நேர்மையைக் கொண்டுள்ள
தையைக் காட்டுவதே பாட்டு.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

ணைய் மொழிபேசிப் பட்டுவிரல் கையசைத்து
ண்ணிலவாய் மண்ணில் விளையாடும்—கண்ணனை நான்
த்தள்ளிக் கொள்ளச் சிரிப்பான் ; அவனழகைப்
த்தவுடன் நெய்தேன்இப் பாட்டு.

—க. ஒப்பிலாள், திருச்சி-15.

ணின்றி யாழின்றிப் பாரில் ஏனைமயக்கக்
மணியாம் என்மழலை கைதட்ட—வண்ண
சிமிட்டி நெஞ்சில் விளையாடி இன்பப்
ம்போல் எனக்களித்தாள் பாட்டு.

—வங்கனூரான், வங்கனூர்.

ணை விளைவிருந்தும் பாட்டாளி ஓய்ச்சலின்றி
ணை அமுதாக மாற்றிடினும்—பொன்னைநிகர்
மணியின் மேனி நிறைந்திடினும் ஏனிந்தப்
வியாம் இல்லையெனும் பாட்டு?

—அமரன், அருப்புக்கோட்டை.

பாடு பல்வகைத்து, பல்வேறு நாடுகளில்,
, பாட்டும், பல்வகைத்தே பாரினிலே—பெண்வண்ணக்
பாடி யாடும் கவின்நாட்டி யம்பலவாம் ;
தமிழா! பாடிமகிழ், பாட்டு.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

ணின் இசைவடிவாய்ப், பார்வைப் பனிக்குளிராய்,
ணம் ஒருங்கிணைந்த ஏந்திழையே!—கண்ணுக்குள்
புகுந்தவளே! உன்னை நினைத்தேதான்
முடித்தேனிப் பாட்டு.

—ப. வே. இராமசாமி, மானாமதுரை.

பண்ணுக்கு மன்னவனும் பாரதி தாசனவன்
கண்ணொத்த நல்ல கருத்தாழச்—சொன்னயமும்
மண்ணில் குழவிபோல் மாத்தமிழில் கொஞ்சியதும்
பண்ணொழுகுந் தேன்தமிழ்ப் பாட்டு.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

பண்ணொலிக்கும் பைந்தமிழின் பாவலராம் நம்முதல்வர்
கண்ணொளியும் தந்துநமைக் காக்கின்றார்!—மண்ணோர்
சிரம்வணங்கிப் பராட்டும் சீர்தொண்டைப் பார்த்துப்
பரவசத்தால் பாடியதிப் பாட்டு.

—சண்முக தாயுமானவன், பொன்மலை.

பண்பில்லான் பெற்ற பணமும் பகிர்ந்துண்ண
நண்பில்லான் தானுண்ட நல்லுணவும்—பெண்பிள்ளை
கண்நோக்கம் கிட்டாதான் கைக்கிளையும் ஒக்குமே
பண்நோக்க மில்லாதான் பாட்டு.

—இரா. சு. முத்து, பாளையங்கோட்டை.

பண்நா! பனித்தமிழ்! பண்புடைமை மின்னிட்ட
அண்ணா! அறிஞர் அவர்புகழைக்—கண்ணாகக்
காப்பளித்துப் போற்றும் கலைஞர் கனிச்சுளைபோல்
பாப்படைத்தார் வெல்லுமவர் பாட்டு.

—இளங்கோ, விருதுநகர்-2.

பண்ணோசைக் காரன்! பருமீசைக் காரன்!
என்னாசைத் தீந்தமிழ் ஏந்தல்அவன்—தென்னிளசைப்
பாரதியின் தாசன்! பசுந்தமிழின் நேசனிப்
பாரதிரப் பாடியதே பாட்டு.

—சுந்தர. இளங்கோவன், அரசப்பிள்ளைபட்டி.

பண்ணுந் திறனும், பயனார்ந்த நற்பொருளும்,
எண்ணுங் கலையின் எழிற்சிறப்பும்—நண்ணிடவே
தேமதுரச் செந்தமிழால் செய்தளித்துப் பாவலரும்,
பாமரரும் கொள்வதுவே பாட்டு.

—நா. சிவராம முத்துக்குமாரவேல், தேனி.

பண்ணும் பிறக்கும் ; பரதமும் கொண்டிலங்கும்
எண்ணங் கவரும் எழிற்சிலையில்!—வண்ணத்தைச்
சேர்த்துமே தீட்டிய செல்விழி மங்கையின்
பார்வையும் பாடுமே பாட்டு.

—புலவர் எ. பார்த்தசாரதி, கரூர்.

பண்ணிற் பிழையாது பாட்டிற்காம் தாளத்தின்
எண்ணிற் சிதையா திழுக்காது—கண்போன்று
நாட்டுக் குயர்வுதரும் நற்கருத்துக் கொண்டதிருப்
பாட்டன்றோ யான்விரும்பும் பாட்டு.

—புலவர் சி. இராமசாமி, சேலம்-6.



## சைதியான்

### கால்நடைகளுக்கும், கோழி முதலிய பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளிலிருந்து முழுப் பாதுகாப்பு அளிப்பதற்கு

மிருகங்கள் புழு பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருப்பதன் விளைவு—இலாபமின்மை.

ஆனால் இப்பொழுது கால்நடைகளுக்கும், பண்ணைப் பறவைகளுக்கும் புழு பூச்சிகளற்ற ஆரோக்கியமான வாழ்வளிக்க சைதியான் இருக்கிறது.

மிகவும் அபாயக்குறைவான இந்த பூச்சிக் கொல்லி கெடுதலற்று கையாளக் கூடியது. உபயோகிக்கச் சிக்கனமானது

மிருகங்களின் மேலும் அவற்றைச் சுற்றியும் சைதியான் தூவுவதன் மூலம், அவைகளுக்கு ஈடுசெய்ய முடியாத கெடுதல் விளைவதைத் தடுக்கலாம்.

சைதியான் சயனமைட் தயாரிப்பு

## சைதியான்

### 90 வெவ்வேறு வகையான பயிர்களைத் தாக்கும் 100 வகை புழுபூச்சிகளைப் பயனுள்ள முறையில் கட்டுப்படுத்துகிறது

புழு பூச்சிகளால் உங்கள் தானியப் பயிர்கள் நாசமாகிவிடக்கூடும் உங்கள் இலாபமும் கூட

இப்பொழுது உங்கள் பயிர்களை புழு பூச்சிகளினின்று சக்திவாய்ந்த முறையில் பாதுகாக்க

சைதியான் உபயோகியுங்கள்.

அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான சைதியான் பட்டதும் பூச்சிகள் நசித்துவிடுகின்றன எனவே, இது பயிர்களுக்கு சொல்ல முடியாத சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கிறது

உபயோகிக்கக் கெடுதலற்ற, திறன் மிக்க, சிக்கனமான சைதியான் அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு உபயோகிக்கப்படலாம். இதனால் முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு ஒரு விதமான கெடுதலும் விளைவதில்லை.

சைதியான் சயனமைட் தயாரிப்பு.

## சைதியான்

### 5 வெவ்வேறு வகையான 50 காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கும் 75க்கு மேற்பட்ட புழு பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது

உங்கள் காய்கறி மற்றும் பழப் பயிர்களுக்கு புழு பூச்சிகளால் ஆபத்து விளையும்போது, சேதத்தைத் தவிர்க்க ஒரே ஒரு வழிதான் உள்ளது

அதுவே சைதியான்.

கையாளுவதற்கு அபாயக் குறைவான, சக்திமிக்க பூச்சிக் கொல்லியான சைதியான் பட்டதும் புழு பூச்சிகள் மடிந்துவிடுகின்றன சொல்ல முடியாத சேதம் தவிர்க்கப்படுகிறது.

பயிர்களின் மீது கெடுதலான விளைவுகள் எதுவுமின்றி, அறுவடைக்கு 1-3 நாட்களுக்கு முன்பு சைதியான் உபயோகிக்கலாம்

சைதியான் சயனமைட் தயாரிப்பு




# சைதியான்

பூச்சிகொல்லி

விவசாயப் பிரிவு,
சையனமைட் இந்தியா லிமிடெட்
த.பெட்டி எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

உலகெங்கும் விவசாயத்திற்குப் பணிபுரிகிறது

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| வழங்கியோர். | ரூ. | காசு. |
|---|---|---|
| சென்ற இதழ் வரை மொத்தத் தொகை | 25,93,671 | 55 |
| பதிவுத்துறைத் தலைவர் சென்னை, அவர்களது தனி உதவியாளர். | 231 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீவளூர், தஞ்சை மாவட்டம். | 50 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 200 | 00 |
| பால் உற்பத்தி, பண்ணை வளர்ச்சி ஆணையர், சென்னை. | 201 | 00 |
| இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்டரேஷன், சென்னை-1. | 268 | 00 |
| டன்லப் இந்தியா லிமிடெட், சென்னை-2. | 5,000 | 00 |
| திருமதி பத்மாவதி, முதல்வர் பெண்கள் அரசினர் கல்லூரி, கும்பகோணம். | 575 | 00 |
| திரு பாலசுந்தரம், மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 5,800 | 00 |
| மாவட்ட கூட்டுறவுக் கணக்குத் தணிக்கையாளர். சேலம்-1. | 100 | 00 |
| ஷை | 125 | 00 |
| ஷை | 750 | 00 |
| பால்உற்பத்தி பால் பண்ணை வளர்ச்சி ஆணையர், தனி உதவியாளர், சென்னை-5. | 126 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சை. | 100 | 00 |
| அண்ணா நகர் அரிமா சங்கம், சென்னை-29. | 100 | 00 |
| திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,14,321 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 300 | 00 |
| மாவட்டப் பதிவாளர், பாளையங் கோட்டை. | 20 | 80 |
| நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 20,001 | 00 |
| கந்தசாமிப் புலவர். பாளையங் கோட்டை. | 25 | 00 |
| நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர். | 9,887 | 50 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக்குத் தணிக்கை அலுவலர், சேலம். | 150 | 00 |
| நெல்லை மாவட்டத்தில் வரவு. | 10 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுக் கணக் குத் தணிக்கை அலுவலர். | 975 | 00 |
| கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,00,000 | 00 |
| வேலூர் ஜேசீஸ், 171/2, சுண்ணாம்புக்காரத் தெரு, வேலூர். | 825 | 00 |
| வாடகைக்கார்த் தொழிலாளர் சங்கம், அவிநாசி. | 10 | 00 |
| ஆண்டவர் இஞ்சினீயர் தொழிலாளர்கள். | 5 | 00 |
| திரு இராசமாணிக்கம், தி.மு.க., ஈரோடு. | 100 | 00 |
| முதல்வர் கோவை வந்தபோது குழந்தைக்குப் பெயரிடல் மூலமாகவும் பொதுமக்களிடமிருந்து திரட்டியது. | 19 | 00 |
| தமிழ்நாடு மின்கணக்காயர் சங்கம். | 51 | 00 |
| திரு எ. என். முத்து, செயலர், சவரத் தொழிலாளர் சங்கம், அவிநாசி. | 51 | 00 |
| தமிழ்நாடு, மின் கணக்காயர் சங்கம், திருப்பூர் கிளை. | 40 | 00 |
| தமிழ்நாடு மின்கழகக் கணக் காயர் சங்கம், அவிநாசிக் கிளை. | 65 | 00 |
| திரு விசுவநாத முதலியார் முடி திருத்துவோர் சங்கச்சார்பில். | 51 | 00 |
| கோவை நகரசபைக் குழு மின் சார பிரிவு தொழிலாளர் முன்னேற்ற சங்கம். | 101 | 00 |
| செல்வி வி.ஜே. பத்மினி, பி.ஏ., செயலர், சென் ஜான் ஆம்புலன்ஸ் சங்கம், வட ஆர்க்காடு மையம், வேலூர். | 101 | 00 |
| செல்வி டி. ஆர். பிரேமா, பிரேமா நாடக மன்றம், கோடம்பாக்கம், சென்னை-24. | 51 | 00 |
| மொத்தம் | 31,54,457 | 85 |

# பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.



5 A/152 (760)

உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து

பாதுகாக்க **மெடாஸிஸ்டாக்ஸ்**

கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை

**ஃபாலிடால்**

சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.

காய்ப் புழுக்-
களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து

**மெடாஸிட்காம்பி**

அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறை
களின் படி ..பாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ்,
மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.

பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளி-
னால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு
காணவும். பண விரயத்தை தவிர்க்க

BAYER

பாயரின் தரமான
பூச்சி மருந்துகள்



# கொய்தவை

### நாளுக்கொரு குறள்!

வானொலியில் 'குறள் அமுதம்' என்ற புதிய நிகழ்ச்சியை இனி நாம் கேட்டு மகிழலாம். ஐந்து நிமிட நேரம் நடக்கும் இந்த நிகழ்ச்சி, நாள்தோறும் உண்டு.

திருக்குறளில் இருந்து நாளுக்கொரு செய்யுள் படிக்கப்படும். அதற்கான விளக்கமும் கூறப்படும். தமிழ்ப்புலவர்கள், இந்த விளக்கத்தைச் சொல்வார்கள். நாள்தோறும் காலையில் 6-10 மணிக்குக் 'குறள் அமுதம்' ஒலிபரப்பாகும்.

சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி வானொலி நிலையங்களில் இந்நிகழ்ச்சியைக் கேட்கலாம். 'குறள் அமுதம்' நிகழ்ச்சி, நவம்பர்த் திங்கள் 5-ஆம் தேதி முதல் ஒலிபரப்பாகும்.

• • •

### பஸ் பயணிகளுக்கு

சென்னை நகர பல்லவா போக்குவரத்துக் கழக நகர பஸ்களிலும் புற நகர் பஸ்களிலும் மாதாந்தர 'சீசன் டிக்கெட்' கொடுக்கப்படுகிறது.

இந்த டிக்கெட்டை வாங்கியவர்கள், எந்தப் பஸ்ஸில் வேண்டுமானாலும் ஒரு நாளைக்கு, ஒரு தடவை குறிப்பிட்ட தூரத்திற்குப் போகலாம்; அதே தூரத்திற்குத் திரும்பி வரலாம்.

20 காசு டிக்கெட்டு உள்ள குறைந்த தூரம் முதல், 65 காசு டிக்கெட்டு உள்ள அதிக தூரம் வரை இந்த 'சீசன் டிக்கெட்'டுகள் கொடுக்கப்படும்.

20 காசு தூரத்திற்கு உரிய மாதாந்தர சீசன் டிக்கெட்டுக் கட்டணம் 8 ரூபாய்தான். ஒருவர் 20 காசு டிக்கெட்டுத் தூரத்திற்கு ஒரு நாளைக்குப் போக வரப் பயணம் செய்தால் நாளொன்றுக்கு 40 காசு ஆகும். அதாவது மாதம் 12 ரூபாய் ஆகும். இந்தச் சீசன் டிக்கெட்டு எடுப்பதன் மூலம் 4 ரூபாய் மிச்சமாகும்.

• • •

### நெசவாளர் துயர் நீங்கிட..!

கைத்தறி, விசைத்தறித் துறைகளைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள தறிகளின் எண்ணிக்கை, நெசவாளர்களுக்குத் தேவையான நூலின் அளவு, நூல் தரம், நிதி வசதி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு, இந்த அடையாள அட்டைகள் பயன்படும்.

இந்தத் தவல்களைச் சேகரித்தால்தான், நெசவாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு விரிவான திட்டம் தயாரிக்க முடியும். தமிழ்நாட்டில் ரூ. 8 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கி நிற்கின்றன. இதில், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் மட்டும் ரூ. 4 கோடி மதிப்புக்குத் துணிகள் தேங்கியுள்ளன. இத் தகவலைத் தொழிலமைச்சர் திரு செ. மாதவன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

• • •

### பட்டதாரிகள் பயன்பெற..

வேலை இல்லாமல் இருக்கும் பி.டி. பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை வேலை வாய்ப்புத் துறை தொடங்கி உள்ளது.

பி.டி. பட்டமும், அதற்கு மேற் படிப்பும் படித்து வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக இந்தப் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்படி அவர்களுக்கு 'பிரைவேட் டியூஷன்' (விரும்பும் மாணவர்களுக்குத் தனியாகக் கற்பிப்பது) கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

வேலை வாய்ப்புத் தேடித் தரும் அலுவலகங்களில் பதிவு செய்திருக்கும் பட்டதாரிகளுக்கு 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுக்கச் சம்மதமா என்று எழுதி கேட்கப்படும். அப்படியானால் காலை அல்லது மாலையில் எத்தனை மணி நேரம் ஒதுக்க முடியும்? சம்பளம் எவ்வளவு வேண்டும் என்பதைத் தெரிவிக்கும்படி அவர்களிடம் கேட்கப்படுகிறது.

அவர்களிடமிருந்து பதில் வந்ததும் 'பிரைவேட் டியூஷன்' வைத்துக்கொள்ள விரும்பும் மாணவர்களின் பெற்றோருக்கு இந்தப் பட்டதாரிகள் அடங்கிய பெயர்ப் பட்டியல் அனுப்பி வைக்கப்படும்.

முதலாவதாக இந்தத்திட்டம் சோதனை முறையாக நடத்திப் பார்க்கப்படும். இதன் பலன்கள் தெரிந்த பின், எல்லாப் பகுதிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவு படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி ஏற்கெனவே சென்னை நகரில் 700 பட்டதாரிகள் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

• • •

### மீன் வளம் பெருகிட..

இராமநாதபுர மாவட்டம் மண்டபத்தில் 'இரால்' மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. இதனை ரூ. 38 இலட்சம் செலவில் நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வெளிநாட்டுப் பணம் சம்பாதித்துத் தரும் பொருள்களில் 'இரால்' மீன் ஒன்று. அந்த 'மீன் சுரங்கம்' மண்டபம் கடற் பகுதியில் ஏராளமாக உள்ளது. இங்குப் பிடிக்கும் 'இரால்' மீன்கள் கொச்சி (கேரளா)க்கு அனுப்பப்பட்டுப் பதப்படுத்தப்படுகின்றன. பிறகு அங்கிருந்து அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கொச்சியில் மட்டும் இரால் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை உள்ளதால் கேரளம் இதன் மூலம் இலாபம் அடைகிறது. எனவே மண்டபத்தில் இரால் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைக்காக 2 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படும் வேலையும், தொழிற்சாலை அமைக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது.

# உங்கள் நிலம் வளம்பெற புதுவகை 'உரம்' வழங்குகிறது பாங்க் ஆஃப் பரோடா

## குடியானவ நண்பர்களுக்கு விவசாயக் கடனுதவி

பணம்...அதுவே உன்னதமான உரம்!
உங்கள் நிலம் செழித்து அமோக விளைச்சலை அள்ளித்தர, நல்ல விதைகள், நவீன பண்ணைக் கருவிகள், மேம்பாடு பெற்ற பாசன முறைகள் மற்றும் சிறந்த உரம் தேவை. அவற்றை வாங்குவதற்காகும் பணத்தை எளிதில் பெற முடியும். எப்படியா? பாங்க் ஆப் பரோடாவுக்கு வந்து, விவசாயக் கடனுதவி பற்றி விசாரியுங்கள். மிகவும் சல்லியான நிபந்தனையின் பேரில் நாங்கள் கடனுதவி வழங்குகிறோம். இன்றே வாருங்கள். எங்கள் விவசாயக் கடனுதவி, உங்கள் நிலம் கொழிக்க 'உரமாக'ப் பயன்படுவதைப் பாருங்கள்!

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

**பாங்க் ஆஃப் பரோடா**

இந்தியாவிலும் வெளிநாடுகளில் யு. கே. கிழக்கு ஆப்பிரிக்கா, மொரீசு, பிஜித் தீவுகள், மற்றும் கயானாவிலும் 625க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.




Shilpi-BOB-8A/72 Tam.



# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1











**கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்**

வெளிநாட்டார் போற்றும்
ஷயன் பொருள்
கலைக்கூடம்





20461
20462 20463
20464 · 20465

சுந்தர்

# மாவட்டங்களிலிருந்து....

தமிழக மாவட்டங்களில் எத்தனையோ நற்பணிகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சிப் பணிகள் முதலியன நடந்தவண்ணமுள்ளன. ஒரு மாவட்டத்தில் என்ன நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும், பொதுவாகப் பொதுமக்களும் தெரிந்துகொள்வது வளர்ச்சிப் பணிக்கு மேலும் வித்திடுமல்லவா? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

### வளர்ச்சிப் பணி வளர்கிறது

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அண்மையில் நடைபெற்றுள்ள வளர்ச்சிப் பணிகள் வருமாறு:—

தீவிர வேளாண்மைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு முதல் போகம் முடிந்த இடங்களில் ஐ. ஆர். 20, ஐ. ஆர். 8. காஞ்சி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்குக் கடனாகவும் ரொக்கமாகவும் யூரியா, அமோனியம் சல்பேட், டை அமோனியம் பாஸ்பேட் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

மேலும், சிறுசேமிப்பு மூலம் ரூ. 42,000 திரட்டப்பட்டுள்ளது. சமூக நல ஊழியர்கள் சார்பில் குடும்பநலத்திட்டம், தீண்டாமை ஒழிப்பு விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. இளைஞர் அணியினால் 24 முதியோர் கல்வி வகுப்புகளும் சிறப்பாக நடந்து வருகின்றன.

### அரிய ஆய்வுக்கூடம்

மூலப்பொருள்களையும், முற்றுப்பெற்ற பொருட்களையும் சோதனை செய்வது, உற்பத்திப் பொருள்களின் தரத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகும். இந்த வகையில் ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக உருவாக்குவதற்குச் சோதனை ஆய்வுக் கூடங்கள் மிகவும் அவசியமாகின்றன. ஆகவே, தமிழகத்தைத் தொழில்மயமாக்க உதவும் வகையில் தமிழக அரசு சோதனை ஆய்வுக் கூடங்களை நிறுவுவதற்கு முன்வந்துள்ளது.

'இரசாயன சோதனை பகுப்பு ஆய்வுக்கூடம்' என்னும் மத்திய ஆய்வுக்கூடம்,, சென்னை நகரில் அமைக்கப்பட்டு கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாகப் பல்வேறு வழிகளில் தொழிலதிபர்களுக்குச் செயலாற்றி வருகின்றது. ஆனால் சென்னையிலிருந்து தொலைவிலிருக்கும் மாவட்டங்களிலுள்ள தொழிலதிபர்களுக்குத் தங்களது ஆய்வு செய்யவேண்டிய மாதிரிகளை அனுப்புவதில் காலதாமதமும், பணவிரயமும் ஏற்படுகின்றது. எனவே, இதுபோன்ற சிரமங்களைத் தவிர்ப்பதற்காக இந்த மண்டல சோதனை ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

குமரி, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருச்சியில் உள்ள தொழில் அதிபர்களுக்குத் தொழில் நுணுக்க மற்றும் சோதனை வசதி அளிக்க மண்டல சோதனை ஆய்வுக் கூடத்தை மதுரையில் மாநில அரசு அமைத்துள்ளது. மதுரை மாநகரில் வடபகுதியில் உள்ள தொழிற்பேட்டையில் இந்த ஆய்வுக்கூடம் இருக்கிறது. இந்த ஆய்வுக்கூடம் மாநில அரசின் தொழில் வணிகத் துறையின் இரசாயனப் பிரிவின் கீழ் அமைந்துள்ளது.

தமிழக அரசு இவ்வாய்வுக் கூடத்தின் கட்டடம், கருவிகள் மற்றும் நூல்கள் முதலானவைகளுக்கு ரூபாய் 15 இலட்சம் வழங்கியுள்ளது. இதன் கட்டடம் ரூ. 5 இலட்சம் அளவில் கட்டப்பட்டுள்ளது. பல்வகையான இயந்திரங்கள் மற்றும் கருவிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 9 இலட்சம் ஆகும். ஒரு இலட்சம் ரூபாய் அளவில் இந்த ஆய்வுக் கூடத்திலுள்ள நூலகம் விரிவுபடுத்தப்பட இருக்கின்றது.

இந்த ஆய்வுக்கூடம் கனிகள், தாதுக்கள், உலோகங்கள், கலப்பு உலோகங்கள், எண்ணெய், கொழுப்புகள், சோப்புகள், உரங்கள், பூச்சி மருந்துகள், தொழில்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள், எரிபொருட்கள், வர்ணங்கள், வார்னிஷ்கள், உணவுப் பண்டங்கள், மின் கருவிகள், மற்றும் பிற வகைப் பொருட்கள் பற்றி பௌதிக முறையிலும் இரசாயன முறையிலும் ஆய்வுகள் நடத்த ஏற்றுக்கொள்ளப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அகதிகளைக் குடியமர்த்தும் திட்டத்தின்படி இதுவரை மொத்தம் 8,630 பர்மா அகதிகள் குடும்பங்களைச் சார்ந்த 20,000 அகதிகளும், 14,371 இலங்கை குடும்பங்களைச் சார்ந்த 59,178 அகதிகளும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1972-73-க்கு உபகாரச் சம்பளமாக பிரி-மெட்ரிக்குக்காக 9,228 பேர்களுக்கு ரூ. 2,21,880 அளிக்கப்பட்டுள்ளது. போஸ்ட்-மெட்ரிக்குக்காக 497 பேர்களுக்கு ரூ. 2,61,953 அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொன்றிலும் 50 மாணவர்களைக் கொண்ட புதிய அரிசன மாணவர்கள் தங்கும் விடுதி சிவகெங்கையில் ஒன்றும் 30 மாணவர்களைக் கொண்ட மற்றொரு விடுதி திருவாடனை வட்டத்திலும் திறக்கப்படவிருக்கிறது. மாவட்டத்தின் முதலாவது அரிசன மாணவர் தங்கும் விடுதியாக இது அமையும்.

### அறியாமை அகன்றிட . .

மதுரை மாவட்டத்தில் பள்ளியில் சேரத் தகுதிவாய்ந்த குழந்தைகள் 1,90,000 பேர் இருக்கின்றனர். இலவசக் கல்வி, மதிய உணவு முதலிய வசதிகள் அளித்தும், அறியாமையினால் அவர்கள் கல்வி பெற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்த அவல நிலையை மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரின் துணைகொண்டு, 1,52,494 பேர்கள் அறிவொளி பெற பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

திண்டுக்கல் வட்டத்திலுள்ள வக்கம்பட்டி கிராமத்தில் சின்னக்காளை என்பவர் கிணறு தோண்டுகையில் விபத்து ஏற்பட்டு இரு கைகளையும் இழந்து விட்டார். அவருக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து 1,000 ரூபாய் உதவிப் பணமாக வழங்கப்பட்டுள்ளது.

### கண்ணொளி வழங்கிட . .

தமிழ்நாடு அரசு கண் மருத்துவமனையைச் சார்ந்த குழுவினரால், விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கோவில் கல்யாண மண்டபத்திலும், அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியிலும் இலவசமாகக் கண் சிகிச்சை முகாம் நடத்தப்பெற்றன.

முகாமில் 2,939 ஆண்களும், 1,796 பெண்களும் பதிவு செய்து கொண்டார்கள். அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 262 ஆண்கள், 275 பெண்கள் ஆகியோருக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பெற்றது. கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 510 பேர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பெற்றது.

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறு சேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.





# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...


ஆராய்ச்சி மணி
12
கதை: இளவல்
படம்: கோபண்ணா
நடுக்காட்டில் உள்ள தனி இடத்திற்கு மணியும் மாணிக்கமும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.
இந்தப் பையன்களை இங்கு யார் கொண்டு வரச் சொன்னது? அவர்களின் கண் கட்டுகளை அவிழ்க்காமல் நம்முடைய பழைய இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
உத்தரவுப்படியே செய்கிறோம்
அப்பாவின் குரல் மாதிரி இருக்கே!
திடீரென்று காட்டுக்குள் போலீஸ்காரர்கள் புகுந்து அங்குள்ள திருட்டுக் கூட்டத்தைச் சூழ்ந்து கொள்கிறார்கள்
மாணிக்கம் உங்க அப்பா தாண்டா இந்தத் திருட்டுக் கூட்டத் தலைவர். அதோ டாக்டர் பொன்மலை உயிரோடு இருக்கிறார்டா.
எங்கப்பாதான் திருட்டுக் கூட்டத் தலைவர்னு நினைச்சா எனக்கு வெட்கமா இருக்கு! ஒரே ஷேம்! ஏண்டா மணி எங்கப்பாவை ஜெயிலிலே போடுவாங்களா?
தப்பு செஞ்சா தண்டனை கிடைக்காதா?


சென்னையில் திருஞானம் வீட்டில்...
நீ என்ன சொல்றே கயல்விழி எனக்கு ஒன்னும் புரியலையே
தங்கம், இப்பொழுது வருத்தப்பட்டு என்ன நடக்கப்போவது! நீ சொல்லிய படிதானே நான் நடந்து கொண்டேன்!
தங்கத்தின் அப்பா ஏதோ கெட்ட செயலில் இறங்கியுள்ளார் என்பது அரை குறையாகத் தெரிந்திருக்கிறது. அதை என்னிடம் சொன்னாள். மணியைப் பயன்படுத்தி நாடகமாடினேன்! சேகருக்காக தங்கத்தைக் கூட செந்தாமரைன்னு கூப்பிட்டபோதே உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே!
நம்ப வீடே துப்பறியும் கதையாகி விட்டதே! எல்லாம் எனக்குத் தெரியாமல் ஆகிவிட்டதே!
என்னுடைய துப்பறியும் பெருமைகளை ஒரு நொடியில் நீ தட்டிக் கொள்ளப்பாக்கிறியே அக்கா!
எப்படியோ எல்லாம் ஒரு வழியா முடிஞ்சுது! தங்கம் நீ கவலைப் படாதே அம்மா! நான் உனக்குத் தந்தை மாதிரி! டாக்டர் பொன்மலையும் சிகாமணி இப்படிப்பட்டவர்கள்னு நினைக்கலே... அதோ போலீஸ் அதிகாரிகளே வர்றாங்க...!
உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைச் சொல்லணும் குறிப்பாக மணியும், மாணிக்கமும் செய்திருக்கிற உதவியை மறக்கமுடியாது...
சார் இதை அக்காவிடம் சொல்லுங்க...
மணி! உங்க அக்கா செய்தி கொடுத்ததினாலேதான் சேகரைப் பிடிச்சோம்! உங்களையும் காப்பாற்றினோம். இருந்தும் மணியிலேயும் மணிதான் நீ! துப்பறியும் மணி! ஆராய்ச்சி மணி!
டேய் ஆராய்ச்சி மணின்னு உன்னைச் சொன்னதினாலே எல்லாவற்றையும் பிரிச்சுப் போட்டு ஆராய்ச்சி பண்றியா?
வாலு! இப்போ வேறே வேலை இல்லையே அதனாலேதான் இப்படி! அதோ அக்கா வர்றாங்க... எல்லாவற்றையும் ஒழுங்கா மறைச்சு வை.
இரண்டு பேரும் என்னத்தை மறைக்கிறீங்க...?
மணி ஆராய்ச்சி பண்றதும் உங்களிடம் மறைக்கிறேன்.
உங்கள் துப்பறியும் வேலை முடிஞ்சு போச்சு! காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக! இனிமேல் ஒழுங்காப் படியுங்க! உயர்வடைய அதுதான் வழி.



# காவலர்க்கு ஒரு மருத்துவ மனை

தமிழகத்தின் தலைநகரம் சென்னை. அதனால் பல மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வருவோர் போவோர் தொகை ஏராளம். அதுமட்டுமல்ல, வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து பணிபுரிவோரின் தொகையும் மிக அதிகம். அதனால்தான், சென்னை நகரில் அரசினரின் மருத்துவ மனைகள் எத்தனையோ இருந்தபோதிலும், மருத்துவ மனைகளில் எந்த நேரமும் மக்கள் வெள்ளம் காட்சி தந்து வருகிறது. சென்னையைப் பொறுத்த வரையில், பொது மக்களுக்காகப் பல மருத்துவ மனைகள் உள்ளன. தொழிலாளர்களின் நலன் பேணுவதற்கு அரசின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் இ.எஸ்.ஐ. மருத்துவமனையும், மருந்தகங்களும் உள்ளன.

உள் நாட்டுப் பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கும் காவல் துறையினர்களின் நலனுக்காகச் சென்னையில் நகரக் காவலர் மருத்துவ மனை ஒன்று எழும்பூரில் இயங்கி வருகிறது. நீண்ட காலமாகக் காவல் துறையினரின் மருந்தகமாக இருந்த ஒரு நிலையம் 1963-ஆம் ஆண்டு முதல் மருத்துவ மனையாகத் திகழ்கிறது. காவல் துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் தீயணைப்புத் துறையினரும் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெறலாம்.

காவல் துறையினர் இந்த மருத்துவ மனைக்குத்தான் சிகிச்சைக்காக வரவேண்டும். காவல் துறையைச் சேர்ந்த ஒருவர், இந்த மருத்துவ மனைக்கு வருவதற்குக்கூட முடியாத நிலையில் தங்கள் இல்லத்துக்கு அருகில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டால், அந்தத் தகவலை, அவரது உறவினர்கள், இந்தக் காவலர் மருத்துவமனைக்குத் தெரிவிக்க வேண்டும்.

பொதுவாக, நோய்வாய்ப்பட்ட காவல் துறையினரை விரைவில் அலுவலுக்குத் தகுதியானவர்களாக்குவது இந்த மருத்துவமனையின் அருந் தொண்டாகும்.

காவல் துறைதான் இந்த மருத்துவ மனைக்குத் தேவைப்படும் பணச் செலவைச் செய்து வருகிறது.

இந்த மருத்துவமனையில் புற நோயாளர் பிரிவு, உள்ளிருப்பு நோயாளர் பிரிவு இரண்டும் இருக்கிறது. புறநோய்ப் பிரிவு காலை 8-30 மணியிலிருந்து 12-30 மணிவரையிலும் மாலை 3-30 மணியிலிருந்து 4-30 மணி வரையிலும் பணி புரிகிறது. நாள்தோறும் 350 ஆண்கள், 300 பெண்கள், குழந்தைகள் இந்தப் பகுதிக்கு வருகை புரிகிறார்கள்.

இங்குள்ள உள்ளிருப்பு நோயாளர் பிரிவில் 30 படுக்கைகள் உள்ளன. என்றாலும் நாளொன்றுக்குச் சராசரி 45 உள்ளிருப்பு நோயாளிகள் உள்ளனர். பெண்கள், ஆடவர்கள், சிறுவர்கள், ஆகியோருக்குத் தனித் தனி வார்டுகள் உள்ளன. மகப் பேற்றுப் பிரிவும் இங்கே உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 65 மகப் பேறுகள் இங்கு நடைபெற்றிருக்கின்றன.

இங்கே அறுவை அரங்கம் ஒன்று உள்ளது. இது அண்மையில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. வாசக்டமி, ஹெர்னியா, ஹைடிரசல் போன்ற சிறு அறுவைச் சிகிச்சைகள் இங்கே நடைபெறுகின்றன.

மருந்தினால் குணமாகும் எல்லா வித நோய்களுக்கும் இங்கே சிகிச்சை தரப்படுகிறது. மருத்துவத் துறையினர் விநியோகிக்கும் மருந்துகளைத் தவிர, வேறு அவசியமான மருந்துகளை வெளிச் சந்தைகளிலிருந்தும் விலைக்கு வாங்கிப் பயன்படுத்துகின்றது இந்த மருத்துவமனை. இந்த மருந்துகள், உள்ளிருப்பு நோயாளிகளுக்கும் புற நோயாளிகளுக்கும் கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக இங்கு வரும் நோயாளிகள் நீண்ட நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லாமல், மிகக் குறைந்த நாள் சிகிச்சையிலேயே நலம் பெற்று விரைவில் தங்கள் பணிகளைச் செய்ய முடிகிறது.

சிக்கலான பிரச்சினைகள் உள்ள நோயாளிகள் பொது மருத்துவ மனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகிய மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இங்கு இ.சி.ஜி. (E.C.G.) இயந்திரம் உள்ளது. இதய நோய் உள்ளவர்கள், அந்நோய் பற்றி அறிந்துள்ள சிறப்பு

மருத்துவர்களிடம் அனுப்பப்படுவதற்கு முன்னர்த் தேவைப்படும் இ. சி. ஜி. இங்கே எடுக்கப்படுகிறது.

எக்ஸ்-ரே பகுதியும் இந்த மருத்துவ மனையில் உண்டு. சாதாரணமாக எக்ஸ்-ரே மட்டும் தான் உண்டு. வேறு நவீன வகை—சிறப்பு வகை எக்ஸ்ரேக்கள் இங்கே கிடையாது. ஆண்டொன்றுக்கு 1,500 எக்ஸ்-ரேக்கள் எடுக்கப்படுகின்றன.

இங்கு ஓர் ஆய்வுக்கூடமும் உள்ளது. ஆய்வுக்குரிய வசதிகள் இங்கு அண்மையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற முதனிலைத் தொழில் நுணுக்கர் இங்குப் பணிபுரிகிறார்.

இந்த மருத்துவ மனையில் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று இருக்கிறது. இது சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கத்தாரால் அன்பளிப்பாகத் தரப்பட்டதாகும். அவசரச் சிகிச்சைகளுக்கும் சிக்கலான பிரச்சினைகளைச் சமாளிக்கச் சிறப்பு மருத்துவர்களிடம் நோயாளிகளை அழைத்துச் செல்வதற்கும் இந்த ஆம்புலன்ஸ் கார் பயன்படுகிறது.

இந்த மருத்துவ மனையில் 4 டாக்டர்களும், ஒரு சிவில் சர்ஜனும், மூன்று சிவில் உதவி சர்ஜன்களும், 5 செவிலியர்களும், 4 மருந்தகப் பணியாளர்களும், ஒரு ரேடியோகிராபரும், ஆய்வுக் கூடத் தொழில் நுணுக்கர் ஒருவரும், 5 ஆண் உதவி நர்சுகளும் 2 பெண் உதவி நர்சுகளும், மகப்பேறு உதவியாளர்களும் பணிபுரிகிறார்கள். இங்குப் பணிபுரியும் டாக்டர்களும், செவிலியர்களும் நல்வாழ்வுத்துறை இயக்குநரால் நியமிக்கப்பட்டுக் காவல் துறை ஆணையரின் கீழ்ப் பணியாற்றுகிறார்கள்.

இங்குப் புறநோயாளர் பிரிவில் பணி செய்யும் டாக்டர்கள், புறநோய்ப் பிரிவு நேரம் முடிந்தவுடன், உள்ளிருப்பு நோய்ப் பிரிவுகளுக்குச் சென்று பணியாற்றுகின்றனர். அதுமட்டுமல்ல, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காவல் துறை பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர்களின் உடல் நலனையும் அடிக்கடி கவனிக்கிறார்கள். பயிற்சிப் பள்ளியின் நலத்துறை வசதிகளையும் ஆய்வு செய்கிறார்கள்.

இந்த மருத்துவ மனை இன்னொரு முக்கியமான பணியையும் செய்துவருகிறது. நகரத்தில் திரிகின்ற பிச்சைக்காரர்கள், காவல் துறையினரால் இந்த மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அந்தப் பிச்சைக்காரர்கள் காப்பு இல்லங்களுக்கும், தொழுநோயாளர் இல்லங்களுக்கும், பணிபுரியும் நிலையங்களுக்கும் அனுப்பப்படுவதற்கு முன்னர் இந்த மருத்துவ மனையில் தான்—மருத்துவர்களால் அத்தாட்சி பெறுகின்றார்கள். எந்தப் பிச்சைக்காரர் எங்கே அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்பதை இங்குள்ள டாக்டர்கள் நிச்சயம் செய்கிறார்கள்.

தினமும் பத்துப் பதினைந்து சிறுவர்கள் இந்த மருத்துவ மனைக்கு அழைத்து வரப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் யார் தெரியுமா இளங்குற்றவாளிகள்! அவர்கள் இளைஞர்கள் தாமா, எத்தனை வயதிருக்கலாம் என்பதையெல்லாம் நிர்ணயம் செய்வது இந்த மருத்துவமனையின் தொண்டுதான்.

—த.பி.

நல்வாழ்த்துக்கள்

தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட்,
கோயம்புத்தூர்-18.

தரத்தில் சிறந்த
ஸ்டேபிள் பைபர்...
ரேயான் நூல்.....
மரக்கூழ்........
தயாரிப்பாளர்கள்

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக